March 2022
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
13ம் ஆண்டில்
CELEBRATING
13
ANNIVERSARY

13

தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

THANK YOU

iதமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

March 2022

சுவடி — 12
ஓலை — 1

வணக்கம் பல

புதியதோர் உலகம் செய்வோம்! —கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்!'

பாவேந்தர் பாடி அரைநூற்றாண்டுக்கு மேல் ஆகியும் அதை மீண்டும் மீண்டும் பாடக் கூடியநிலைதான்! மனித சமுதாயம் உயர்வு பெற வேண்டிய நிலையில்தான் இருக்கிறது எனும்போது, விஞ்ஞானம் ஆயிரம்தான் கண்டுபிடித்தாலும், மெய்ஞ்ஞானம் தோன்றுவது எந்நாளோ? ஏக்கம் விழையத்தான் செய்கிறது. உக்ரைன் மீது போர் தொடுத்திருக்கும் ரஷ்யா, எப்படித்தான் நியாயங்களைக் கற்பித்தாலும், உலகநாடுகளின் வேண்டுகோள்களைப் புறந்தள்ளி, மக்களின் துயருக்குக் காரணமான போரை முன்னெடுத்திருப்பது நிச்சயமாகக் கண்டிக்கத்தக்கது! ஒரு வல்லரசு நாடு தன்னுடைய ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக உலக நாடுகளையெல்லாம் துச்சமென மதித்து நடந்துகொள்வதும், அதனை வல்லரசு எனக் கூறிக் கொள்ளும் நாடுகள், கண்டும் காணாதிருப்பதும் எவ்வகையில் நியாயம்?

'அரசன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே!' என்று நம் முதுமொழிக்கு எதிராக ரஷ்ய மக்கள் கிளர்ந்தெழுவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அரசின் நிலை எல்லை தாண்டிவிட்டது என்றாலும், விரைவாகத் தீர்க்கப்பட வேண்டும் என்ற முனைப்புடன் உலக நாடுகள் செயல்பட வேண்டும். ரஷியாவும் தன்னுடைய கட்டுப்பாட்டை இழந்து விடாமல் தார்மீகப் பொறுப்பை உணர்ந்து நடக்கவேண்டும். பெரும் நோய்த் தொற்றிலிருந்து மீண்டு இயல்பு நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றபோது, இப்படியொரு போர் உலகைத் தொற்றிவிடக் கூடாது. வல்லரசுகள் தங்களது வலிமையைக் காட்டுவதற்கு இப்போரை ஒரு துவக்கப் புள்ளியாகக் கொள்ளக் கூடாது. விரைவில் இப்போர் முடிவுக்கு வரும் என்று திடமாக நம்புவோமாக!

நமது 'அய் தமிழ்' இவ்விதழ் வாயிலாக பதின்மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. பல்வேறு கலை இலக்கியப் படைப்புகளோடும் ஆளுமைகளோடும் பயணித்து வரும் 'அய் தமிழ்' தொடர்ந்து, தமிழ்கூறு நல்லுலகிற்கு தம் கொடையினை வழங்கி, இணைய இதழ்களில் சிறந்ததொரு சாதனையினை நிகழ்த்தி கொண்டிருக்கிறது. சரித்திரச் சுவடைப் பதிக்கும் இப்பொன்னான நேரத்தில் 'அய் தமிழை' வாழ்த்துங்கள்!... வரவேற்று மகிழுங்கள்!...

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

உள்ளே...

மணி கட்டுவோம்!

நாட்டுக்காக நான்!

மீண்டுவா தருமி!
நவரச நகை!

தமிழே தமிழே

சேரமான் கனவு

அறிவோம் தமிழர் பெருமை

சிவகாமியின் சபதம்

யோக யாகம்!

மருத்துவ தமிழ்

சினம் தவிர்ப்போம்

IThamil Monthly Magazine

Chief Editor & Publisher
Sivanesan

Editor
Khottravan

Editorial Team
Ganesan
Navani
Shanthakumar

Art Editor
Sriram

Art & Marketing Director
Jaya

Printers
Kanagam Pathippagam

Contact us:
editor@ithamil.com

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

மணி

ரஷ்ய படையெடுப்பு: யுக்ரேனின் எதிர்காலம் என்ன?

கிழக்கு உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதலைத் தொடங்கியுள்ள நிலையில், உக்ரைனின் விமானப்படை தளங்களை அழித்துவிட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அண்மைத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் மீது தாக்குதலைத் தொடங்கிய ரஷ்யாவுக்கு உலக நாடுகள், குறிப்பாக மேற்கத்திய நாடுகள் தங்களின் கண்டனங்களை பதிவு செய்துவரும் சூழலில், "உக்ரைனின் ராணுவ கட்டமைப்புகளை மட்டுமே குறிவைத்து பிரத்யேக ஆயுதங்கள் மூலம் திட்டமிட்டு தாக்குதல் நடத்துகிறோம். பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளைத் தாக்கவில்லை" என்று ரஷ்யா தெரிவித்தது. இந்நிலையில், கடைசியாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "உக்ரைன் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த விமானப்படை தளங்களை முற்றிலுமாக அழித்துவிட்டோம். அதன் வான்வழித் தாக்குதல் கட்டமைப்புகள் அழிக்கப்பட்டுவிட்டன" என்று தெரிவித்துள்ளது.

முன்னதாக, ரஷ்யாவின் 5 விமானங்களை வீழ்த்தியதாக உக்ரைன் அறிவித்தது. உக்ரைன் உள்துறை அமைச்சர் ஆன்டன் கெராஸ்சென்கோ அந்த அறிவிப்பை வெளியிட்ட சில நிமிடங்களிலேயே "உக்ரைன் விமானப்படை கட்டமைப்புகளை வீழ்த்திவிட்டோம்" என்ற அறிவிப்பை ரஷ்யா வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில், 100—க்கும் மேற்பட்ட தங்களின்

கட்டுவோம்!

ராணுவ வீரர்கள் உயிரிழந்துவிட்டதாக உக்ரைன் தரப்பு தெரிவித்துள்ளது. ஏற்கெனவே ரஷ்யா தனது தாக்குதல் திட்டம் பற்றி மேலோட்டமாகக் கூறியது. அதில், "ராணுவ கட்டமைப்புகள், ஏர்பேஸ், துறைமுகங்கள்தான் எங்களின் இலக்கு" என்று கூறியிருந்தது. தற்போது துறைமுகங்களைக் குறிவைத்து ரஷ்யா தாக்குதலை ஆரம்பித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனை

செர்னோபிள் அணு விபத்துத் தளத்தை ரஷ்ய ராணுவம் கைப்பற்றியுள்ள நிலையில், ரஷ்யா படையெடுப்பை தொடர்ந்தால், அத்தகைய பேரழிவு மீண்டும் நடக்கும் என, யுக்ரேன் அதிபர் எச்சரித்துள்ளார். ரஷ்யா மீதான கூடுதல் தடைகள் பற்றிய விவரத்தை அறிவித்த அமெரிக்க அதிபர் ஜோ பைடன், யுக்ரேனுக்கு அமெரிக்க படைகளை அனுப்பப் போவதில்லை என்றும்

"முற்றிலும் அர்த்தமற்ற தாக்குதல்" என கூறியுள்ள யுக்ரேன் அதிபரின் ஆலோசகர் மிக்கைலோ பொடாலியாக், "இன்று ஐரோப்பாவில் நிகழும் தீவிரமான அச்சுறுத்தல்களில் ஒன்று" என தெரிவித்தார். செர்னோபிள் அணு உலையில் 1986ம் ஆண்டு நிகழ்ந்த விபத்து, மனித வரலாற்றில் பெரும் பொருட்சேதம் மற்றும் உயிரிழப்புகளை ஏற்படுத்திய மோசமான அணு விபத்தாகும்.

தெளிவுபடுத்தினார்.

"அமெரிக்க படைகள் யுக்ரேனில் போரிட ஐரோப்பாவிற்குச் செல்லவில்லை, மாறாக நேட்டோ நட்பு நாடுகளைப் பாதுகாக்கவும், கிழக்கில் உள்ள அந்த நட்பு நாடுகளுக்கு நம்பிக்கை

அளிக்கும் வகையில் கண்காணிப்பில் ஈடுபடவும் அனுப்பப்பட்டுள்ளன" என்று பைடன் தெரிவித்தார்.

"அமெரிக்க சக்தியின் முழு பலத்துடன் நேட்டோ பிரதேசத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் அமெரிக்கா பாதுகாக்கும். நேட்டோ முன்னெப்போதையும் விட ஒற்றுமையாக

இருப்பதாக தான் நம்புவதாகவும், அமெரிக்காவும் பிற நேட்டோ நாடுகளும் தங்களுடைய ஒப்பந்த கடமைகளை நிறைவேற்றும் என்பதில் சந்தேகமில்லை" என்றும் பைடன் தெரிவித்தார்.

பால்டிக் பகுதியில் உள்ள லாத்வியா, எஸ்டோனியா, லித்துவேனியா, போலந்து மற்றும் ரூமேனியா உட்பட ரஷ்யாவால் அச்சுறுத்தலுக்கு ஆளாகும் கிழக்கு ஐரோப்பாவில் உள்ள நேட்டோ நாடுகளுக்கு ஆயிரக்கணக்கான அமெரிக்க தரைப்படை மற்றும் பிற படைகள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் அதிபர் ஜோ பைடன் கூறினார். வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய ஜோ பைடன், ரஷ்யா மீதான கூடுதல் தடைகள் பற்றி விளக்கினார். அதன் விவரம்:டாலர்கள், யூரோக்கள், பவுண்டுகள், யென் போன்றவை மூலம் வணிகம் செய்யும் ரஷ்யாவின் திறனைக் கூட்டாகக் கட்டுப்படுத்த முடிவெடுத்த நி7 தலைவர்களுடன் தாமும் உடன்படுவதாக அதிபர் பைடன் கூறினார்.

ரஷ்யாவின் நிதியுதவி மற்றும் ராணுவத்தை வளர்க்கும் திறனை இனி அமெரிக்கா தடுத்து நிறுத்தும். 21ஆம் நூற்றாண்டின் உயர் தொழில்நுட்ப பொருளாதாரத்தில் போட்டியிடும் ரஷ்யாவின் திறனை இந்த தடைகள் குறைக்கும். ரஷ்ய ரூபிள் பண மதிப்பு மிக, மிக மோசமான நிலையை அடையும். ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு பிறகு ரஷ்ய பங்குச் சந்தை இன்று வீழ்ச்சியடைந்ததையும் அதிபர் பைடன் சுட்டிக்காட்டினார்.

"ஒரு ட்ரில்லியன் டாலர்கள் அளவுக்கு சொத்துக்களை வைத்திருக்கும் ரஷ்ய வங்கிகள் மீது இப்போது தடைகளை விதிக்கிறோம்" என்று பைடன் கூறினார். "நாங்கள் ரஷ்யாவின் மிகப்பெரிய வங்கிகளில் ஒன்றை ஏற்கெனவே சர்வதேச நிதி விவகாரங்களில் தலையிடாத வகையில் துண்டித்துவிட்டோம். அந்த வங்கி அந்நாட்டின் வங்கிச் சொத்துக்களில் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது," என பைடன் தெரிவித்தார்.

"அமெரிக்காவும் ரஷ்யாவும் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்ள ஆரம்பித்தால், அது ஓர் உலகப்போர் தான்," என்று கடந்த மாதம் குறிப்பிட்ட அமெரிக்க அதிபர் ஜோ பைடன், தாம் எந்தச் சூழலிலும் அமெரிக்கத் துருப்புகளை யுக்ரேனுக்கு அனுப்பப் போவதில்லை என்று தெரிவித்தார். ஆனால் மேற்கத்திய தலைவர்கள், ரஷ்யா யுக்ரேனை முழுதாக ஆக்கிரமிக்கக் கூடும் என்று அஞ்சுகிறார்கள்.

யுக்ரேன் – ரஷ்யா போர் பதற்றம் ஏன்?

உக்ரைன் கிழக்கு எல்லைப் பகுதியில், ரஷ்யா சுமார் 1,00,000 படையினரை நிறுத்தியுள்ளது. நவீன ரக பீரங்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களையும் ரஷ்யா நிலை நிறுத்தியுள்ளது. படையினரை

நிலைநிறுத்தியது தொடர்பாக இதுவரை ரஷ்யா போதிய விளக்கமளிக்கவில்லை என்றும் கூறியுள்ளது அமெரிக்கா. மேலும், உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தால் தக்க பதிலடி கொடுக்கப்படும் என அமெரிக்கா கூறியுள்ளது. சில மேற்குலக நாடுகளைச் சேர்ந்த உளவு அமைப்புகள், 2022ஆம் ஆண்டில் ரஷ்யா உக்ரைன் மீது படையெடுக்கலாம் என்றும் கூறியுள்ளன.

மேலும் நேட்டோ நாடுகளும், அமெரிக்காவும் உக்ரைனில் ஆயுதங்களைக் குவித்து, ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையிலான பதற்றத்தை அதிகரிப்பதாக ரஷ்ய குற்றம் சாட்டியுள்ளது. ரஷ்யாவோ, உக்ரைன் மீது படையெடுக்கும் திட்டம் எதுவும் தங்களுக்கு இல்லை என்று கூறிவருகிறது.

1990கள் வரை உக்ரைன் சோவியத் ஒன்றியத்தின் ஓர் உறுப்பு நாடாகத்தான் இருந்தது. அதற்குப் பின் சோவியத் சிதைந்தபோது, சுதந்திரம் பெற்று தனி நாடாக தங்களுக்கென புதிய அரசமைப்புச் சட்டத்தோடு செயல்பட்டு வருகிறது. இப்போதும் உக்ரைன் தன் எல்லைகளை ரஷ்யாவோடும், ஐரோப்பிய ஒன்றியத்தோடும் பகிர்ந்து கொள்கிறது. ஆனால் கலாசார ரீதியிலும் சமூக ரீதியிலும் ரஷ்யாவோடு பல தொடர்புகளைக் கொண்டுள்ளது உக்ரைன். இப்போதும் ரஷ்ய மொழி பேசுவோர் கணிசமாக உக்ரைனில் வாழ்ந்து வருகின்றனர்.

2014ஆம் ஆண்டு ரஷ்யாவுக்கு ஆதரவாக இருந்த அதிபர் விக்டர் யனுகொவிச் (Viktor Yanukovych) பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதற்கு பதிலடி கொடுக்கும் விதத்தில், உக்ரைனின் தெற்குப் பகுதியில் உள்ள கிரீமிய தீபகற்பத்தைக் கைப்பற்றியது ரஷ்யா. மேலும் கிழக்கு உக்ரைனில் கணிசமான பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவளித்தது ரஷ்யா. இது தான் ரசோ — யுக்ரேனியன் (Russo-Ukrainian) போராக உருவெடுத்தது. பிரிவினைவாதப் போராளிகளுக்கும் உக்ரைன் ராணுவத்துக்கும் இடையிலான போரில் இதுவரை 14,000த்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இப்போதும் போர் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

மின்ஸ்க் ஒப்பந்தம்

2015ஆம் ஆண்டு உக்ரைனின் அப்போதைய அதிபர் பெட்ரோ பொரொஷென்கோ — ரஷ்யாவின் விளாதிமிர் புதின் இடையில் ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது. அது தான் மின்ஸ்க் ஒப்பந்தம் என்றழைக்கப்படுகிறது. உக்ரைன் மற்றும் ரஷ்ய ஆதரவோடு கிழக்கு உக்ரைனில் இருக்கும் பிரிவினைவாதப் படைகளுக்கு இடையிலான பிரச்சனையைத் தீர்ப்பது இந்த ஒப்பந்தத்தின் நோக்கம். அதன் பிறகு 20க்கும் மேற்பட்ட முறை போர் நிறுத்தத்தைக் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, ஆனால் அனைத்து முயற்சிகளும் பயனற்றுப் போயின. தொடர்ந்து எல்லையில் இரு தரப்பு படையினரும் கொல்லப்பட்டு வருகின்றனர்.

ரஷ்யா, உக்ரைன் இருநாடுகளுமே கிழக்கு உக்ரைன் பிரதேசத்தைக் குறித்து தங்களுக்கென தனித்தனிப் பார்வையைக் கொண்டுள்ளன. அது ஒன்றோடொன்று ஒத்துப்

போகாமல் இருக்கிறது என்கிறார் சதம் ஹவுஸ் அசோசியேட் ஃபெல்லோவான டன்கன் ஆலன்.உக்ரைன் தன் நிலப்பரப்புகளை மீண்டும் தன் நாட்டோடு இணைக்கவும், தன் இறையாண்மையை நிலைநிறுத்தவும் விரும்புகிறது, ஆனால் ரஷ்யாவோ, கிவ் நகரத்தில் உள்ள அதிகாரிகளைக் கட்டாயப்படுத்தி கிழக்கு உக்ரைன் பகுதிக்கு சிறப்பு அந்தஸ்து அல்லது தன்னாட்சி அதிகாரத்தைப் பெற முயல்வதாக டன்கன் ஆலன் கருதுகிறார்.

உக்ரைன் உள்நாட்டுத் தேர்தலை நடத்தவில்லை என்றும், கிழக்கு உக்ரைனுக்கு சிறப்பு அந்தஸ்து கொடுக்காமல் அலைக்கழிப்பதாகவும் ரஷ்யா குற்றம்சாட்டியுள்ளது. ஆனால் உக்ரைன் அரசாங்கமோ, கிழக்கு உக்ரைனுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிவிட்டதாகக் கூறுகிறது. மின்ஸ்க் ஒப்பந்தத்தின் படி, உக்ரைன் தன் நிலப்பரப்புகளை ரஷ்யாவிடமிருந்து முழுமையாக பெறுவதற்கு முன், உள்நாட்டில் தேர்தலை நடத்த வேண்டும்.

கிழக்கு உக்ரைனில் தேர்தல்களை நடத்த வேண்டும் என்றால், அப்பகுதி முதலில் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வர வேண்டும் என வலியுறுத்துகிறது உக்ரைன். இல்லை எனில் தேர்தல் ரஷ்யாவின் அழுத்தத்தின் கீழ் நடைபெறும் என உக்ரைன் தரப்பு கூறுகிறது.உள்ளூர் அளவிலான தேர்தல்களை நடத்தாமல் உக்ரைன், கிழக்கு உக்ரைன் பகுதிகளைப் பெற அனுமதிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ரஷ்யா கடுமையாக எச்சரித்தது.

உக்ரைனின் இறையாண்மையைக் கட்டுப்படுத்த நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணையக் கூடாது என புதிய வாதத்தையும் முன் வைத்துள்ளது ரஷ்யா. மேலும் நேட்டோ அமைப்பு கிழக்கு நோக்கி முன்னேறுவதை நிறுத்துவது தொடர்பாக முறையாக உறுதியளிக்க வேண்டும் என்றும் தன் வாதங்களை முன் வைத்துள்ளது ரஷ்யா.மேற்குலகத்தின் அதிரடி போக்குகள் தொடர்ந்தால் ராணுவ ரீதியில் தக்க பதிலடி கொடுக்கப்படும் என ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதின் சமீபத்தில் எச்சரித்ததும் இங்கு நினைவுகூரத்தக்கது.ரஷியாவுக்கு எதிரான போரில் உக்ரைன் தனித்து விடப்பட்டதாகவும் உதவி கேட்டும் எந்த உலக நாடுகளும் உதவவில்லை என்றும் உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி வேதனை தெரிவித்துள்ளார். நேட்டோ ராணுவ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த ரஷியா, உக்ரைன் எல்லையில் சுமார் 1.50 லட்சம் ராணுவ வீரர்களை குவித்ததால் எந்த நேரமும் போர்ச் சூழல் உருவாகும் அபாயம் இருந்து வந்தது. அதன்படி, உக்ரைன் மீது ராணுவ நடவடிக்கைளை மேற்கொள்ள ரஷிய அதிபர் விளாதிமிர் புதின் வியாழக்கிழமை உத்தரவிட்டதை அடுத்து, ரஷியப் படைகள், உக்ரைனில் போர் தொடுக்கத் தொடங்கியுள்ளன. நேற்று தலைநகர் கீவ் வரை ரஷிய படைகள் முன்னேறியுள்ளன. இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்தத் தாக்குதலுக்கு ஐ.நா., அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் மற்றும் உலகின் பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. போரை நிறுத்தவும் பல நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில் உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி வியாழக்கிழமை இரவு மக்களிடம் உரையாற்றினார். அப்போது உக்ரைன் நாடு தனித்து விடப்பட்டு விட்டதாகவும் உக்ரைனுக்கு உதவ யாரும் தயாராக இல்லை என்றும் வேதனை தெரிவித்துள்ளார்.

'ரஷியாவுக்கு எதிராக உக்ரைன் தனித்துப் போரிட்டு வருகிறது. உக்ரைனுக்கு உதவ எந்த நாடுகளும் இல்லை. ரஷிய படைகளை எதிர்கொள்வதில் உக்ரைன் தனித்து விடப்பட்டு விட்டது. உக்ரைனுடன் சேர்ந்து ரஷியாவை எதிர்கொள்ள யாராவது இருக்கிறார்களா என்றால் யாரும் இல்லை என்பதுதான் பதில். இதுவரை நேட்டோ அமைப்பு உள்ளிட்ட 27 நாடுகளிடம்

கேட்டுக்கொண்டேன். ஆனால், யாரும் உதவிக்கு வரவில்லை. நேரடியாக பல நாட்டின் தலைவர்களையே தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன். யாரிடமும் பதில் இல்லை. அவர்கள் ரஷியாவுக்கு அஞ்சுகிறார்கள். ஆனால் உக்ரைன் எதற்கும் அஞ்சவில்லை; ரஷியாவிற்கு அஞ்சவில்லை.

எங்களுடன் போரிட யார் தயாராக இருக்கிறார்கள்? யாரும் இல்லை.

நேட்டோவில் உக்ரைன் இணையத் தயாராக இருந்தது. இப்போது நேட்டோவில் உக்ரைனை உறுப்பினராக்க யார் தயாராக இருக்கிறார்கள்? நேட்டோ அமைப்பில் இந்த நிமிடம் வரை உக்ரைன் உறுப்பினர் இல்லை. அந்த அமைப்பினர் இதுவரை உதவவில்லை. அவர்கள், உக்ரைன் மக்களுக்கு என்ன உத்தரவாதம் தர முடியும்? நேட்டோவில் இணைப்பதாக கூறிய நாடுகள் அனைத்தும் இன்று அச்சத்தில் இருக்கின்றன. ரஷிய படைகள் முதலில் என்னையும் என் குடும்பத்தையும் குறிவைத்துள்ளன. நாங்கள் தலைநகர் கீவில்தான் இருக்கிறோம்' என்று உருக்கமாக பேசியுள்ளார்,

மேலும், 'ரஷியா நடத்திய முதல்நாள் தாக்குதலில் 137 உக்ரைன் ராணுவ வீரர்கள் பலியாகியுள்ளனர். 316 பேர் காயமடைந்துள்ளனர்' என்றார்.'ரஷியாவை தனிமைப்படுத்துங்கள்': உலக நாடுகளுக்கு உக்ரைன் அமைச்சர் வேண்டுகோள் உலக நாடுகள் ரஷியாவைத் தனிமைப்படுத்த முன்வர வேண்டும் என உக்ரைன் நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ரஷியா — உக்ரைன் இடையேயான போர் கடந்த 3 தினங்களாக நடைபெற்று வருகிறது. உக்ரைன் நாட்டின் மீது தரைப்படை, விமானப்படை, கப்பற்படை என மும்முனைத் தாக்குதலை ரஷியா மேற்கொண்டு வருகிறது. தலைநகர் கிவ்விற்குள் ரஷியப் படைகள் நுழைந்துள்ள நிலையில் உக்ரைன் படைகள் தொடர்ந்து போரிட்டு வருகின்றன. இந்நிலையில் கிவ் மாகாணத்தில் ரஷியப் படைகள் நடத்தி வரும் தாக்குதலால் சேதமடைந்த கட்டடங்களின் புகைப்படங்களைப் பகிர்ந்து உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா தனது சுட்டுரைப் பதிவின் மூலம் உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதில் அவர், "எங்கள் அழகான, அமைதியான நகரமான கிவ், ரஷிய தரைப்படை மற்றும் ஏவுகணைகளின் தாக்குதலில் மற்றொரு இரவைக் கழித்துள்ளது. அவர்களின் ஏவுகணைகளில் ஒன்று கிவ்வில் உள்ள அடுக்குமாடி கட்டிடத்தில் மோதியது. ரஷ்ய கூட்டமைப்பை முற்றிலுமாக தனிமைப்படுத்த உலகை நான் கோருகிறேன். அவர்களின் தூதர்களை தங்களது நாடுகளிலிருந்து வெளியேற்றியும், அவர்களுடனான எண்ணெய் வர்த்தகத்தை தடை செய்தும் உலக நாடுகள் ரஷியாவை தனிமைப்படுத்த முன்வர வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக உக்ரைன் அதிபர்

வொலோதிமீர் ஸெலென்ஸ்கி தங்களுடைய ராணுவம் சரணடையவில்லை எனவும், தொடர்ந்து போரிட தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ரஷ்ய படையெடுப்பிலிருந்து யுக்ரேன் தன்னை பாதுகாத்துக்கொள்வது

எவ்வளவு கடினம்? ரஷ்ய ஆயுதப் படைகள் யுக்ரேன் படைகளை ஒப்பிடும்போது மிக வலிமையானது. மேலும் ரஷ்யாவிடம் அதிக அளவு ராணுவ தளவாடங்களும், விமானப்படை வலிமையும் உள்ளன. ரஷ்ய ஆயுதப் படைகள் யுக்ரேன் படைகளை ஒப்பிடும்போது மிக வலிமையானது. மேலும் ரஷ்யாவிடம் அதிக அளவு ராணுவ தளவாடங்களும், விமானப்படை வலிமையும் உள்ளன. ரஷ்யாவின் தாக்குதல் தொடங்கியுள்ள நிலையில், யுக்ரேன் தன்னை தற்காத்துக் கொள்வது எவ்வளவு கடினமாக இருக்கும்? ரஷ்யாவின் ஆயுதப் படைகளில் அதிபர் புதின் செய்துள்ள குறிப்பிடத்தக்க முதலீடு மற்றும் நவீனமயமாக்கலுக்குப் பிறகு அதன் வலிமை, யுக்ரேன் படையைக்காட்டிலும் மிக அதிகமாக உள்ளது.

"யுக்ரேனியர்கள் மிகவும் கடினமான சூழலில் இருப்பதாக நான் நினைக்கிறேன்."என்று ராயல் யுனைடெட் சர்வீசஸ் இன்ஸ்டிடியூட் டாக்டர் ஜாக் வாட்லிங் கூறுகிறார். அவர் சமீபத்தில்தான் யுக்ரேனில் இருந்து திரும்பி வந்துள்ளார். நாட்டின் ராணுவத் தலைவர்கள் இப்போது "மிகக் கடினமான தேர்வுகளை" எதிர்கொள்வதாகக் அவர் கூறுகிறார்.

யுக்ரேனின் எல்லையில் ரஷ்யா ஒரு லட்சத்து 90 ஆயிரம் துருப்புகளை நிறுத்தியுள்ளதாக மேற்கத்திய நாடுகளின் அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர் . யுக்ரேனின் முழு ராணுவத்தின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 600 மட்டுமே.ரஷ்ய படைகள் ஏற்கனவே பல திசைகளில் இருந்து எல்லையை கடந்து வருகின்றன. வடக்கில் பெலாரூஸ் முதல் தெற்கே கிரைமியா வரை,யுக்ரேன் தனது எல்லையின் ஆயிரக்கணக்கான மைல்களை பாதுகாப்பது கடினமாக இருக்கும்.யுக்ரேனை ஒரு கடிகார முகமாக நீங்கள் கற்பனை செய்தால், ரஷ்யர்கள் 10 மணி முதல் 7 மணி வரை உள்ள இடங்களில் இருந்து தாக்குதல்களை நடத்தலாம்.

இன்டர்நேஷனல் இன்ஸ்டிடியூட் ஃஃப் ஸ்ட்ராடஜிக் ஸ்டடீஸ் (ஐஐஎஸ்எஸ்) மற்றும் முன்னாள் பிரிட்டிஷ் ராணுவப் பிரிகேடியருமான பென் பாரி, இது " தற்காப்பு பணியில் உள்ளவருக்கு மிகவும் கடினமான நிலை" என்கிறார்.அதோடு யுக்ரேன் பல திசைகளில் அச்சுறுத்தப்பட்டு வருகிறது. மேலும் அவர்களின் படைகள் "ஆங்காங்கே மிகவும் குறைவான எண்ணிக்கையில்தான் உள்ளன," என்று ராயல் யுனைடெட் சர்வீசஸ் இன்ஸ்டிடியூட் (ஸிஹிஷிமி) யின் ஜாக் வாட்லிங் கூறுகிறார்.

வானத்தில் ரஷ்யாவின் ஆதிக்கம்

ரஷ்ய மற்றும் யுக்ரேனிய படைகளுக்கு இடையிலான உண்மையான ஏற்றத்தாழ்வு வானில் தெரியும். யுக்ரேன் எல்லையில், ரஷ்யாவிடம் இருக்கும் 300 போர்

விமானங்களுடன் ஒப்பிடும்போது யுக்ரேனிடம் 105 போர் விமானங்களே உள்ளன என்று வாட்லிங் கூறுகிறார். ரஷ்ய படையினர், "மிக விரைவில் வானில் ஆதிக்கம் செலுத்தமுடியும்" என்று அவர் கணித்துள்ளார்.

ஷி—400 ஏவுகணைகள் போன்ற ரஷ்யாவின் மேம்பட்ட வான் பாதுகாப்பு அமைப்புகளும் அதன் படைகளுக்கு கூடுதல் பலனை தருகின்றன. இதற்கு நேர்மாறாக, யுக்ரேனில் பழைய மற்றும் குறைந்த அளவிலான வான் பாதுகாப்பு அமைப்புகளே உள்ளன.இஸ்ரேல் பல திசைகளில் இருந்து தன்னை தற்காத்துக் கொள்ள முடியும் என்ற உதாரணத்தை தருகிறார் வாட்லிங். ஆனால் விமானப்படையின் மேன்மை காரணமாகவே அவ்வாறு செய்ய முடிந்தது என்றும் அவர் கூறுகிறார். அது யுக்ரேனிடம் இல்லாத ஒன்று.

கார்கிவ் அருகே உள்ள சுஹ¯யேவ் ராணுவ விமான தளம் ரஷ்யாவால் முதலில் தாக்கப்பட்ட இலக்குகளில் ஒன்றாகும் கார்கிவ் அருகே உள்ள சுஹ¯யேவ் ராணுவ விமான தளம் ரஷ்யாவால் முதலில் தாக்கப்பட்ட இலக்குகளில் ஒன்றாகும் ஒருங்கிணைந்த போர் விமானங்கள், ஏவுகணைகள் மற்றும் நீண்ட தூர இலக்குகளை தாக்கவல்ல ராக்கெட் பீரங்கிகளை ஒருங்கிணைத்து "அதிர்ச்சி மற்றும் பிரமிப்பை" எதிராளிக்கு ஏற்படுத்தக்கூடிய செயல்முறையை ரஷ்யா உருவாக்கியுள்ளது என்று பென் பாரி கூறுகிறார்.

யுக்ரேனின் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள், வெடிமருந்து கிடங்குகள், விமானப்படை மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகள் ஆகியவற்றை தொலைதூரத்தில் இருந்து தாக்க ரஷ்யர்களுக்கு இது உதவுகிறது. தலைநகர் கீயவ் அருகே உள்ள இலக்குகள் மீது நிகழ்ந்த க்ரூஸ் ஏவுகணைத் தாக்குதல்களுடன் அது ஏற்கனவே தொடங்கிவிட்டதாகத் தெரிகிறது.யுக்ரேனால் தாக்குப்பிடிக்க முடியாத இஸ்கேண்டர் க்ரூஸ் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணை அமைப்புகள் போன்ற நவீன ஆயுதங்கள் மற்றும் திறன்கள் அடங்கிய மிக முக்கியமான ஆயுதக் களஞ்சியம் ரஷ்யாவிடம் இருப்பதாக வாட்லிங் கூறுகிறார். யுக்ரேன் சமீபத்தில் அமெரிக்கா மற்றும் பிரிட்டனிடமிருந்து "தாக்குதல் உதவி" பொருட்களைப் பெற்றுள்ளது. ஆனால் இவை பெரும்பாலும் குறுகிய தூர, வானில் இருந்து வான் இலக்கை தாக்கவல்ல ஏவுகணைகள் மற்றும் பீரங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் ஆகும்.

சுருக்கமாகச்சொன்னால், யுக்ரேனை ஒப்பிடும்போது ரஷ்யாவிடம் உள்ள ஆயுத வலிமையும் அதிகம், தாக்கக்கூடிய தூரமும் அதிகம்.ரஷ்யாவின் வான் மேன்மை மற்றும் நீண்ட தூர ஆயுதங்கள் காரணமாக யுக்ரேனின்



படைகள் விரைவில் பின்னுக்குத் தள்ளப்படும். யுக்ரேனின் படைகள் வேறு எந்த திசையிலிருந்தும் ரஷ்ய முன்னேற்றத்தை எதிர்கொள்ள திட்டமிடல் மற்றும் இடமாற்றம் செய்வது போன்றவற்றை மேற்கொள்வதில் இருந்து தடுக்கப்படலாம் என்றும் வாட்லிங் நம்புகிறார். யுக்ரேனின் சிறந்த பயிற்சி பெற்ற மற்றும் திறன்பெற்ற ராணுவப்பிரிவுகள் நாட்டின் கிழக்கில் உள்ளன. அதாவது லுஹான்ஸ்க் மற்றும் டொனெட்ஸ்கில் உள்ள கட்டுப்பாட்டுக் கோட்டிற்கு அருகில் 2014 முதல் அவை சண்டையிட்டு வருகின்றன.

ரஷ்யா அவர்களை சுற்றி வளைக்க முயற்சி செய்யலாம் என்ற உண்மையான கவலை உள்ளது என்று மேற்கத்திய உளவுத்துறை அதிகாரிகள் பிபிசியிடம் தெரிவித்தனர்.இருப்பினும், ரஷ்யா கிரைமியாவை ஆக்கிரமித்தபோது இருந்ததை விட யுக்ரேனின் ஆயுதப் படைகள் தற்போது சிறந்த பயிற்சி மற்றும் ஆயுதங்களைக் கொண்டுள்ளன. நாட்டின் கிழக்கில் ரஷ்ய ஆதரவைப் பெற்ற பிரிவினைவாதிகளுடனான சண்டை மூலம் படைப்பிரிவுகளும், வீரர்களும் பயனுள்ள போர் அனுபவத்தைப் பெற்றுள்ளதாக பாரி கூறுகிறார்.

ஆனால் அவர்கள் முக்கியமாக பதுங்கு குழிகளில் மறைந்திருந்து சண்டையிடுவதில் மட்டுமே ஈடுபட்டுள்ளதால், "சூழ்ச்சிப் போர்" நடைமுறைகள் அவர்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும் என்று அவர் கூறுகிறார். மொபைல் ராக்கெட், ஏவுகணை

செலுத்து வாகனம் மற்றும் வான் பாதுகாப்பு மூலம் ரஷ்யாவின் படைகள் விரைவாக செல்ல முடிகிறது. கிரைமியா மற்றும் சிரியா மீதான படையெடுப்பு மூலம் ரஷ்யாவின் போரை தாக்குப்பிடிக்கும் வலிமை அதிகரித்துள்ளது.

மோதல் யுக்ரேனின் நகரங்களுக்குள் நுழைந்தால், அது யுக்ரேனின் படைகளுக்கு ஒரு வாய்ப்பை அளிக்கும். தயார் நிலையில் இருக்கும் ஒரு தற்காப்பாளர் நகர்புற சண்டையை எதிரிகளுக்கு கடினமாகவும் இரத்தக்களறியாகவும் மாற்ற முடியும். இரண்டாம் உலகப் போரில் ஸ்டாலின்கிராட் மற்றும் சமீபத்தில் ஈராக்கில் உள்ள மோசூலில் நடந்த சண்டை இதற்கான உதாரணங்கள்.

ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள டொனெட்ஸ்க் பகுதியில் நடந்த பீரங்கித் தாக்குதலுக்குப் பிறகு ஒரு பெண் தனது சேதமடைந்த வீட்டை சுத்தம் செய்கிறார். ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள டொனெட்ஸ்க் பகுதியில் நடந்த பீரங்கித் தாக்குதலுக்குப் பிறகு ஒரு பெண் தனது சேதமடைந்த வீட்டை சுத்தம் செய்கிறார்.ரஷ்யப் படைகள் ஆரம்பத்தில் நகரங்களுக்கு செல்லாமல் இருக்க முயற்சி செய்யக்கூடும் என்று பென் பாரி நம்புகிறார். ஆனால் ரஷ்யர்கள் நகர்ப்புறப் போரை, குறிப்பாக கீவ் நகருக்குள் செல்வதை தவிர்க்க முடியாது என்று அவர் கூறுகிறார். யுக்ரேன் தனது நகரங்களை சரியாக பாதுகாக்க முடிந்தால், அவர்கள் நீண்ட காலத்திற்கு தாக்குப்பிடிக்கக்கூடும் என்று ஜேக் வாட்லிங் கூறுகிறார். பிரிட்டன் வழங்கியுள்ள இலகுரக பீரங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் (ழிலிகிகீ), நெருக்கமான போரில் உதவக்கூடும். யுக்ரேனியப் படைகள் கட்டடங்களை கவசமாகப் பயன்படுத்தி இந்தப்போரில் ஈடுபடலாம். கணக்கு தெரியாத எண்ணிக்கையிலான பொதுமக்களும் ஆயுதங்களை கையில் எடுக்கலாம்.

சிறுநகரங்கள் மற்றும் பெரிய நகரங்களை கட்டுப்படுத்த ரஷ்யா வான்வழித் தாக்குதல்கள் மற்றும் பீரங்கிகளை மட்டுமே நம்ப முடியாது.“ரஷ்யாவின் முகவர்கள் மற்றும் செயல்பாட்டாளர்கள் ஏற்கனவே அந்தப்பகுதிகளில் உள்ளனர். கீவ் நகரில் அரசை சீர்குலைக்கும் பல முயற்சிகளும், மரபுக்கு புறம்பான நடவடிக்கைகளும் இருக்கும்,” என்று வாட்லிங் கூறுகிறார். ரஷ்யா, நகரங்களைச் சுற்றி வளைத்து, நீண்ட தூர பீரங்கிகளைப் பயன்படுத்தி எதிர்ப்பு காணப்படும் இடங்களை குறிவைக்க முயற்சிக்கும். பின்னர் “சிவில் சமூகத் தலைவர்களைக் கொல்ல” சிறப்புப் படைகளையும் முகவர்களையும் பயன்படுத்த முயற்சிக்கும்.

யுக்ரேன் இப்போது தன்னை தற்காத்துக்கொள்ள போராடுகிறது.இது கடந்த எட்டு ஆண்டுகளாக கிழக்கில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சிப் படைகளுடன் போரில் ஈடுபட்டு வருகிறது. ஆனால் இப்போது முழு நாட்டிற்கும் அச்சுறுத்தல் உள்ளது. “ஒரு நாடாக உயிர்வாழ்வதற்கான கடுமையான உறுதிப்பாடு அங்கு காணப்படுகிறது. ஆனால் தங்கள் நிலை அத்தனை வலிமையாக இல்லை என்றும் மிக அதிக உயிர்சேதம் இருக்கக்கூடும் என்ற என்ணமும் மக்கள் மனதில் மேலோங்கி இருக்கிறது,”

கருத்துப் ப(ர)டம்

நன்றி: டைம்ஸ் ஆஃப் இந்தியா

சொல்றாங்க...

"உக்ரைன் தனித்துப் போரிடுகிறது; உதவி கேட்டும் உலக நாடுகள் முன்வரவில்லை"

அதிபர் ஸெலென்ஸ்கி

(உண்மையைச் சொல்பவர்கள் ஒதுக்கப்படுவார்கள் என்பது தொடர்கதையாகவே இருக்கிறது)

"வணக்கம் என்ற ஒரே வார்த்தையைச் சொல்லி தமிழர்களை ஏமாற்ற முடியாது!"

ஸ்டாலின்

(அப்படிச் சொல்லு தமிழே! எங்க கிட்டே வா? சாதுர்யம் பேசாதே ஜி!)

"பா.ஜ.க தோற்றால் உத்தரப்பிரதேசம் கேரளா போல ஆகும்!"

யோகி ஆதித்யநாத்

(ஐயா!.. கொஞ்சம் கீழே பாருங்க!...)

"உ.பி. கேரளாவாக மாறினால், சிறந்த கல்வி, சுகாதாரம், வாழ்க்கைத் தரம் கிடைப்பது மட்டுமல்லாமல், 'மதம் மற்றும் சாதியின் பெயரால் மக்கள் கொல்லப்படாத' சமூகத்தைக் கொண்டதாகவும் உ.பி. இருக்கும்."

பினராயி விஜயன்

(அரசியல் நாகரீகம்ன்னா, இப்படித்தான் பதிலடின்னா கொடுக்கத் தெரிஞ்சிருக்கணும்!)

நாட்டுக்காக

யுக்ரேன் அதிபர் வொலோதிமிர் ஸெலன்ஸ்கி

யுக்ரேனின் அதிபராக வொலோடிமிர் ஸெலென்ஸ்கி முதன்முதலில் தொலைக்காட்சித் தொடர் ஒன்றில் தோன்றினார். அது ஒரு பிரபலமான நகைச்சுவைத் தொடர்.

2019 ஏப்ரலில் அவரது நிஜ வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. அவர் உண்மையிலேயே நாட்டின் அதிபரானார். இப்போது அவர் 4 கோடியே 40 லட்சம் மக்களைக் கொண்ட ஒரு நாட்டை போரில் வழி நடத்துகிறார். தற்போது ரஷ்யப் படைகள் அவரது நாட்டுக்குள் புகுந்து சண்டையில் ஈடுபட்டுள்ளன.

'செர்வெண்ட் ஆஃப் தி பீப்பிள்' தொடரில் அவர் ஒரு சாதாரண வரலாற்று ஆசிரியராக அவர் நடித்தார். ஊழலுக்கு எதிராக அவர் பேசிய வீடியோ ஆன்லைனில் வைரலான பிறகு அவர் அந்தத்தொடரில் அதிபராக நடித்தார். இது ஒரு மாறுபட்ட கதையாக இருந்தது. இது அரசியலில் ஏமாற்றத்தை கண்டிருந்த யுக்ரேனியர்களுக்கு மிகவும் பிடித்துப்போனது.'செர்வெண்ட் ஆஃப் தி பீப்பிள்'அவரது கட்சியின் பெயரானது. வொலோடிமிர் ஸெலென்ஸ்கி அரசியலைத் தூய்மைப்படுத்துவதாகவும், கிழக்கில் அமைதியைக் கொண்டுவருவதாகவும் உறுதியளிக்கும் பிரசாரத்தை மேற்கொண்டார்.

இப்போது ரஷ்யாவின் துருப்புக்கள் யுக்ரேனுக்குள் புகுந்து தாக்கிவரும் நிலையில் இந்த தேசியத் தலைவர், சர்வதேச நெருக்கடியின் மையத்தில் இருக்கிறார். இது மேற்கத்திய நாடுகளின் ரஷ்யாவுடனான பனிப்போரின் ஆழமான நெருக்கடியை நினைவுபடுத்துகிறது. 44 வயதான அதிபர் யுக்ரேன் நலனுக்காக ஆதரவைத் திரட்டியும், பீதியை பரப்ப வேண்டாம் என்று மேற்கத்திய நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்தும், மக்களிடையே அச்சம் பரவாமல் இருக்க தன்னால் இயன்றதை செய்தும் ஒரு கடினமான பாதையில் செல்லவேண்டியுள்ளது.

ஒரு நகைச்சுவை நடிகரின் அழைப்பு:அதிபர் பதவிக்கான அவரது பாதை வழக்கமான ஒன்றல்ல. மத்திய நகரமான க்ரைவிரியில் யூத பெற்றோருக்கு பிறந்த வொலோடிமிர் ஸெலென்ஸ்கி, கீவ் தேசிய பொருளாதார பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டம் பெற்றார். இருப்பினும், நகைச்சுவைதான் அவரது தொழிலாக மாறியது.

ஒரு இளைஞராக அவர் ரஷ்ய தொலைக்காட்சியில் ஒரு போட்டி குழு நகைச்சுவை நிகழ்ச்சியில் பங்கேற்றார். 2003 ஆம் ஆண்டில், அவர் தனது நகைச்சுவைக் குழுவான 'க்வார்டல் 95' என்ற பெயரில் ஒரு வெற்றிகரமான தொலைக்காட்சி தயாரிப்பு நிறுவனத்தின் இணை நிறுவனர் ஆனார். இந்த நிறுவனம் யுக்ரேனின் 1+1 நெட்வொர்க்கிற்கான நிகழ்ச்சிகளை தயாரித்தது. அதன் சர்ச்சைக்குரிய பில்லியனர் உரிமையாளர் இஹோர் கொலோமோய்ஸ்கி, பின்னர் ஸெலென்ஸ்கியின் அதிபராகும் முயற்சியை ஆதரித்தார். 2010 களின் நடுப்பகுதி வரை, டிவி மற்றும் லவ் இன் தி பிக் சிட்டி (2009) மற்றும் ர்ஜெவ்ஸ்கி வெர்சஸ் நெப்போலியன் (2012) போன்ற திரைபடங்கள்தான் அவரது வாழ்க்கையின் மையமாக இருந்தன. ஸெலென்ஸ்கியின் அரசியல் எழுச்சிக்கான களம் 2014 இல் நடந்த கொந்தளிப்பான நிகழ்வுகளால் அமைக்கப்பட்டது. யுக்ரேனின் ரஷ்ய சார்பு அதிபர் விக்டர் யானுகோவிச் பல மாத எதிர்ப்புகளுக்குப்

ரஷ்யா நடத்தும் தாக்குதலை உலக நாடுகள் 2வது நாளாக வேடிக்கை பார்க்கின்றன

2வது நாளாக நாங்கள் தன்னந்தனியாக போராடி வருகிறோம்; உலக நாடுகள் எங்களுக்கு உதவ வேண்டும்

பொதுமக்கள் வாழும் குடியிருப்புகள் மீது வாக்குறுதியை மீறி ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது

– உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி
மீண்டும் வேதனை

நான்!

வே. செந்தில்

பிறகு வெளியேற்றப்பட்டார். பின்னர் ரஷ்யா கிரைமியாவைக் கைப்பற்றியது. கிழக்கில் யுக்ரேனுடனான போரில் பிரிவினைவாதிகளை ஆதரித்தது. இன்றுவரை அந்த சண்டை தொடர்கிறது.

ஒரு ஆண்டு கழித்து, 2015 அக்டோபரில் 'சர்வண்ட் ஆஃப் தி பீப்பிள்' தொலைக்காட்சி தொடர், 1+1 இல் ஒளிபரப்பானது. அவர் வாசிலி கோலோபோரோட்கோ என்ற கதாபாத்திரத்தில் நடித்தார். இந்த கதாபாத்திரம் நாட்டின் அதிபரானது போலவே, நடிகரின் நிஜ வாழ்க்கையும் அமைந்தது. அவர் அப்போதைய அதிபர் பெட்ரோ பொரோஷென்கோவை தோற்கடித்தார். பெட்ரோ தனது போட்டியாளரை 'அரசியலில் புதியவர்' என்று சித்தரிக்க முயன்றார். ஆனால் வாக்காளர்கள் அதை அவருடைய வலுவாக நினைத்தனர்.அவர் 73.2% அமோக வாக்குகளுடன் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார். யுக்ரேனின் ஆறாவது அதிபராக 2019 மே 20 ஆம் தேதி அவர் பதவியேற்றார். கிழக்கு யுக்ரேனில் 14,000 க்கும் மேற்பட்ட மக்களின் உயிரை பலிகொண்ட மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதாக அவர் அளித்த வாக்குறுதியின்படி செயல்பட முயன்றார்.

முதலில், அவர் சமரசத்திற்கு முயற்சித்தார். ரஷ்யாவுடன் பேச்சு வார்த்தைகள், கைதிகளின் பரஸ்பர பரிமாற்றம் மற்றும் மின்ஸ்க் உடன்படிக்கை என அழைக்கப்படும் சமாதான செயல்முறையின் சில பகுதிகளை செயல்படுத்துவதற்கான நகர்வுகள் இதில் அடங்கும். ஆனால் அவை ஒருபோதும் முன்னேற்றத்தைக் கொண்டுவரவில்லை.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வசிப்பவர்களுக்கு ரஷ்ய பாஸ்போர்ட்டுகளை வழங்கும் ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதினின் முடிவால் சமரச மனநிலை பாதிக்கப்பட்டது. 2020 ஜூலையில் போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. ஆனால் அவ்வப்போது சண்டைகள் தொடர்ந்தன.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோ ராணுவ கூட்டணியில் உறுப்பினராகும் யுக்ரேனின் உந்துதலை மிகவும் உறுதியான தொனியில் அவர் பேசியது ரஷ்ய அதிபரை கோபப்படுத்தியது.

சில நேரங்களில் அவர் ஒரு அரசியல்வாதியாக தனது குரலைக் கேட்கச்செய்ய போராடினார், இதற்கு அவரது அரசியல் அனுபவமின்மையை அவரது விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஆனால் உடனடி ரஷ்யப் படையெடுப்பு பற்றிய மேற்கத்திய நாடுகளின் எச்சரிக்கைகளை எதிர்கொண்ட அவர், எட்டு வருட போருக்குப் பிறகு அது ஒன்றும் புதிதல்ல என்று பொறுமையாக சுட்டிக் காட்டினார். "நமது பொறுமை,ஆத்திரமூட்டல்கள்

மீது தாக்கத்தை ஏற்படுத்தும். நாம் கண்ணியமாக நடந்து ஆத்திரமூட்டல்களுக்கு பதிலடி கொடுக்காதபோது இது நடக்கும்," என்றார் அவர்

பிப்ரவரி 16 அன்று தேசிய ஒற்றுமை தினத்தை உருவாக்கியதன் மூலம் யுக்ரேனியர்களை அணிதிரட்ட முயன்றார். மேலும் முன்னரங்க பகுதிகளில் உள்ள வீரர்களை தொடர்ந்து சந்தித்தார். ரஷ்யாவின் ராணுவ அச்சுறுத்தல் நேட்டோவில் சேருவதை கைவிட அவரை வற்புறுத்துகிறதா என்று கேட்டபோது, "நான் அதிபராக இருக்கும்போது நாட்டை இழக்காமல் இருப்பதே எனக்கு முக்கியம்," என்று பிபிசியிடம் அவர் தெரிவித்தார். "எங்களுக்கு உத்தரவாதங்கள் தேவை. இது வெறும் நான்கு எழுத்துக்கள் மட்டுமல்ல. எங்களுக்கு நேட்டோ ஒரு பாதுகாப்பு உத்தரவாதம்,"என்று அவர் குறிப்பிட்டார்.

யுக்ரேனின் பெரும் பணக்காரப்புள்ளிகளின் விரிவான அரசியல் மற்றும் பொருளாதார செல்வாக்கைக் கட்டுப்படுத்துவதான அவரது வாக்குறுதி நிறைவேற்ற முடியாதது என நிரூபிக்கப்பட்டுள்ளது. இஹோர் கொலோமொய்ஸ்கியின் தொடர்புகளை விமர்சகர்கள் சந்தேகப்பட்டனர். அவரது ஊடக நிறுவனம் ஸெலென்க்ஸியின் தேர்தல் பிரச்சாரத்திற்கு ஆதரவு அளித்தது.

ஆனால் தான் அளித்த இந்த வாக்குறுதியை நிறைவேற்ற ஓரளவு முயற்சிகளை அவர் மேற்கொண்டார்.அவரது அரசு யுக்ரேனின் மிக முக்கிய செல்வந்தர்களில் சிலரை குறிவைத்தது. ரஷ்ய ஆதரவு எதிர்க்கட்சித் தலைவர் விக்டர் மெட்வெட்சுக் இதில் ஒருவர். தேச துரோகம் உள்ளிட்ட குற்றங்களுக்காக அவர்வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். இது ஒரு "அரசியல் அடக்குமுறை" என்று மெட்வெட்சுக் கண்டனம் செய்தார்.

பின்னர் 'பணக்கார புள்ளிகளை' சட்டப்பூர்வமாக கட்டுப்படுத்தும் சட்டம் வந்தது. அரசியல் கட்சிகளுக்கு நிதியுதவி செய்யத்தடை உட்பட பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ஆனால் அவரது ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் பெரும்பாலும் மேலோட்டமானது என்றும் ரஷ்யாவிற்கு எதிரான ஒரு முக்கியமான முகாமான அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் நிர்வாகத்திற்கு ஆதரவாக வடிவமைக்கப்பட்டது என்றும் சில விமர்சகர்கள் கருதினர் பைடனின் ஆதரவிற்கான உத்தரவாதம் பெறுவதற்கு ஸெலென்ஸ்கி தர்மசங்கடமான தருணங்களை எதிர்கொண்டார்.

2019 ஜூலையில் குடியரசுக் கட்சியை சேர்ந்த ன் அதிபர்

டொனால்ட் டிரம்ப் தொலைபேசி அழைப்பின் போது ஸெலென்ஸ்கியிடம் "ஒரு உதவி" கேட்டார். தேர்தலில் வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட ஜனநாயக கட்சி வேட்பாளர் பைடனுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளை ஸெலென்ஸ்கி விசாரிக்க வேண்டும் என்று டிரம்ப் விரும்பினார். இதற்கு கைமாறாக ஸெலென்ஸ்கி அமெரிக்க பயணத்தையும், ராணுவ உதவியையும் பெறுவார் என்று கூறப்பட்டது. அழைப்பின் விவரங்கள் பரவலாக அறியப்பட்டபோது, தனது அரசியல் போட்டியாளர் தொடர்பான சேதம் விளைவிக்கும் தகவல்களை தோண்டி எடுக்க யுக்ரேன் தலைவருக்கு சட்டவிரோதமாக அழுத்தம் கொடுத்ததாக ட்ரம்ப் குற்றம் சாட்டப்பட்டார்.

தான் எந்தத் தவறும் செய்யவில்லை என்று ட்ரம்ப் உறுதியாகக் கூறினார். அதே சமயம் ஸெலென்ஸ்கி 'பரஸ்பர உதவியை' மறுத்தார். ஜனநாயகக் கட்சியினர் டிரம்ப்பை பதவி நீக்கம் செய்யும் நடவடிக்கைகளை துவக்கினர். பின்னர் அவர் அரசியல் விசாரணையில் விடுவிக்கப்பட்டார்.

ஸெலென்ஸ்கி மீதும் ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளன.2021 அக்டோபரில் கசிந்த பண்டோரா ஆவணங்களில் அவர் பெயர் இடம் பெற்றிருந்தது. இது உலகின் பணக்காரர்கள் மற்றும் சக்திவாய்ந்தவர்களின் மறைத்து வைக்கப்பட்ட செல்வத்தை அம்பலப்படுத்தும் ஆவணங்களாகும்.

ஸெலென்ஸ்கியும் அவரது நெருங்கிய வட்டமும் வெளிநாட்டு நிறுவன வலையமைப்பின் பயனாளிகள் என்பதை ஆவணங்கள் வெளிப்படுத்தின. ஆவணங்களில் புதிய விவரங்கள் ஏதும் இல்லை என்றும் தானும், தனது நிறுவனமான Kvartal 95 ஐச் சேர்ந்த எவரும் பணமோசடியில் ஈடுபட்டவில்லை என்றும் ஸெலென்ஸ்கி தெரிவித்தார்.

13

தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

THANK YOU

தமிழ்

மொழிப் போர் தியாகங்களை மறக்க முடியுமா?

பெரியார், அண்ணா ஆகியோரின் பிறந்த நாட்கள், நினைவு நாட்களைப் போலவே ஆண்டுதோறும் ஜனவரி 25—ல் மொழிப் போர் தியாகிகள் நினைவு தினத்தை அனுசரிப்பதும் திமுக, அதிமுக உள்ளிட்ட திராவிடக் கட்சிகளுக்கு ஒரு வழக்கமாக மாறிவிட்டது. ஊர்தோறும் நடத்தப்படும் பொதுக்கூட்டங்களும் மற்றுமொரு அரசியல் மேடை என்பதாகவே சுருங்கிவிட்டன.



சுதந்திர தின விழாக்களிலாவது மாவட்டந்தோறும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செய்யப்படுகிறது. அதுபோல, 1965 மொழிப் போரில் முன்னின்று போராடிய, சிறைக் கொடுமைகளை அனுபவித்த தியாகிகளில் இன்னும் நலமுடன் இருக்கும் மூத்தவர்களை திராவிட இயக்கக் கட்சிகள் தங்களது மேடைகளில் அமர்த்தி மரியாதை செய்யலாம். அவர்களுக்குப் பெயரளவில் அளிக்கப்பட்டுவரும் ஓய்வூதியத்தை உயர்த்துவதையும்கூடப் பரிசீலிக்கலாம்.

முதல் தியாகி நடராசன்

இந்தித் திணிப்புக்கு எதிரான மொழிப் போராட்டங்களைப் பற்றிப் பேசும்போதெல்லாம் 1965—ல் நடந்த மூன்றாவது மொழிப் போராட்டம் தொடங்கப்பட்ட ஜனவரி 25—ம் தேதியே முக்கியமானதாக நினைவில் கொள்ளப்படுகிறது. அப்போது நடந்த துப்பாக்கிச் சூடுகளும் உயிர்ப் பலிகளும் ஆறா வடுக்களாகத் தமிழர்களின் ஆழ்மனதில் பதிந்துவிட்டன என்பது மறுக்க முடியாதது.

1937—ல் தொடங்கிய மொழிப் போராட்டத்தையும் கணக்கில் கொண்டு, ஜனவரி 15 தொடங்கி 25—ம் தேதி வரையில் மொழிப் போர் தியாகிகளை நினைவுகூர வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பேசத் தொடங்கியுள்ளது. காரணம், முதலாவது மொழிப் போரில் உயிரிழந்த முதலாவது தியாகி நடராசனின் நினைவு நாள் ஜனவரி—15 என்பதால். சிறையில் அவரது உடல்நிலை மோசமான நிலையில், மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தால் விடுதலை செய்வோம் என்று அதிகாரிகள் வற்புறுத்தியும் அதற்கு உடன்படாமல் மரணத்தைத் தழுவியவர் அவர்.

நடராசன் உயிரிழந்து ஒரு மாதம் கழித்து கைதான தாளமுத்துவும் சிறையில் உயிரிழந்தார். என்றாலும் மொழிப் போர் தியாகிகளை நினைவுகூரும்போது, தாளமுத்துவின் பெயரை

தமிழ்

செல்வ புவியரசன்

முதலில் சொல்வதே வழக்கமாக இருக்கிறது. நெடில் எழுத்தில் தொடங்குவது எழுச்சியூட்டும்வகையில் அமைந்திருப்பதாகவும்கூட ஒரு காரணம் சொல்லப்படலாம். ஆனால், அதற்குள்ளும் ஒரு சாதிய மனோநிலை இயங்குவதை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் உணர்த்த விரும்புகின்றனர்.

முதலாவது மொழிப் போர்

சுதந்திர இந்தியாவில் புதிய அரசமைப்பு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னமே இந்தித் திணிப்புக்கான ஆயத்தங்கள் தொடங்கிவிட்டன என்பதும் அந்த முயற்சிகளுக்கு அப்போதே கடுமையான எதிர்ப்புகள் கிளம்பின என்பதும் வரலாற்றில் என்றும் நினைவுகூரப்பட வேண்டியவை. தமிழ்நாட்டில் இந்தித் திணிப்பை முன்னின்று நடத்தியவர்களில் பெரியாரும் ஒருவர். முதலாவது இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான காஞ்சிபுரம் மாநாட்டுக்குத் தலைமையேற்றவர் கே.வி.ரெட்டிநாயுடு. திருச்சி உறையூரிலிருந்து சென்னை நோக்கிப் புறப்பட்ட ஊர்வலத்தை வழிநடத்திய 'தளபதி' பட்டுக்கோட்டை அழகிரி. பூர்விகத் தமிழர்கள் இல்லை என்று 'பட்டியூர்ப் பாவலர்களால்' முத்திரை குத்தப்படும் இவர்கள்தான் முதலாவது மொழிப் போரை முன்னின்று நடத்தினர்.

தமிழறிஞர்களுடன் இணைந்து பெரியார் நடத்திய முதலாவது மொழிப் போரைக்

காட்டிலும் பெரியார், அண்ணா இருவரும் இணைந்து நடத்திய இரண்டாவது போரைக் காட்டிலும் திமுகவின் தேர்தல் வெற்றிக்குக் காரணமாக அமைந்த மூன்றாவது மொழிப் போருக்கே இன்று முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. மொழிப் போர் குறித்த நினைவுகளும்கூட மாநில சுயாட்சி முழக்கங்களால் இன்று மறக்கடிக்கப்படுகின்றன. அம்முழக்கம், அதற்காகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட



தீர்மானத்தை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துகிற முயற்சிதானோ என்று நினைக்கவும் வைக்கிறது.

சட்டமன்றம், நிர்வாகம், நீதியமைப்பு ஆகியவற்றில் மாநில அரசின் அதிகாரம் மத்திய அரசால் கட்டுப்படுத்தப்படுகிறது என்பது மத்திய — மாநில அரசுகளுக்கிடையிலான முழுமையும் அரசமைப்பு சார்ந்த சிக்கலாகும். இது மற்ற மாநிலங்களுக்கும்கூடப் பொதுவானது. இந்தி பேசும் மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் வெற்றிபெற்றாலும்கூட இதே முழக்கம் அங்கு எழக்கூடும். ஆனால், மொழித் திணிப்பு என்பது மத்திய அரசுக்கும் தனிமனிதர்களுக்கும் இடையிலான நேரடிச் சிக்கல். அதனால்தான் சாதி, மதம் என்ற அடையாளங்களையெல்லாம் தூக்கிப் போட்டுவிட்டு, தமிழர்கள் என்ற ஒற்றை அடையாளத்தின் கீழ் மக்கள் ஒன்றுதிரண்டு போராடினர். அறுபதுகளின் மத்தியில் நடந்த அந்தப் போராட்டங்களின் எழுச்சியால்தான் தமிழ்நாட்டின் ஒரு சில வடமாவட்டங்களில் மட்டுமே செல்வாக்குப் பெற்றிருந்த திமுக, மாநிலம் தழுவிய அளவில் மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது.

மாநில சுயாட்சியில் ஆட்சிமொழி உரிமையும் ஒரு அங்கம். மத்திய—மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகள் சாதாரண குடிமக்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன என்றபோதும், தாய்மொழிக்கான உரிமை மறுப்பே அவர்களை வெகுண்டெழச்செய்து போராட்டக்களத்தில் நிறுத்துகிறது. அரசமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட இடஒதுக்கீடு உள்ளிட்ட அடிப்படை உரிமைகளுக்கும்கூட சட்டரீதியான கட்டுப்பாடுகளை விதிக்கிற மத்திய அரசும் நீதிமன்றங்களும் ஆட்சிமொழி விவகாரங்களில் அமைதிகாத்து வருகின்றன என்றால், அதற்கு ஒரே காரணம்தான்: மொழியுரிமைச் சிக்கல்கள் பெருந்திரளான மக்களிடம் எளிதில் கோபத்தை உருவாக்கக்கூடிய வல்லமையைக் கொண்டிருக்கின்றன.

தெளிவான வரலாறு தேவை

மொழியுரிமைப் போரில் உயிர்துறந்த முதல் வீரர் நடராசன். அவர் கடுமையான வயிற்றுவலியால் உயிரிழந்தார் என்கிறது அண்மையில் வெளிவந்துள்ள 'போதி' வரலாற்று ஆய்விதழ். அண்ணாவின் அணிந்துரையுடன் வெளிவந்த ஆலடி அருணாவின் 'இந்தி ஏகாதிபத்தியம்' நூலிலோ, முகத்தில் ஏற்பட்ட பருவீக்கத்தின் காரணமாக நடராசன் உயிரிழந்தார் என்று கூறப்பட்டுள்ளது. மொழிப் போரின் முதல் தியாகியின் வரலாற்றைத் தெரிந்துகொள்ளக்கூட நமக்குத் தெளிவான சான்றாதாரங்கள் இல்லை என்பதற்கான ஒரு சிறிய உதாரணம் இது.

குடி அரசு

"KUDI ARASU"

விழுக இந்தி!

திமுகவும் தொடர்ந்து தமிழ் வளர்ச்சி, தமிழ் உரிமை என்றெல்லாம் பேசத்தான் செய்கிறது. ஆனால், முப்பதுகள் தொடங்கி மொழியுரிமைக்காக இதுவரை நடந்துவந்த போராட்டங்களை, கட்சி பேதம் பாராட்டாமல் முறையாகப் பதிவுசெய்யக்கூட அக்கட்சி இன்னும் தயாராகவில்லை. கட்சியிலிருந்து பிரிந்துபோன, பிரிந்துபோய் திரும்பவும் வந்து ஒன்றுசேர்ந்த உடன்பிறப்புகளின் பெயர்களையும் குறிப்பிட வேண்டிய தயக்கமோ?

மீண்டுவா தருமி!

நூறாண்டு

காலங்களைக் கடந்த கலைஞன்: நடிகர் நாகேஷின் வாழ்க்கை வரலாறு!

ஒரு நாடக ஒத்திகையில் யாரோ முகம் தெரியாத நடிகர் ஒருவர் கம்பராமாயணப் பாடலை தவறாகப்பாடியதைக் கேட்டு அந்த தவறைச் சுட்டிக் காட்டியுள்ளார் நாகேஷ்.

அதற்காக அங்கு கிடைத்த அவமரியாதையில் தாமும் நடிகனாக வேண்டுமென்று நாடகக்குழுவில் சேர்ந்தார். ரயில்வேயில் பணிபுரிந்து கொண்டிருந்த நாகேஷுக்கு முதலில் நாடகத்தில் கிடைத்தது "வயிற்று வலி நோயாளி' வேடம். அந்த நாடகத்தில் நாகேஷ் சில நிமிடங்களே மேடையில் தோன்றுவார். ஆனால், அவர் இதை நன்றாக பயன்படுத்திக் கொண்டார். "டாக்டர்ஞ்' என அலறியபடி மேடையில் நுழையும் நாகேஷ், நிஜமாகவே வயிற்று வலியால் துடிப்பது போல உடலை வளைத்து, நெளித்து, கைகளால் வயிற்றை பிடித்துக் கொண்டே சிறப்பாக நடித்தார்.

இதை சற்றும் எதிர்பார்க்காத பார்வையாளர்களுக்கு ஆச்சரியம். அவர்களின் கைதட்டலால் அரங்கமே அதிர்ந்தது. அன்றைக்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த எம்.ஜி.ஆரும், நாகேஷின் நடிப்பை ரசித்தார். நாடகம் முடிந்த பின், மேடை ஏறிய எம்.ஜி.ஆர்., "நாடகம் நன்றாக இருந்தது. ஒரே ஒரு சீனில் வந்தாலும் அபாரமாய் நடித்து, அனைவரையும் கவர்ந்து விட்டார் ஒருவர்.

தீக்குச்சி போன்ற ஒல்லியான உருவில் வயிற்று வலிக்காரராக வந்தாரே, அவரைத் தான் சொல்கிறேன். நாகேஸ்வரன் என்ற பெயர் கொண்ட அவருக்கு நடிப்புக்கான முதல் பரிசை கொடுக்கிறேன்' என முதல் பரிசுக்குரிய கோப்பையை நாகேஷிடம் வழங்கினார்." மேக்அப்' போட்டு மேடையேறிய முதல் நாளிலேயே நாகேஷுக்கு கைதட்டலும், பரிசும், பாராட்டும் கிடைத்தது.

அதற்கு முன்பு நாகேஷ் எம்.ஜி.ஆரை., பார்த்ததில்லை. அதுதான் நாகேஷுக்குக் கிடைத்த முதல் அங்கீகாரம். அந்தப் பாணியைத்தான் "திருவிளையாடல்' தருமியாக "எனக்கில்லை எனக்கில்லை! இல்லவே இல்லை" என்று மீள்பதிவு செய்திருப்பார்.

சிறுவயதிலிருந்தே நாகேஷுக்கு நாடகங்கள், நடிப்பு என்றால் உயிர். நாயகனாக வேஷம் கட்டி நடிக்க ஆவல் கொண்டிருந்தவரின் கனவை அடியோடு நசுக்கிப் போட்டது, இரண்டாம் வருடக் கல்லூரிப் படிப்பின்போது அவருக்கு ஏற்பட்ட அம்மை நோய். முகம் முழுவதும்



நாகேஷ்!

அம்மையால் ஏற்பட்ட தழும்புகள். உள்ளத்தில் நொறுங்கிப் போனாலும், உயிர் மூச்சாய் நினைத்த நடிப்பின் மீதான ஆசையை அவர் விடவில்லை. கொஞ்ச காலம் ரயில்வேயில் எழுத்தராய் பணிபுரிந்து கொண்டே, தனது நடிப்பு மீதான ஆசைக்கு எண்ணெய் ஊற்றி வளர்த்தார் நாகேஷ்.

திரைத்துறைக்கு வருவதற்கு முன்பு நாகேஷின் வாழ்க்கை அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. கர்நாடகாவைப் பூர்வீகமாகக் கொண்ட வைதீக குடும்பத்தில் பிறந்த நாகேஷின் பால்யகாலம் மிகவும் சௌகர்யமானதாக, மகிழ்ச்சியாகத்தான் இருந்திருக்கிறது. ஆனால், அந்த மகிழ்ச்சி நீண்ட நாட்களுக்குத் தொடரவில்லை. கல்லூரி காலத்தில் மூன்று முறை அம்மை நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் நாகேஷ். முகமெல்லாம் அம்மை தழும்புகளைச் சுமந்து கொண்டு, மிகவும் மனச்சோர்வில், தன் அக்காவுக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறாகக் குறிப்பிடுகிறார், "நான் சிரிக்கும் போது, கன்னத்தில் குழி விழக் கண்ட நீ, இனி நான் சிரிக்காமலேயே காண்பாய்." இதை நாகேஷே பின்னாளில் கல்கி இதழில் எழுதிய தொடரில் குறிப்பிடுகிறார். பாலசந்தரின் திரைப்படங்களில் நடித்து உச்சத்தை தொட்டார்.

பலகட்ட கடினப் போராட்டங்களுக்குப் பிறகு, நாடக உலகினுள் நுழைந்தார். மணியனின் 'டாக்டர் நிர்மலா' நாடகத்தில் தை தண்டபாணி என்னும் நோயாளியாக நாகேஷ் நடித்த பாத்திரம் அப்ளாஸ் அள்ளியது. அதனால் அவருக்கு 'தை நாகேஷ்' என்னும் பட்டப் பெயர் இணைந்து பின்னாளில் அது 'தாய் நாகேஷ்' ஆக மாறியது. நாகேஷ் அவர்களின் முதல் திரைப்படம் 'தாமரைக்குளம்'. நாடக உலகின் மீது தீராக் காதல் கொண்டிருந்த நாகேஷ், கதாநாயகனாக நடித்த இப்படம் அவர் பெயர் சொல்லும் அளவிற்கு ஓடவில்லை. மீண்டும் வாழ்க்கையில் போராட்டம். எனினும், போராடத் தயங்காதவருக்கு கிடைத்த துருப்புச் சீட்டுதான், ஸ்ரீதர் இயக்கத்தில் வெளிவந்த 'காதலிக்க நேரமில்லை' திரைப்படம். கிடைத்த சான்ஸில்

கெத்தாக ஸ்கோர் செய்தார். உடல்மொழி, வசன மாடுலேஷன் என்று திரையில் தான் தோன்றும் காட்சிகளிலெல்லாம் சிக்ஸர்களாய் விளாசினார். பாலையாவிற்கு அவர் சொல்லும் 'த்ரில்லர் கதை' இன்றும் நம்மை சீட்டின் நுனியில் அமர்ந்து சிரிக்க வைக்கும் மாஸ் காமெடி.

அதன்பின்பு, வரிசையாக நகைச்சுவை கதாபாத்திரங்கள் இவர் பெயர் சொல்லும் வண்ணம் கிடைக்கத் தொடங்கியது. எம்.ஜி.ஆர், சிவாஜி திரைப்படங்களில் யார் இருக்கிறார்களோ இல்லையோ நாகேஷ் இருப்பார். திரையில் நாகேஷின் ஆஸ்தான ஜோடிகள் என்றால் அது சச்சுவும், ஆச்சி மனோரமாவும்தான். இந்த காம்பினேஷனில் வெளியான திரைப்படங்களின் காமெடிகள் இன்றும் சூப்பர் டூப்பர் ஹிட்.

நாகேஷ் காமெடி உலகில் பட்டையைக் கிளப்பிக் கொண்டிருந்தபோதே, இயக்குனர் சிகரம் பாலசந்தர் கதை, வசனத்தில் ஒரு படம் வெளியானது. அழவைக்க, சிரிக்க வைக்க, சிந்திக்க என்று கலந்து கட்டி நடிக்க வேண்டிய அந்தப் படத்திற்கு ஹீரோவாக பாலசந்தரும் சரி, இயக்குநர்கள் கிருஷ்ணன் — பஞ்சுவும் சரி.. யோசிக்காமல் டிக் செய்த பெயர்: நாகேஷ். படம் பெயர். சர்வர் சுந்தரம்! இன்றைக்கும் ஹோட்டல்களில் பணிபுரியும் சர்வர்கள், வாடிக்கையாளர்களை எப்படி எதிர்கொள்ளலாம் என்றறிய அந்தப் படத்தின் முதல் மூன்றரை நிமிடங்கள் பார்த்தாலே போதும்.

நாகேஷின் நடிப்பில் மகிழ்ந்துபோன பாலசந்தர், 'நீர்க்குமிழி' திரைப்படத்திலும் கதாநாயகன் வாய்ப்பை அள்ளிக் கொடுத்தார். அந்தப் படத்தில்தான் அழகென்பது மனதிலும், நடிப்பிலும் இருந்தால் போதும் என்று நிரூபித்துக் காட்டினார் நாகேஷ். இன்று திரைத்துறையில் மிளிரும் பலருக்கும் அது ஒரு தன்னம்பிக்கை பூஸ்ட். ஆம்... நீர்க்குமிழி திரைப்படம் வெற்றிகரமாக பலநாட்கள் ஓடியது. தொடர்ந்து தேன்கிண்ணம், யாருக்காக அழுதான், எதிர்நீச்சல் என்று ஏராளமான கதாநாயக வேடத் திரைப்படங்கள் அவருக்கு கிடைத்தது.

'யாருக்காக அழுதான்' திரைப்பட இறுதிக் காட்சியில் உண்மையிலேயே அழுது, உருண்டு, பிரண்டு அழுத நாகேஷைப் பார்த்து படக்குழுவே பிரமித்துப் போயிருக்கிறது. அப்படத்தினைத் தயாரித்த எழுத்தாளர் ஜெயகாந்தனே வியந்து போயிருக்கிறார். நாகேஷுக்கு, ஜெயகாந்தனும், பாலசந்தரும் ஆருயிர் நண்பர்கள். ஒருமுறை ஜே.கேவும், நாகேஷும் காரில் காத்திருந்த தருணமொன்றில், எதார்த்தமாக 'பிச்சையெடுக்கலாமா?' என்று ஜெயகாந்தன் கேட்க, நொடியில் சட்டை, பேண்ட்டை களைந்துவிட்டு பிச்சைக்காரனாகவே மாறிப்போனாராம் நாகேஷ். அந்த அர்ப்பணிப்புதான் அவரை மக்களின் மனம் கவர்ந்த கலைஞனாக உயர்த்தியது.

திருவிளையாடல் படத்தின் புலவன் தருமி — கடவுள் சிவன் காட்சி. எதிரில் நிற்கும் சிவாஜி, சாதாரண வேடம் என்றாலே கம்பீரமான நடிப்பைத் தரும் நடிப்பு இமயம். இதில் கெத்தாக சிவன் வேடம் வேறு. இடுப்பில் கைவைத்து, 'கேள்விகளை நீ கேட்கிறாயா.. நான் கேட்கவா' என்று சிம்மக்குரலில் கேட்பதைப் பார்த்தால் எதிரில் நிற்கும் எவருக்கும் நடுங்கும். அந்தக் காட்சியில் சளைக்காமல் நடிப்பை வெளிப்படுத்தியிருப்பார். அடுத்தவர் கவிதையை தன் கவிதை என்று பொய் சொல்ல வேண்டும் என்ற குற்ற உணர்ச்சியும், வேறு வழியில்லை என்ற தன் நிலையையும் உடல்மொழியிலேயே வெளிப்படுத்தியிருப்பார்.

ஒட்டிய வயிறுடன் அவர் செய்த சிலிர்ப்பான நகைச்சுவை வேடம், சிவாஜியை படப்பிடிப்பில் பலமுறை சிரிக்க வைத்த ஒன்று. தனது முகத்தழும்புகளைக் கூட, வாழ்வின் ஏணிப்படிகளாகவே பார்த்தவர் நாகேஷ். முன்பொரு பேட்டியில், 'மாவு அரைபட நன்றாக கொத்தப்பட்ட அம்மி தேவை. அப்படி கடவுள் என்முகத்திலும் கொத்திய குழிகள்தான், இன்று

வாழ்க்கையில் நான் வளர்ந்திடக் காரணம்' என்று நகைச்சுவையாகவே அதைப் பகிர்ந்து கொண்டுள்ளார். நடனத்தையும் விட்டு வைக்காத சகலகலா திறமைசாலி. கால் முட்டியில் கைகளை மாறி மாறி வைத்தபடி அவர் ஆடும் நடனம் அவரது டிரேட் மார்க்.

நாகேஷுக்கு சீட்டாட்டத்தில் அதிக ஆர்வம் இருந்திருக்கிறது. இதன் காரணமாக மிகவும் தர்மசங்கடமான சூழலில் சிக்கி இருக்கிறார். ஒரு முறை நாகேஷின் தந்தை தமக்கு மருந்து வாங்கி அனுப்பும்படி பணம் அனுப்பி இருக்கிறார். ஆனால், அந்த பணத்தைக் கொண்டு சூதாடி மொத்த தொகையையும் இழந்து, தந்தைக்கு மருந்து அனுப்ப முடியாமல் தவித்து இருக்கிறார் நாகேஷ். பின் தம் நண்பரின் மருந்துக்கடையில் கெஞ்சி மருந்து வாங்கி அனுப்பி இருக்கிறார்.

இதைப் பின்னாளில் அவரே வேதனையுடன் குறிப்பிடுகிறார். "ஒரு வேளை மருந்து கைக்குக் கிடைக்கும் முன்பு அப்பாவுக்கு உடம்பு சீரியஸாகி, ஒன்று கிடக்க ஒன்று ஆகி இருந்தால், அந்த பாவம் நெருஞ்சி முள்ளாக வாழ்நாள் முழுக்க என் நெஞ்சைக் குத்திக் கொண்டு இருந்திருக்கும்" என பின்னாளில் எழுதினார். மகளிர் மட்டும் படம் நினைவிருக்கிறதா? — பெண்கள் பணியிடங்களில் எதிர்கொள்ளும் சிக்கலை அப்போதே பேசிய படம் இது. இதில் பிணமாக நடித்திருப்பார் நாகேஷ். சில நிமிடங்களே திரையில் வரும் அந்தக் காட்சிகளில் அமர்க்களப்படுத்தி இருப்பார் நாகேஷ் என விமர்சகர்கள் இப்போதும் கொண்டாடுகிறார்கள்.

இந்தியில் அந்தப் படம் 'லேடீஸ் ஒன்லி' என்ற பெயரில் எடுக்கப்பட்டது. அந்தப் படத்தில் நாகேஷ் வேடத்தில் நடித்தவர் கமல். ஆனால் அந்தப் படம் சில காரணங்களால் வெளிவரவில்லை. சர்வர் சுந்தரம், நீர் குமிழி, தில்லானா மோகானாம்பாள், திருவிளையாடல், மகளிர் மட்டும், தசாவதாரம் என அவர் நடித்த படங்களை பட்டியலிட்டால், பிலிம் நியூஸ் ஆனந்தன் கணக்கின்படி, நாகேஷ் 600 திரைப்படங்களுக்கும் அதிகமாக நடித்துள்ளார். வயோதிகம் சூழந்தபோதும், இவரது நடிப்பின் வேகம் தணியவில்லை. ரஜினி, கமலுக்கே சவால் விடும் வில்லாதி வில்லன் கேரக்டர்களையும் அசால்ட்டாக நடித்து அட்ராசிட்டி செய்தவர் நாகேஷ். 'ஆபூர்வ சகோதரர்கள்' படத்தில் கமலையும், 'அதிசய பிறவி' படத்தில் ரஜினியையும் உப்பு தின்று தண்ணீர் குடிக்க வைக்கும் மோஸ்ட் வாண்டட் வில்லன். கமலுடன் நெருங்கிய பாசப்பிணைப்பு கொண்டிருந்த நாகேஷ், தனது இறப்பிற்கு முன்பு கடைசியாக நடித்ததும் கமலுடன் தான். 'தசாவதாரம்' திரைப்படம்தான் அவரது திரையுலக வாழ்வில் ரசிகர்களுக்கு கிடைத்த கடைசிப் பொக்கிஷம். தனது நடிப்பிற்கு உயர்வான விருதுகள் கிடைக்காததைக் கூட அவர் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ரசிகனின் மனம் மகிழ்ந்த சிரிப்பையே தனக்கான விருதாக ஏற்றுக் கொண்டவர்.

ஒரு முறை, ரசிகர் ஒருவர் நாகேஷிடம், "உங்களுக்கு ஹீரோ மாதிரி பெர்சனாலிட்டி எல்லாம் இல்லை. ஆனா, நடிப்பு டான்ஸ் எல்லாவற்றிலும் பிரமாதப்படுத்துறீங்களேஞ் எப்படி உங்களால் இப்படி நடிக்க முடியுது?" என்றார். சிரித்தபடியே நாகேஷ், "உங்க வீட்ல ஆட்டுக்கல் இருக்குமில்லையாஞ் அதுல இட்லி, தோசைக்கு மாவு அரைச்சு பார்த்திருக்கீங்களா? ஆறு மாசம், ஒரு வருஷத்துக்கு ஒரு தடவை அந்த ஆட்டுக் கல்லை கொத்து

வைப்பாங்க. எதுக்கு தெரியுமா? ஆட்டுக்கல்லை பொளிஞ்சாஞ் மாவு நன்றாக அரைபடும்; இட்லி நன்றாக வரும். ருசி உசத்தியா இருக்கும். என் முகமும் ஆட்டுக்கல்லைப் போல்தான். ஆண்டவன் "அம்மை' என்கிற உளியை வெச்சு முகம் முழுக்க, நல்லா பொளிஞ்சுட்டாரு. அதனால் தான் நடிப்புங்கிற இட்லி நல்லா வருது' என்றார். இந்த பதில் ரசிகரை நெகிழ வைத்தது. "சிரித்து வாழ வேண்டும்' என்ற வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தில் நாகேஷ் இதைத் தெரிவித்திருந்தார்.

வசன உச்சரிப்பு ஒரு நடிகருக்கு மிக அவசியம். முக பாவனைகள் மிக மிக அவசியம். எல்லாவற்றுக்கும் மேலாக பாடி லாங்வேஜ் எனும் உடல்மொழி ரொம்பவே அவசியம். வசனம் பேசி, முகத்தில் உணர்ச்சியைக் காட்டி, உடல்மொழியிலும் அந்த உணர்வுகளை நமக்குக் கடத்துகிற நடிகர்கள்... கலைஞர்கள். மகா கலைஞர்கள். அப்படியான உன்னதக் கலைஞன்... நாகேஷ்.

ஒல்லியான தேகம்தான். வேலை பார்த்துக்கொண்டே நாடகம், நாடகத்தில் நடித்தபடியே சினிமாவில் வாய்ப்பு தேடுதல்... என தொடர்ந்த முயற்சிகளும் முயற்சிகளின் போது பட்ட அவமானங்களும் கொஞ்சநஞ்சமல்ல. ஆனாலும் நாடகத்தில் அங்கே ஒன்று இங்கே ஒன்று என வாய்ப்புகள் வந்தன.

கவிஞர் வாலியும் நாகேஷும் நண்பர்கள். ஓர் அறையில் இருவரும் தங்கியிருந்தார்கள். 'டேய் ரங்கராஜா. உன் கைக்கு இந்த வாட்ச் நல்லா இல்லடா. கழட்டிரு' என்பாராம் நாகேஷ். அவரும் கழற்றித் தருவார். பிறகு அந்த வாட்ச் அடகுக்கடைக்குச் சென்று பணமாகி, ஹோட்டலுக்கும் சினிமாவுக்குமாகப் பயன்படுத்தப்படும். நாகேஷ் பாக்கெட்டில் காசு இருந்தால், அது வாலிக்கானது. வாலியிடம் இருந்தால் அது நாகேஷின் பணம்.

சினிமா தேவதை, நாகேஷை இருகரம் கொண்டு வரவேற்றாள். படங்கள் வரத்தொடங்கின. நாகேஷின் நடிப்புத் திறனைக் கண்டு வியந்த கே.பாலசந்தர், தன் முதல் படத்தை இயக்கினார். நாடகங்களில் வாய்ப்பு தந்த பாலசந்தர், திரைத்துறையிலும் பயன்படுத்தினார். தன் முதல்படமான 'நீர்க்குமிழி' படத்தில் நாகேஷை நடிக்கவைத்தார். நாகேஷ் தான் நாயகன். 'நீர்க்குமிழி' படத்தில் நாகேஷின் நடிப்பைக் கண்டு திரையுலகமே வியந்து மிரண்டது.

இதைத் தொடர்ந்து பாலசந்தர் தன் படங்களில், விதம்விதமான பாத்திரங்களைக் கொடுத்தார் நாகேஷுக்கு. அது சின்ன கேரக்டரோ... பெரிய கேரக்டரோ... ஆனால் அங்கே அசத்தலான நடிப்பில் நம்மையெல்லாம் அசரடித்திருப்பார் நாகேஷ். எம்ஜிஆருக்கு நண்பன், சிவாஜிக்கு நண்பன், ஜெமினிக்கு நண்பன், முத்துராமனுக்கு நண்பன், பிறகு ஜெய்சங்கருக்கு நண்பன் என்றெல்லாம் நடித்து வந்த நாகேஷ், 'தில்லுமுல்லு' படத்தில் ரஜினிக்கு நண்பனாகவும் 'பாமா ருக்மணி' படத்தில் பாக்யராஜுக்கு நண்பனாகவும் கூட நடித்திருப்பார்.

அந்தக் காலத்தில், ஏவிஎம் படமாக இருந்தாலும் சரி, தேவர் பிலிம்ஸ் கம்பெனியாக இருந்தாலும் சரி, பத்மினி பிக்சர்ஸ் பி.ஆர்.பந்துலுவாக இருந்தாலும் சரி... ஏபி.நாகராஜனாக இருந்தாலும் சரி... முதலில் நாகேஷ் கால்ஷீட்டை வாங்கிவிடுவார்கள். பிறகுதான் நடிகர்களுக்கு கதை சொல்லுவார்கள். 'நாகேஷ் கால்ஷீட்டை வாங்கிட்டீங்களா. அப்ப படத்தோட வெற்றிக்கு நாப்பது சதவிகிதம் கியாரண்டி' என்று எம்ஜிஆரே சொல்லிப் புகழ்ந்த சம்பவங்கள், வேறு எந்த நகைச்சுவை நடிகருக்கும் இல்லாத புகழாரம்.

'எங்க வீட்டு பிள்ளை' படம் முழுக்க, ஒவ்வொரு முறை பேசும்போதும், வார்த்தையை மாற்றி மாற்றிப் பேசி காமெடி பண்ணுவார். 'தில்லானா மோகனாம்பாள்' படத்தில் வைத்தி எனும் கேரக்டரும் 'திருவிளையாடல்' படத்தின் தருமி கதாபாத்திரமும் சாதாரணன் மிகப்பெரிய நடிகனாகிற 'சர்வர் சுந்தரம்' படமும் சினிமாப் படமெடுக்கிற ஓஹோ புரொடக்ஷன்ஸ் 'காதலிக்க நேரமில்லை' செல்லப்பாவும் கற்பனையில் இருந்து

நிஜமாகவே உருவெடுத்து உலவவிட்டதில் நாகேஷின் நடிப்புக்கும் உடல்மொழிக்கும் பெரும்பங்கு இருக்கிறது. 'பாமா விஜயம்' 'அனுபவி ராஜா அனுபவி' என நாகேஷ் முத்திரை பதிக்காத படங்களே இல்லை.

மாடிப்படி மாது (எதிர்நீச்சல்)வை எவராலும் மறக்கவே முடியாது. 'வேட்டைக்காரன்', 'பாமா விஜயம்', 'கலாட்டா கல்யாணம்', 'நூற்றுக்கு நூறு', 'ஊட்டி வரை உறவு' என நடித்த படங்களைப் பட்டியலிடுவது அசாதாரணம்.

ஒருகட்டத்துக்குப் பிறகு, மீண்டும் நடிப்பில் பிஸியானார் நாகேஷ். நகைச்சுவை நடிகராக, குணச்சித்திர நடிகராக நடித்தவர் இந்த முறை வில்லனாக நடித்தார். அதிலும் வில்லன்களுக்கெல்லாம் பெரிய வில்லன் இவர்தான். அதுதான் 'அபூர்வ சகோதரர்கள்'. இதைத் தொடர்ந்து, 'இந்திரன் சந்திரன்', 'மைக்கேல் மதன காமராஜன்', 'நம்மவர்', 'அவ்வை சண்முகி', 'பஞ்ச தந்திரம்' என அடுத்த ரவுண்டிலும் சிக்ஸர் சிக்ஸராக அடித்து வெளுத்து வாங்கினார் நாகேஷ். அதிலும் 'நம்மவர்' படத்தில் இவர் நடித்ததெல்லாம் வேற லெவல். மகளைப் பறிகொடுத்து அவர் புலம்புகிற அந்தப் பத்துநிமிடங்களும் நம்மை உலுக்கிப் போட்டுவிடுவார்.

'பீம்பாய் பீம்பாய்' அதுவொரு ரகம் காமெடி. 'மேகின்னா ஸ்டெப்னியா?' என்று கேட்கும் 'பஞ்ச தந்திரம்' காமெடி வேறு வகை சரவெடி. 'மகளிர் மட்டும்' படத்தில் பிணமாக நடித்ததைப் பார்த்து, பிணமே எழுந்து வாய்விட்டுச் சிரிக்கும். ஸ்எந்தக் கதாபாத்திரமாக இருந்தாலும் அதில் தன் முத்திரையைப் பதித்துவிடுகிற, தனி முத்திரை பதித்துவிடுகிற மகா கலைஞன், நகைச்சுவை நாயகன் நாகேஷ்... சாகாவரம் பெற்ற கலைஞன். பூமியும் வானமும் உள்ளவரை, பூமிக்கும் வானுக்குமாக விஸ்வரூபமெடுத்து நின்றிருப்பார் நாகேஷ். மக்கள் மனங்களின் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பார்.

ஐம்பது ஆண்டுக்கும் மேற்பட்ட தமிழ் சினிமா வாழ்க்கையில் மனோரமாவும், நாகேஷும் ஏராளமான படங்களில் இணைந்து நடித்திருக்கின்றனர். நாகேஷின் மனைவி ரெஜினாவுடன், மனோரமாவுக்கு மிகுந்த நட்பு உண்டு. ஒருமுறை நாகேஷ், 'எப்போது அவர் `கட்' என்கிறாரோ? எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். கடவுள் எப்பவுமே `டூ லேட் ஆசாமி' என்று மரணத்தைக் கூட ரசனையான பதிலாக சொல்லியிருக்கிறார்.

அடைமொழி கூடிய சினிமா உலகம். இரண்டு படங்கள் நடித்தாலே பெயருக்கு முன்னே பட்டம் வைத்துக் கொள்கிற உலகில், நாகேஷுக்கு எந்த அடைமொழியும் இல்லை என்பது ஆச்சரியம்தான். ஆனால் என்ன... நகைச்சுவையின் இன்னொரு பெயர்... நாகேஷ் என்கிறது சினிமா அகராதி. 2009ல் கடவுள் இவரை தன்னருகே அழைத்துக் கொண்டான். நிச்சயம் நாகேஷ் அங்கேயும் பலரைச் சிரிக்க வைத்துக் கொண்டிருப்பார். கண்ணதாசன் சொன்னதைப் போல.. இவரைப் போன்ற கலைஞர்கள்.. நிரந்தனமானவர்கள்.. அழிவதில்லை.. எந்த நிலையிலும் இவர்களுக்கு மரணமில்லை!

நாகேஷ் எனும் கலைஞனுக்கு காலநிர்ணயமெல்லாம் இல்லை. காலங்களைக் கடந்தும் நாகேஷின் புகழ் இருந்துகொண்டே இருக்கும்.

I'll break your teeth

சரித்திரத் தொடர்

22. கடலரசி நிகழ்த்திய கன்னிப் போர்!

கொற்றவன்

போர்ச்சங்கு முழங்கியபடி தூரத்தில் வந்து கொண்டிருக்கும் அந்த பிரம்மாண்டமான கப்பலைப் பார்த்த மாத்திரத்திலேயே, அக்கப்பல் தங்களுக்கான இறுதிச் சங்கை ஒலிக்கிறது எனக் கணித்துவிட்டான் மிக்கான்.

அப்படியொரு கப்பலைத் தன் வாழ்நாளில் முதன்முறையாக கண்டவனுக்கு, கப்பலின் கட்டுமானத்தையும் ஓரளவு ஊகிக்க முடிந்தது.

அறுநூறு வீரர்களாவது அக்கப்பலில் இருக்கக்கூடும் என்பது அவனது அனுமானமாக இருந்தது. கடற்கொள்ளையர்களின் கப்பலிலேயே தங்களது கப்பல்தான் வலுமிக்கது, எளிதில் அழித்துவிட முடியாதது என்ற எண்ணத்துடன் இருந்து வந்த அதுவரையிலான நினைப்பு அவனுக்குள் நொறுங்கத் தொடங்கியது.

அப்போது அங்கு விரைந்து வந்தான் சிமோ.

"மிக்கான்! அந்த ராட்சத கப்பல், நம்மை நோக்கித்தான் வந்து கொண்டிருக்கிறது. இன்னமும் நீ அதையே வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கப் போகிறாயா?"

"என்ன செய்யச் சொல்கிறாய்? இறப்பது உறுதியாகிவிட்டபின் ஏன் ஆர்ப்பாட்டம் செய்யவேண்டும்?"

அதைக்கேட்டதும் சிமோ பல்லைக் கடித்தபடி உறுமினான். "கோழையே! இப்படிப் பேச உனக்கு வெட்கமாக இல்லை?"

ஆனால் மிக்கானோ, எவ்விதச் சலனமும் இல்லாமல் தன் பார்வையை விலக்காமல் ஏளனமாய் புன்னகைத்தபடி கூறினான், "நீதான் வெட்கப்பட வேண்டும். நீதான் வேதனைப்பட வேண்டும். உன்னால்தானே இப்படியொரு நிலை எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கிறது!"

"மிக்கான்! என் கோபத்தைத் தூண்டாதே!"

"அடேய் சிமோ! உன் கோபத்தால்தான் இவ்வளவு தொல்லையும்!"

மிக்கானின் வார்த்தைகள் மேலும் கோபத்தை உண்டாக்கினாலும், அதில் ஒளிந்திருக்கும் உண்மை, சிமோவுக்குள் முள்ளாய் தைத்தது.

உணரத் தொடங்கிவிட்டால், உணர்ச்சியை விடவும் உண்மைதான் உரக்கப் பேசும்!

உண்மை உரக்க பேசியது சிமோவுக்குள். அதனால் என்ன பேசுவதென்றே தெரியாமல் சில கணங்கள் அமைதியில் ஆழ்ந்தான்.

"உயிர் பிழைப்பதே கடினம் என்றான பிறகு, இக்கப்பலை நாம் எப்படிக் காப்பாற்றப்

போகிறோம்?" என்ற மிக்கான் சிமோவைப் பொருட்படுத்தாமல் நடக்கத் தொடங்கினான்.

அதே நேரம் கடலரசியில்.. 780

"இளவரசி! எக்காரணம் கொண்டும் கப்பலின் மேல் தளத்துக்குப் பெண்கள் யாரும் வரக்கூடாது! எரியம்புகள் வந்துவிழும். போரைக் காண வேண்டும் என்றால், இரண்டாம் தளத்தின் சாளரங்கள் வழியே பார்க்கலாம். எச்சரிக்கையுடன் இருங்கள்!" வில்லவன் கூறியதைச் செவிமடுத்த தியோதாரா ஆமோதித்தவாறு தலையசைத்தாலும், சற்றே கவலையுடன் மறுமொழி பகர்ந்தாள்.

"ஆகட்டும்! தங்கள் வீரத்தை நான் அறிவேன் என்றாலும், தாங்களும் மிகக் கவனமாக இருங்கள். அவர்கள் மிகக் கொடூரமானவர்கள்!"

"அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். கடலரசிக்கு முன் அவர்கள் தூசுக்குச் சமானம்! நான் பார்த்துக் கொள்கிறேன். ஆமாம், தங்கள் தோழி எங்கே?" யோசித்தவாறே வினவினான்.

"இதோ வந்துவிட்டேன்!" என்றவாறு மேல் தளத்திலிருந்து படிகளில் இறங்கி ஓடி வந்தாள் தாலியா.

அவர்களது உரையாடல் நிகழ்ந்து கொண்டிருந்தது கடலரசி முகப்பின் இரண்டாம் தளத்தில்...

அதேநேரம், கடலரசியின் பின்பக்கத்தில், மேல்தளத்தை நோக்கிப் படிகளில் ஏறிய வளவத்திரையன், தன்னுடன் வரும் ஆறு வீரர்களுக்கும் உத்தரவுகளை இட்டபடி நடந்தான்.

"கப்பலின் முன்பக்கத்தில் நிற்கும் மதியொளியுடன் இணைந்துகொள்ளுங்கள்!" என்றவனை, வீரர்கள் அறுவரும் வணங்கி விட்டு ஓடினர்

கடலரசியின் வலப்புறப் பக்கவாட்டில் நின்றபடி கடற்கொள்ளையரின் கப்பல் நிலவரங்களைக் கவனிக்கும் பெரியவர் முதுகண்ணனாரை நோக்கி நடந்தான் வளவத்திரையன்.

"வா வளவத்திரையா! அதோ!.. அக்கப்பல் தீபங்கள் அணைக்கப்பட்டு இருளில் மறையப் பார்க்கிறது. ஆனால் நிலவொளி அதற்கு வாய்ப்பளிக்காது!

"ஆமாம் ஐயா! அவர்கள் நாம் வருவதை அறிந்து

போரிடாமல் ஒளிந்து கொள்ள முயற்சிக்கிறார்கள். அவ்வாறானால் புறம்முதுகிடுவோரை எப்படித் தாக்குவது?" வளவத்திரையன் சற்று யோசனையுடன் வினவினான்

"ஊருக்குள் புகுந்த புலி பதுங்கி இருக்கிறது என்றால் தாக்காமல் விடலாமா? அப்பாவிப் பெண்டிரையும் குழந்தைகளையும் தனக்கு இரையாக்கும்வரை வேடிக்கை பார்ப்பதா வீரம்?" பெரியவர் முதுகண்ணனார் விளக்கிய விதத்தில் வளவத்திரையனுக்கு ஐயம் அகன்றது.

"போர்ச் சங்கு ஊதி ஆயிற்று. அவர்களும் ஆயத்தமாகவே இருப்பார்கள் எனத்தான் நினைக்கிறேன். ஆயினும் நாம் நெருங்கி வரட்டும் என எதிர்பார்ப்பார்கள்." என்றான் வளவத்திரையன்.

"வளவத்திரையா! நீ வீரன் என்பதனால் நேர்முகமாகச் சிந்திக்கிறாய். ஆனால், வீரர்களுக்கும் முரடர்களுக்கும் நிரம்ப வேறுபாடு இருக்கிறது. வீரர்கள் நேர்வழி செல்பவர்கள், முரடர்கள் குறுக்கு வழியில் செல்பவர்கள். எனவே இவர்களிடம் நாம் நேர்மையை.." முதுகண்ணனார் முடிப்பதற்குள் 'தொம்' என்ற ஓசையுடன் தேங்காய் அளவுக்கு ஒரு கல் வந்து அவர்கள் இருவருக்கும் நடுவே விழுந்தது.

அதைத் தொடர்ந்து கடலரசியின் மாலுமி ஒருவனை பலமாக ஒரு கல் தாக்கியதில், "அய்யோ!.." என அலறியபடி மல்லாந்து விழுந்தான்.

"பார்த்தாயா? இவர்களிடம் நேர்மையை எதிர்பார்க்கமுடியுமா? எவ்விதமுன்னறிவிப்புமின்றி எறிகல் விடுகிறார்கள்." கூறிய பெரியவரைச் சடாரெனப் பாய்ந்து, கட்டியணைத்து லாவகமாக உருண்டான் வளவத்திரையன்.

அடுத்த கணமே பெரியவர் நின்ற இடத்தில் ஒரு பெருங்கல் வந்து விழுந்தது.

பெரியவரைக் கைத்தாங்கலாகத் தூக்கிப் பிடித்தவன் அவரைப் பாதுகாப்பாக அணைத்தபடி, "ஐயா, அவர்கள் தாக்குதலைத் தொடங்கி விட்டார்கள். தாங்கள் விரைவாக இரண்டாம் தளத்துக்குச் செல்லுங்கள்." என்றவாறே விறுவிறுவெனப் படிகளில் கொண்டு வந்து நிறுத்தி, "இறங்குங்கள் ஐயா!" என்றவன், மீண்டும் மேல்தளத்துக்கு விரைந்தான்.

"எல்லோரும் எச்சரிக்கையாக இருங்கள். மேல்தளத்தில் இருப்பவர்கள் கப்பலின் முன்பக்கத்துக்கு விரையுங்கள், எறிகல் அடிக்கிறார்கள்" அவனது குரல் ஆணையாக ஒலித்தது.

அதேநேரம் கடலரசியின் பக்கவாட்டில்,

கொள்ளையர்களின் இரண்டு கப்பல்கள் நெருங்கத் தொடங்கியிருந்தன. அக்கப்பல்களிலிருந்து அம்புகள் பாய்ந்து வந்து மேல்தளத்தில் குத்திட்டு நின்றன.

மேல்தளம் முழுவதும் எதிரிகளின் தாக்குதலால் ஆக்கிரமிக்கப்படுவதை உணர்ந்தான் வளவத்திரையன். கடலரசி தங்களைத் தாக்க வருவதற்குள் அவர்கள் முந்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது புரிந்தது.

கடலரசியை நோக்கி மும்முனைத் தாக்குதலைத் தொடங்கினர் கொள்ளையர்.

விடம் தோய்ந்த அம்புகளும், தீப்பந்தங்களும் விர்விர்ரெனப் பாய்ந்து வந்து கொண்டே இருந்தன.

"மதியொளி! நமது திட்டப்படி செயலாற்று!" உத்தரவிட்டபடியே புலிப் பாய்ச்சலில், இரண்டு கேடயங்களைத் தனது வலதும் இடதுமாகப் ஏந்தித் தற்காத்தபடி மேல்தளத்தின் மையப்பகுதியை நோக்கிப் பாய்ந்தோடினான் வளவத்திரையன்.

கடலரசியின் மேல்தளம் சற்றைக்கெல்லாம் வெறிச்சோடியது. ஆனால் மதியொளியும் அவனுடன் இணைந்த ஆறு வீரகளும் மேல்தளத்தில் நடப்பதைக் கவனைத்த வண்ணமே இருந்தனர்.

எவ்விதப் பதிலடியும் தராமல் மிக்கானின் கப்பலை நோக்கியே விரைந்தது கடலரசி.

அளவிலும் உருவிலும் பெரிதான கடலரசியின் கால்பங்கு அளவுக்கே இருந்தன பக்கவாட்டில் தாக்குதல் தொடர்ந்த கப்பல்கள். அவை எறிந்த கற்களும் அம்புகளும் கடலரசியின் மேல்தளத்தில் விழுந்தனவேயொழிய அதனால் எவ்விதச் சேதமும் விளையவில்லை!

"கப்பலின் வேகத்தைக் கூட்டுங்கள்!.." வளவத்திரையனின் பெருங்குரல் கப்பலின் முகப்பில் நின்றிருந்த வில்லவனையும் எட்டியது.

கப்பல் தலைவனின் குரல் கேட்டதும், சட்டென கடலரசியின் வேகம் கூடியது.

பக்கவாட்டில் நின்று தாக்கிய கப்பல்கள், தங்களின் தாக்குதல் எல்லையைத் தாண்டி கடலரசி கடந்து போவதைக் கண்டு குழம்பின. ஆதலால், அவை தாக்குதலைக் கைவிட்டு கடலரசியினை விரட்ட முனைந்தன.

தங்கள் கப்பலை எதிர்கொண்டு வரும் கடலரசி திடுமென வேகமெடுத்து வருவதைக் கண்ட சிமோ குழம்பினான்.

"மிக்கான் இதென்ன? நம் மீது தாக்குதல் தொடுப்பதற்கு பதிலாக நம் கப்பலை மோதி உடைப்பது போல் வேகமெடுத்து வருகிறதே இக்கப்பல்?" அலறினான் சிமோ.

"ஆம் அதுதான் அவர்கள் திட்டம்!

நம் கப்பலை மோதி உடைக்கத்தான் அவர்கள் வேகமெடுத்திருக்கிறார்கள்!" கடலரசியின் திட்டத்தை கணப்பொழுதில் உணர்ந்து கொண்ட மிக்கான் கூறினான்.



"மோதி உடைத்தால் அக்கப்பலும்தானே சேதம் அடையும்! அதுகூடத் தெரியாத மடையர்களா அவர்கள்?"

"அவர்கள் மடையர்களா அல்ல, அதைக் கணக்கில் கொள்ளாத நாம்தான் மடையர்கள்! இனியும் இங்கே நின்று தாக்கிக் கொண்டிருப்பதில் பலனில்லை! யோசிக்க நேரமில்லை!" என்ற மிக்கான் அங்கிருந்து விரைவாக ஓடியபடி தன் மாலுமிகளுக்குக் கட்டளையிட்டான்.

"கப்பலை விரைவாக வடமேற்கு நோக்கித் திருப்பிச் செலுத்துங்கள்!"

அந்தச் சமயத்தில் எழுந்த வளவத்திரையன் குரல், சிமோவுக்கும் நன்றாகக் கேட்டது.

"வேல்வளையத்தை இறக்குங்கள்!"

அந்த உத்தரவு கேட்டதும், .

கடலரசியின் கீழ்த்தளம் உயிர்பெற்றது. முகப்புப் பகுதியில் செங்குத்தாக நின்றிருந்த வேல் கம்புகள் முன்னோக்கி மடங்கி குத்தீட்டி போல் பக்கவாட்டில் நீண்டன.

"அம்புகள் பாயட்டும்!" மீண்டும் வளவத்திரையனின் குரல் ஒலிக்க, சிமோ முதன்முறையாக நடுக்கம் கண்டான்.

தங்கள் கப்பலைக் குத்திக் கிழிக்கும் வண்ணம் வேல்களுடன் வரும் அக்கப்பலும், தொடர்ந்து மேலிருந்து பாயும் அம்புகளும் சில நொடிகளில் நம் கதையினை முடித்து விடும் என்பது அவனுக்குப் புரிந்தது.

கடலரசியினின்று விர்விர்ரெனக் கிளம்பி கொள்ளையர் மரக்கலங்களின் மீது பாய்ந்த அம்புகளையும், அதேநேரம் பக்கவாட்டில் விரட்டி வரும் எதிரிக் கலங்களின் மீதும் தாக்குதல் தொடங்கிவிட்டதையும் இரண்டாம் தளத்தின் சாளரத்தின் வழியே கண்டார்கள் தியோதாராவும் தாலியாவும்.

சற்றைக்கெல்லாம் பக்கவாட்டில் வந்த கொள்ளையர் மரக்கலத்தில் திடீரென கூச்சலும் குழப்பமும் எழுந்தது.

அதேநேரம் கடலரசி மோதியதில் படாரென பெரும் ஓசை எழுந்தது. ஏற்கெனவே பக்கவாட்டாகத் திரும்பிப் பயணிக்கத் தொடங்கிய மிக்கானின் கப்பல் இரண்டாகப் பிளந்தது.

பக்கவாட்டில் வந்து கடலரசியைத் தாக்கிக் கொண்டிருந்த இரண்டு கப்பல்களில் இருந்தவர்களும், தங்கள் மீது பொழிந்த அம்பு மழையிலிருந்து தப்பிக்க அங்கும் இங்கும் ஓடியபடியே தங்கள் தலைவனின் கப்பல் இரண்டாகப் பிளந்த காட்சியைக் கண்டு மிரண்டார்கள்.

கடலரசியின் வலது பக்கவாட்டில் இருந்த படகுகளைப் படிக்கட்டுகளாகப் பயன்படுத்தி இறங்கி நின்றான் வில்லவன். அவனுடன் இருபது வீரர்கள் உடனிருந்தனர்.

அவனை இரண்டாம் தளத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த தியோதாரா "வில்லவரே கவனம்!" எனக் குரல் கொடுத்தாள். அவளை நோக்கித் திரும்பியவன், "அதர்மத்தை அழிக்கும் தர்மத்தைக் கண்டு மகிழ்ச்சியுறுங்கள்!" என்றவாறு புன்சிரிப்பை உதிர்த்தான்.

கடலரசியின் மீதிருந்து வீசப்பட்ட கொக்கிகள் பக்கவாட்டுக் கப்பல்களில் சென்று விழுந்ததும், கடலரசியை நோக்கி அவ்விரண்டு கப்பல்களும் இழுக்கப்பட்டன.

கொக்கிகளை விடுவிக்க வந்த கொள்ளையர்களை கடலரசியிடமிருந்து பாய்ந்த அம்பு மழை பலி வாங்கியது.

அதேநேரம் கடலரசியின் முகப்பின் அருகே மிக்கானின் கப்பல் உடைந்து நொறுங்கியதால், சிமோவும் மிக்கானும் சில வீரர்களும் கடலில் வீழ்ந்து நீந்தத் தொடங்கினர்.

அப்போது எழுந்த குரல் வில்லவனின் கவனத்தை ஈர்த்தது.

"காப்பாற்றுங்கள்! நான் சேரநாட்டைச் சேர்ந்தவன்!"

குரல் வந்த திசையை நோக்கித் திரும்பினான் வில்லவன். அங்கே உடைந்த கப்பலின் ஒரு துண்டு பலகையைப் பிடித்தபடி மிதந்து கொண்டிருந்தது ஓர் உருவம்.

அந்த அபயக் குரல் வளவத்திரையனுக்கும் கேட்டதில், "நிறுத்துங்கள் கணைகளை!" எனக் குரல் கொடுத்தான்.

அதைக் கேட்ட நொடியே அம்பு மழை அடங்கியது.

அடுத்த சில நொடிகளில் கொள்ளையரிடமிருந்து எவ்வித எதிர்ப்புமில்லாமல் அடங்கியது.

கடலரசி தனது கன்னிப் போரில், கயவர்களுக்கு எதிரான வெற்றியைத் தொடங்கியது.

அடங்கியதும் தொடங்கியதும் அது முதலுமல்ல முடிவுமல்ல என்பதைக் கடலரசி இன்னும் காணத்தான் போகிறாள் என்பதற்கு சாட்சியாக மேலெழுந்து நீந்திய வெண்மதி தண்ணொளி வீசியது.

கடல் காற்றில் ஈரப்பதம் இருப்பினும், கடலரசியின் மும்முனைகளிலும் சுவாலைகள் சிதறிக் கடலில் ஆங்காங்கே சொக்கப் பனைகளாக எரிந்து கொண்டிருந்தன.

(கனவு தொடரும்...)

மேலெழும் கோள வடிவ வானம்

மனம் பித்தின் நிறைகுடத்தில்
விழுந்து கிடந்து அமிழ்ந்து ஜீவிக்கிறது
சுவரில் மோதி மேலெழும் கூடற்ற கோளமது!
ஊசிகளும் மருந்துகளும் நிறைந்து
மீண்டும் மூழ்குகிறது
உடைந்த நாற்காலியின் கனவுகள்

அதைச் சீண்டி மீண்டும் மேலெழுப்புகின்றன
அவ்வப்போது வரும்
பாக்கெட் குழப்பங்கள்
பேனாவரை நீண்டு
பேப்பரில் நெளியத் துவங்கும் போதே
துண்டு வெளிச்சங்கள்
குளத்து நீரில் குதியாட்டம் போட்டபடி
கை நீட்டி அழைக்கின்றன
“வா” என் வெம்மையின் இரத்தம் பூசி
ஆட்டத்தை துவக்கு என்று

கெஞ்சல்கள் எல்லா நாட்களின் மீதும்
சாம்பல் மழையைப் பொழிகின்றன
இரவெங்கும்!

ஆமீரா பாலன்

குறிஞ்சியின் முல்லைகள்

பாலைவனத்தணல்,
சற்று ஓய்ந்தால் கள்ளிச்செடி,
பசும் பாசமென்று நெருங்கிட
நஞ்சினால் நிரம்பிய ஊற்று,
எஞ்சி அங்கங்கே சொட்டிக்கிடக்கும்

சில அன்புத்துளிகள்.
தாகம் தணியும் முன்
துடைத்துச்செல்லும்
வலிய விதி.

அதனினும் வலியதாம்
அத்தனையும் கடந்து
அவள் கண்ட ஞானஒளி.
விதியால் பாலைவனமான முல்லையது
தன்னொளியால் மீண்டு வந்த
மலர்மனமது.

கோபத்தை மட்டுமே
ஊற்றி வார்க்கப்பட்டதாய்
சித்திரிக்கப்பட்டிருக்கும்
அந்தக் கொற்றவைகளுக்கு
போர் ரேகைகள் படர்ந்து கடந்த
பாதங்களில் அகப்பட்டிருக்கும்,
ஏகாந்த மென்கானகத்தின் சாயல்.

தனுவிஷ்ணு

கண்ணாடியின் ஞானோபதேசம் !

கார்த்திகையின் பெருக்கில்
தாவிக் குதிக்கும் கெண்டைகளாய்,
குளத்து நீரில் நழுவிச் செல்லும் அர்த்தங்கள்.

தூக்க சிரமமான அகராதியில் தேய்ந்து
பழுப்பேறி வாசிக்க முடியாமல்
ஆகிவிட்ட வரிகள்,

அழியும் மை உருவின் ஆழத்துள் சென்று
பதிந்து புதையும் பேதங்களை
சுமந்து அடைகாக்கும் சொற்கள்.

அடைக்கலம் தேடி மொழிக்குள் குழிபறித்து,
பதுங்கி ஒளிந்து கொண்ட உவமைகள்
பட்டிக்குள் சேர்ந்த உருவகங்கள்
பஞ்சாரத்துள் அடைத்த படிமங்கள்
அனைத்தையும் அவற்றின்
சுருக்கு முடிச்சை அவிழ்த்து
விடுவித்து விட்டால்,

இப்போது நம்முன் இருப்பதோ
குவைகள் அசைய
பரிபூரணம் பொருந்தும்
மொழியின் நிர்வாணம்.

எதிரே இருக்கும் தாளில்
இருப்பது எதுவாயினும்,
இனிப்புப் பெட்டிக்குள் போர்த்திய
எண்ணெய் காகிதம் போல்,

நாம் வாசிக்கப்போகும் வரிகளில்
சப்திக்க தவமிருக்கும் அசைகள்
சேரக் காத்திருக்கும்
சொல் இணைவுகள்
மற்றும் அவற்றின் கிடக்கைகளை
நம் மனம் போன போக்கில்
வடித்துக் கொள்ளலாம்.

வேட்டுச் சத்தத்தில்
வெளியேறிவிட்ட பறவைகள்
விட்டுச்சென்ற தனி மரமாய்
கை தவறிய கண்ணாடியின்
இன்மையில் வாசிப்பதுதான்
எவ்வளவு இனிமையானது!

வேணுகோபால் தயாநிதி

நெருப்பு

யாவரும் அஞ்சுவர் நெருப்பை
ஓ ஆம்! முற்றிலும்!
எதையும் இரையாக்கும்
அடியோடு அழித்துவிடும்

தீ கங்கைத் தீண்டினால் நீ
எரிந்து சாம்பர் ஆகி விடலாம்
அல்லது புடம் போட்ட தங்கம்
போல் மிளிரலாம்

ஆனால் அது பெரிய சூது —
பகடை ஆட்டம்
கிளை விட்டுக் கிளை தாவும் மந்தியின்
திண்மை வேண்டும்
பலரும் துணிவதில்லை

எனவே ஒரு அக்காவைப் போலவோ
ஒரு மீராவைப் போலவோ அல்லது
தியாகேசரைப் போலவோ
சுடர் விட்டு எரியாமல்

கணப்பில் குளிர் காயவே விரும்புகின்றனர்
விரும்பி மந்திர தந்திரங்களை யாசித்து
ஒரு குருவையோ, மனித சாமியையோ
வேறு பல அகட விகடர்களையோ
நம்பி வழி நடக்கின்றனர்

அவர்களால் உயிரற்ற கவிதையைத் தான்
சமைக்க முடிகிறது

நேமியன்

விக்ரம் — துருவ் இணைந்து நடித்த 'மகான்' திரைப்படம் கடந்த மாதம் அமேசான் பிரைம் ஓடிடி தளத்தில் வெளியாகி கலவையான விமர்சனங்களைப் பெற்று வருகிற நிலையில், 'மகான்' குறித்து துருவ் பேட்டியளித்த போது, "நடிகர் விஜய்யின் மகன் சஞ்சயும் நானும் சிறுவயதிலிருந்தே நல்ல நண்பர்கள். அவர் நல்ல கதையுடன் வந்தால் அதில் நடிக்க, நான் தயார். ஹிந்திப் படங்களைப் போல இரு நடிகர்களின் வாரிசுகள் இணையும் படமாக அது இருக்கும்!" என்று தெரிவித்துள்ளார்.

வாரிசுகளின் காலம்!

மீண்டும் வரும் காஜல்!

'மகான்' அழைக்கும் மகன்!?

மீண்டு வருவாரா காஜல்?

'கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால்' படத்துக்கு பிறகு துல்கர் சல்மான் தமிழில் நடித்துள்ள படம் 'ஹே சினாமிகா'. நடன இயக்குநர் பிருந்தா இயக்கியுள்ளார். துல்கருக்கு ஜோடியாக காஜல் அகர்வால், அதிதி ராவ் நடித்துள்ளனர். கோவிந்த் வசந்தா இசையில், 'அச்சமில்லை,' 'ஹே சினாமிகா' ஆகிய பாடல்கள் வெளியாகியது. தற்போது கோவிந்த் வசந்தா பாடிய 'மேகம்' எனும் பாடல் படக்குழுவினரால் வெளியிடப்பட்டுள்ளது.

13 YEARS ANNIVERSARY

விக்னேஷ் சிவன் இயக்கத்தில் விஜய் சேதுபதி, நயன்தாரா, சமந்தா இணைந்து நடித்துள்ள படம் 'காத்து வாக்குல ரெண்டு காதல்.' செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோஸ் தயாரித்துள்ள இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைத்துள்ளார். பாடல்கள் ஏற்கனவே வெளியாகிய நிலையில், படத்தின் டீசர் தற்போது வெளியாகி வரவேற்பைப் பெற்றுள்ளது.

'காத்து வாக்குல ரெண்டு காதல்.'

இரட்டை வேடங்களில் தனுஷ்?

'காத்து வாக்குல ரெண்டு செய்தி?'

ஒண்டியா வந்தாலே தாங்காது! ரெண்டுன்னா?..

தனுஷ் நாயகனாக நடிக்க, செல்வராகவன் இயக்கி வரும் 'நானே வருவேன்' படத்தின் புதிய போஸ்டர் தற்போது வைரலாகி வருகிறது. போஸ்டரில் தாடியுடன் கண்ணாடி அணிந்து ஒரு தோற்றத்திலும், தாடி மீசை இல்லாமல் இளமையான தோற்றத்திலும் என இரண்டு விதமான தோற்றங்களில் தனுஷ் இருப்பதனால், இரட்டை வேடங்களில் நடிக்கிறாரா அல்லது இரண்டு காலகட்ட கதையா என்ற கேள்வி ரசிகர்களிடையே எழுந்துள்ளது.

13 YEARS ANNIVERSARY

தலவலம்

'ஆச்சாள்புரம்'

புவனகிரி செயபாலன்

சோழ நாட்டின் காவிரி வடகரையில் உள்ள 276 தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்களில் இதுவும் ஒன்று. ஈசன் சுயம்பு மூர்த்தியாக உள்ளார். இறைவன் சிவலோகத்தியாகேசர். இறைவி வெண்ணீற்று உமைநங்கை. தீர்த்தம் — பஞ்சாட்சரத் தீர்த்தம், தலவிருட்சம் — மா.

புராணம்

ஆதிகாலத்தில் வசிஷ்டர், பராசரர், பிருகு, சமதக்கனி, விசுவாமித்திரர், அத்திரி, துர்வாசர் போன்ற ரிஷிகள் திருநீறு பூசி உத்திராட்ச மாலையைளீ கழுத்தில் அணிந்து கொண்டு, ஐம்புலன்களையும் அடக்கி ஐந்தெழுத்து (சிவாயநம) மந்திரத்தை உச்சரித்தபடி 16,000 ஆண்டுகள் கடும் தவம் புரிந்தனர். இவர்களின் தவ வலிமையைக் கண்ட ஈசன், உமாதேவியுடன் காட்சியளித்து உங்கள் விருப்பம் யாது? எனக் கேட்க, சிவலோகத்தைக் காட்டி 'அருள் பாலிக்க வேண்டும்!' என வேண்டினர்.

அதற்கு, 'நல்லூர் வாருங்கள்! அங்கு சிவலோகத்தைக் காட்டுவோம்!' என்றார் ஈசன். அதைக்கேட்ட முனிவர்கள், பல தலங்களுக்குச் சென்று வணங்கி இறுதியில் ஆச்சாள்புரம் வந்தனர். அங்குள்ள பஞ்சாட்சரம் தீர்த்தத்தில் நீராடி ஆலயத்தினுள் சென்று ஈசனை வணங்க, அவர்கள் முன் சிவலோகம் தோன்றியது. அதைப் பார்த்து பேரானந்தம் கொண்டு அருள் பெற்றனர்.

இத்தலத்திற்கு சிவலோகம் நல்லூர், திருமணவை, முக்திபுரம், ஆச்சாள்புரம் என்ற பெயர்கள் உள்ளன. வசிஷ்டர் முதலிய முனிவர்களுக்கு சிவலோகத்தைக் காட்டி அருளியதால் இத்தலத்திற்கு சிவலோகம் என்று பெயர். ஆதியில் பிரம்மா பல தலங்களையும் வணங்கிக்கொண்டு சீர்காழி போகும் போது, இத்தலத்திலுள்ள மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலிய சிறப்புகளை கேள்விப்பட்டவுடன் செழிப்பான வளங்களையும் கண்டு 'இது ஒரு நல்லூர்' என்று சொன்னதால், நல்லூர் என்ற பெயர் வந்தது.

திருஞான சம்பந்தர் தனது திருமணத்தில் தம் மனைவி மற்றும் அடியார்களுடன் புடைசூழ எழுந்தருளி இறைவன் அருளால் தோன்றிய சோதியில் கலந்து முக்தி எய்தியமையால் இதற்கு முக்திபுரம் என்று பெயர். திருஞான சம்பந்தர் திருமணத்தின்போது உமையவள் எவ்வித பேதமும் இன்றி எல்லோருக்கும் திருவெண்ணீறு அளித்து சோதியில் புகுவித்த தலம். உமையவளுக்கு ஆயாள் என்ற பெயரும் உண்டு. எனவே ஆயிபுரம் என்பது மருவி ஆச்சாள்புரம் என்றானது.

திருஞானசம்பந்தருக்கு திருமணம் நடந்ததால் 'திருமணவை' என்ற பெயர் பெற்றது.

கோயில்

ஐந்து நிலையுடன் கூடிய ராஜகோபுரம் ஊருக்கு நடுவில் அமைந்துள்ளது. உயர்ந்த மதில் சுவருடன் இரண்டு பிரகாரங்களைக் கொண்டது. சிவலோகத் தியாகேரும், தேவியும் கிழக்கு முகமாக காட்சி

அளிக்கின்றனர். வெளிப்பிரகாரத்தில் உள்ள நூற்றுக்கால் மண்டபத்தில் திருஞானசம்பந்தர், தோத்திரபூரணியுடன் தனிச் சன்னதியில் உள்ளார். பக்கத்தில் சனீஸ்வரர் சன்னதி.

வெளிப்பிரகார தென்மேற்கில் மாவடி விநாயகரும், மேற்கில் முருகரும், வடமேற்கில் உள்ளனர். பார்வதி தேவிக்குச் தனி சன்னதி. தேவி சன்னதிகளில் வழக்கமாக காணப்படும் சிங்கத்திற்கு பதில் இங்கு நந்தி உள்ளார்.

மகா மண்டபத்தின் வடக்கே பள்ளியறையும் சபையும். கிழக்குப் பக்கம் சூரியன், பைரவர், அப்பர், சுந்தரர், சம்பந்தர், சந்திரன் என உள்ளனர். உட்பிரகார தெற்குப் பகுதியில் அறுபத்து மூன்று நாயன்மார்களும், மேற்கில் சோமாஸ்கந்தர், லட்சுமி, விநாயகர், முருகன், சந்திரசேகர் போன்ற உற்சவ மூர்த்திகள் எழுந்தருளி உள்ளனர்.

வடக்கு பக்கத்தில் கைலாசநாதர், நாகநாதர், சுந்தரேஸ்வரர், விஸ்வநாதர், மாதேஸ்வரரும், எட்டு கைகள் கொண்ட துர்க்கையும் காட்சி அளிக்கின்றனர்.

தீர்த்தங்கள்

பஞ்சாட்சர தீர்த்தம், பிருகு தீர்த்தம், அசுவ தீர்த்தம், வசிஷ்ட தீர்த்தம், அத்திரி தீர்த்தம், வியாச தீர்த்தம், மிருகண்டு தீர்த்தம், அகத்திய தீர்த்தம், அக்னி தீர்த்தம் என உள்ளன. பஞ்சாட்சர தீர்த்தத்தைத் தவிர மற்ற தீர்த்தங்கள் முறையே கிழக்கு திசையில் தொடங்கி எண்திசைகளிலும் அமைந்துள்ளன.

பஞ்சாட்சரம் திருத்தம்: ஈசன் தன் கரத்தில் உள்ள சூலத்தால் பூமியில் குத்தி பள்ளம் உண்டாக்கினார். அப்பள்ளத்தில் தன் தலைமுடியில் உள்ள கங்கை நீரால் நிரப்பினார். ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு நான்கு வேதங்களையும் மெய்ப்பொருளாக்கி ஓதுவார்களை நன்னெறி தன்மையுள்ளவர்களாக்கும் பொருட்டுத் இத்தீர்த்தம் உருவாக்கப்பட்டதாக ஐதீகம்.

வேதாந்தன்

வேதாந்தன் எனும் அந்தணன் தன் குலத்தொழிலை விட்டு, காம வயப்பட்டான். அதற்காகப் பொருள் ஈட்ட வழிப்போக்கர்களை வைத்து அவர்களின் பொருள்களை அபகரித்து வாழ்ந்து வந்தான். அவன் பெற்றோர் சொன்ன நல்வழி அறிவுரைகளைக் கேட்கவில்லை. இவன் செயலால் சுற்றத்தார் இவன் மீது பகைமை கொண்டனர். அதனால் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படுமோ எனப் பயந்து ஊரைவிட்டு அகன்று ஊர்ஊராய் திரிய ஆரம்பித்தான்.

அங்கெல்லாம் இவனை ஒத்த குணமுடையவர்கள் நண்பர்கள் ஆகினர். அதனால் இவனது தீய செயல்கள் அதிகமானது. இந்த நிலையில் இவன் முன்ஜென்ம பயனால் இத்தலத்திற்கு வந்தான். இங்கு வந்து இத்தலத்தில் உள்ள தீர்த்தத்தில் நீராடி எழுந்ததும் இவன் கண்ணுக்கு சிவலோகம் தெரிந்தது. பரவசமடைந்து அன்றிரவு அங்கேயே தங்கி ஈசனை வழிபட்டு அடுத்த நாள் முதல் வேறு பல தலங்களுக்கு செல்ல ஆரம்பித்தான்.

வயது முடிந்தவுடன் எமத்தூதுவர்கள் வந்து நரலோகத்துக்கு அழைத்துச் செல்ல முற்பட்டனர். போகும் வழியில் சிவகணங்கள் இவர்கள் முன் தோன்றி, 'இவன் நல்லூரில் உள்ள பஞ்சாட்சரம் தீர்த்தத்தில் நீராடியதால், இவன் செய்த பாவங்கள் தீர்ந்து விட்டன!' என்று கூறி எமத்தூதுவர்களிடமிருந்து இவனை விடுவித்து விமானத்தில் அமர்த்தி கையிலைக்கு அழைத்துச் சென்று ஈசன் முன் நிறுத்தினர். ஈசனைக் காணும் பாக்கியம் பெற்று அவரை வணங்கி அருள்பெற்றான்.

திருமணம் — ஜோதியில் கலத்தல்

சிவபாத இருதயரின் மகனாக, சைவமும் தமிழும் தழைக்க சீர்காழியில் அவதரித்தவர் திருஞானசம்பந்தர். மூன்று வயதில் அம்பிகையால் ஞானப்பால் ஊட்டப்பட்டு சிவஞானம் பெற்றார். ஈசனின் அருளால் அடியார்களுடன் பல சிவத்தலங்களுக்குச் சென்று பதிகங்களைப் பாடி அற்புதங்களை நிகழ்த்தினார்.

சிவனைப் போற்றிப் பாடி திருக்கோலக்கா திருத்தலத்தில் பொற்றாளமும், பட்டீஸ்வரத்தில் முத்துப்பந்தலும், திருவாவடுதுறையில் பொற்கிழியும், திருவீழிமிழலையில் படிக்காசும் பெற்றார். திருமருகலில் விஷத்தால் இறந்த வணிகனைப் பதிகம் பாடி உயிர்ப்பித்தார். திருமறைக்காடு என்னும் வேதாரண்யத்தில் அப்பர் உடன் சேர்ந்து திறக்காத கோயில் கதவைத் திறக்கவும் அடைக்கவும் செய்தார். திருப்பத்தூரில் ஆண்பனை மரத்தை பெண்பனை மரமாக்கினார். சென்னை மயிலாப்பூரில் இறந்து போன பூம்பாவை எனும் பெண்ணை அவளது அஸ்தி மற்றும் எலும்பைக் கொண்டு ஈசன் அருளால் உயிர்ப்பித்தார். இப்படி பல அற்புதங்களை நிகழ்த்திய திருஞானசம்பந்தருக்கு அவரது பதினாறாவது வயதில் திருமணம் செய்து வைக்க முடிவுசெய்தனர்.

திருமணம் செய்து கொள்ள முதலில் மறுத்தவர், ஈசனின் விளையாட்டு தான் இது எனக் கருதி சம்மதித்தார். சீர்காழிக்கு வடகிழக்கே எட்டு மைல் தொலைவில் உள்ள திருநல்லூரில் வசித்து வந்த நம்பியாண்டார் நம்பியின் மகள் தோத்திர பூரணாம்பிகையை மணம் பேசி முடித்தனர்.

திருமணம்

ஆச்சாள்புரம் சிவாலயத்தில் வைகாசி மாதம் மூல நட்சத்திரத்தன்று சம்பந்தருக்கு திருமணம் செய்ய முடிவானது. திருமண நாளன்று திருநீலகண்ட யாழ்ப்பாணர், முருக நாயனார், திருநீலநக்க நாயனார் மற்றும் சம்பந்தரின் உறவினர்களும், அடியார்களும் ஆச்சாள்புரம் சிவாலயத்திற்கு திரண்டனர்.

அப்போது உமையவள் அங்கே தோன்றி திருமணத்தைக் காண வந்த அனைவருக்கும் திருநீறு அளித்தாள். மணமேடையில் சம்பந்தரின் வலப் பக்கம் மணமகளை அமர வைத்தனர். மண விழா வேள்வி சடங்குகளை திருநீலநக்க நாயனார் செய்தார். சம்பந்தர் அக்னியை வலம் வரும்போது 'இருவினைக்கும் வித்தாகிய இல்வாழ்க்கை நம்மைச் சூழ்ந்ததே இனி இவளோடும் அந்தமில் சிவன்தாள் சேர்வேன்' என்று கூறி, 'நல்லூர் பெருமணம்..' எனத் தொடங்கும் பதிகம் பாடினார்.

அப்போது அங்கே அசரீரியாக யாவரும் கேட்கும்வண்ணம் 'சம்பந்தா! இப்போது கருவறையில், எமது லிங்கத் திருமேனியிலிருந்து பெரும் சோதி தோன்றும்! சோதியின் பிளவில் ஏற்படும் வாயிலின் வழியே நீயும், உன் திருமணத்தைக் காண வந்த அனைவரும் சிவசோதியில் புகுந்து என்னிடம் கலந்திடுக!' என்றது. அதே நேரம், கருவறை லிங்கம் பிளந்து வாயில் திறக்க, அதைக் கண்ட சிலர், தயக்கமும்

அச்சமும் கொண்டனர். சம்பந்தர் அவர்களுக்கு 'நமசிவாய' மந்திரத்தின் மேன்மையைக் கூறி 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி..' என்ற பதிகம் பாடி, தம்முடன் வந்தவரை எல்லாம் சோதியில் புகுமாறு சொல்லி, அவரும் தம் மனைவியுடன் சோதியில் புகுந்தார். உடனே கருவறையில் சோதி மறைந்து பிளந்திருந்த சிவலிங்கம் முன்போல் மீண்டும் ஒன்றானது.

தீர்மானித்ததாகவும், கோயிலைக் காப்பாற்றும் நோக்கத்துடன் அங்கிருந்த பிராமணர்கள் கோயிலின் உள்ளே இருக்கும் புனித இடங்களை (மூலஸ்தானம், விக்கிரகங்கள்) அழித்து விடாமல் இருக்கும்படி வேண்டுகோள் விடுத்து திறந்துவிட்டதாகவும், தஞ்சை ஜில்லா கஜத்தின் 254, 255 பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது' எனக் கல்வெட்டில் உள்ளது.

உமையவள் திருநீறு அளித்ததாக தலபுராணம் தெரிவிக்கிறது. எனவே இத்தல அம்பிகைக்கு திருவெண்ணீற்று உமையம்மை என்னும் திருநாமம் வந்தது. இதன் பொருட்டு இத்தல அம்பிகை சன்னிதியில் குங்குமத்திற்கு பதிலாக திருநீறே பிரசாதமாக வழங்கப்படுகிறது. ஆச்சாள் எனும் அம்பிகையே சம்பந்தர் திருமணத்திற்கு திருநீறு வழங்கி அருளியதால் இத்தலத்திற்கு ஆச்சாள்புரம் என்று பெயர் வழங்கலாயிற்று. சம்பந்தர் மற்றும் அவரது திருமணத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் ஈசன் முக்தி அளித்ததால் இத்தல ஈசன், சிவலோக தியாகேசர் என்னும் பெயர் பெற்றார். திருஞானசம்பந்தர் ஈசனைப் போற்றி 11 பதிகங்களைப் பாடியுள்ளார்.

கல்வெட்டுகள்

பெரிய பிரகாரத்தின் மூன்று பக்க மதில்களிலும் உட்பிரகாரத்திலும் வடக்கு பிரகார உட்சுவர்களிலும் கல்வெட்டுகள் உள்ளன. அதிலுள்ள கல்வெட்டு ஒன்றில், 'இவ்விடத்தில் 1749—ல் ஆங்கிலேயருக்கும் தஞ்சை மன்னன் படைகளுக்கும் கடும் போர் நடந்தது. அப்போது லாரன்ஸ் என்பவர் இக்கோயிலை கைப்பற்ற

விக்கிரம சோழன், மூன்றாம் குலோத்துங்கன், இரண்டாம் ராஜராஜ தேவன், மூன்றாம் ராசராசன் போன்றோர் காலங்களிலும், மாறவர்மன், திரிபுவன சக்கரவர்த்தி, பராக்கிரம பாண்டியன் காலத்திலும் வெட்டப்பட்ட கல்வெட்டுக்களில் ஈசனை ஸ்ரீ கைலாசம் உடையார், திருப்பெரு மணமுடைய மகாதேவர், திருப்பெரு மணமுடைய நாயனார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

திருக்காமகோட்டமுடைய நாச்சியாரை எழுந்தருளச் செய்துவர், ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து புலியூர் கோட்டமான குலோத்துங்க சோழவளநாடு நெற்குன்றத்தில் இருந்த சந்திரசேகரன் பசஞ்சி வாணன் என்பவர் இக்கோயிலைக் கட்டினான் என்று கல்வெட்டில் உள்ளது. இவர் நாச்சியாருக்கு விளத்தூர் நாட்டு செம்பியன் நெற்குன்றத்தில் கோயிலுக்கு விட்டிருந்த ஐந்து வேலி நிலம், சரியான வேளாண்மை இல்லததால் இறை பணி செய்ய முடியாமல் போகவே, இதற்கு பதில் வேறு நிலம் கேட்க, செம்பியன்குடியிலேயே மூன்றே மூன்று மாக்காணி, முந்திரிகை கீரை

நிலத்தையும், செம்பங்குடி சிற்றூரில் முக்காலே மூன்று மா இறைவனுக்காக விட்டவர் மூன்றாம் குலோத்துங்க சோழ தேவர்.

திருஞானசம்பந்தரை, பெருந்தகையார், ஆளுடைப்பிள்ளையார், பரசமய கோளரியார் என்றும் நாச்சியார் பெயரை சொக்கியார் என்றும் இங்குள்ள கல்வெட்டு கூறுகிறது. ஆளுடைய பிள்ளையார் (சம்பந்தர்) சொக்கியார் இவர்களின் உருவச் சிலைகளை திருவெண்காட்டிலும், திருநனிப் பள்ளியிலும், திருவாக்கூரிலும் எழுந்தருளச் செய்து பின்பு பெரும்பற்றப் புலியூர், (சிதம்பரம்) எழுந்தருள செய்வார்கள் என்றும், அப்படி எழுந்தருள செய்யும் பொழுது அடியார்களுக்கு அமுது செய்து அருளிப்பது வழக்கம் என்பதை ராஜராஜ தேவரின் இரண்டாம் ஆண்டு 45 ஆம் நாள் கல்வெட்டு கூறுகிறது.

காகபுஜண்ட முனிவர் இத்தலத்தைக் காலால் மிதிப்பதற்கு பயந்து தலையால் நடந்து வந்து நிருதி (தென்மேற்கு) திசையில் அமர்ந்து தவம் இருந்து முக்தி பெற்றார். திருஞானசம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், முருக நாயனார், திருநீலநக்க நாயனார் ஆகியோர் வழிபட்டுள்ளனர்.

வசிஷ்டர், பராசர், பிருகு, சமக்கனி முனிவர் ஆகியோர்களுக்கு ஈசன் கையிலையைக் காட்டி அருள் புரிந்துள்ளார். பிரம்மா இங்கு வந்து வழிபட்டு படைப்பு தொழிலைக் கைவரப்பெற்றார். விஷ்ணு வந்து வழிபட்டு அசுரர்களை வெல்லும் வரம் பெற்றார். இந்திரன் போகம் பெற்றான். சந்திரன் அபயம் பெற்றான். கங்காதேவி தவம் செய்து இங்குள்ள வாசலில் எழுந்து இறைவனை வழிபட்டாள். அயோத்தியின் மன்னன் மாந்தத்தா இங்கு வந்து வழிபட்டதாக கூறப்படுகிறது.

சம்பந்தரை சிவசோதியில் கலக்கச் செய்த ஈசனை இங்கு வந்து வழிபடுவர்களுக்கு முக்தி நிச்சயம் என்பது ஐதீகம். இங்குள்ள ஈசனை வழிபட்டால் சகல துன்பங்களும் கடன்களும் நீங்கி, திருமண, புத்திர பாக்கியம் பெற்று தேக ஆரோக்கியத்துடன் இறுதி வரை வாழலாம் என்பது நம்பிக்கை. தினமும் வழிபட்டாலும் திங்கள் வழிபடுவது சிறப்பு.

விழா

ஆண்டுதோறும் வைகாசி மூல நட்சத்திரத்தன்று இத்தலத்தில் சம்பந்தர் திருமணம், சிவஜோதியில் கலக்கும் வைபவம் நடக்கும். பொதுவாகவே எந்த ஆலயத்திலும் உற்சவரை கருவறைக்குள் எடுத்துச் செல்ல மாட்டார்கள். ஆனால் இங்கு திருஞானசம்பந்தர் திருமணம் முடிந்ததும் சம்பந்தரின் உற்சவ மூர்த்தியைக் கருவறைக்குள் கொண்டு சென்று மூலவர் காலடியில் வைத்து தீபாராதனை செய்வார்கள். அப்போது சம்பந்தர் ஜோதியில் கலப்பதாக ஐதீகம்.

இக்காட்சியைக் காண்பவர்களுக்கு மறுபிறப்பு இல்லை என்று கூறப்படுகிறது. மாசியில் மகா சிவராத்திரியும் பிரதோஷமும் தொடர்ந்து அனுசரிக்கப்படுகிறது.

அம்மன் சன்னதியில் திருநீறுதான் பிரசாதமாக வழங்கப்படுகிறது. இதைப் பூசினால் நோய் விலகி முன்ஜென்ம பாவம் தரித்திரம் நீங்கி வளமாக வாழலாம். பெண்களுக்கு தாலிபாக்கியம் நீடித்திருக்கும் என்பது நம்பிக்கை.

தினமும் காலை 6 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 8 மணி வரையும் ஆலயம் திறந்திருக்கும். சமீபத்தில் 24.06.2010 அன்று கும்பாபிஷேகம் நடந்தது. தருமபுர ஆதீனத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள 27 கோயில்களில் இதுவும் ஒன்று.

சீர்காழியில் இருந்து வடகிழக்கில் 13 கி.மீ. தொலைவிலும், சிதம்பரத்திலிருந்து தென்கிழக்கே 12 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது.

(தொடரும் வலம்.....)

எங்க வாத்தியார்

நூல் ஆசிரியர்:

கொற்றவன்

வெளியீடு:

வானதி பதிப்பகம்,

தியாகராய நகர், சென்னை–17



விலை : ரூ. 500

தமிழ்த் திரையுலகிலும் அரசியலிலும் அழுத்தமான தடம் பதித்த மூன்றெழுத்து மந்திரச் சொல் 'எம்.ஜி.ஆர்!' 'மக்கள் திலகம்' 'பொன்மனச் செம்மல்' 'வாத்தியார்' என்றெல்லாம் புகழ்ந்தேத்தப்படும் எம்.ஜி.ஆரின் வாழ்க்கைப் பயணம், மாயங்கள் நிறைந்தது, அற்புதங்களால் ஆனது என்றால் மிகையல்ல! அவரைப் பற்றிப் பல்வேறு கோணங்களில் பலநூறு நூல்கள் எழுதப்பட்டிருந்தாலும் தற்போது சென்னைப் புத்தகக் கண்காட்சியை ஒட்டி வெளியாகியிருக்கும் வானதி பதிப்பகத்தின் 'எங்க வாத்தியார்' என்னும் நூல், ஏராளமான தகவல்களையும் அரிய படங்களையும் தாங்கி, தனிச்சிறப்புடன் மிளிர்கிறது.

எம்.ஜி.ஆருடன் பணியாற்றிய நடிகைகள், இயக்குநர்கள், பாடலாசிரியர்கள், கலை இயக்குநர்கள், உடையலங்கார, சிகை அலங்காரக் கலைஞர்கள், சண்டைப் பயிற்சியாளர்கள் உள்ளிட்ட அதிக கவனம் பெறாத கலைஞர்கள் உட்பட, திரைத்துறையினர் எம்.ஜி.ஆர் குறித்து நூலாசிரியர் கொற்றவனுக்கு அளித்த பேட்டிகளே இந்நூல்!

எம்.ஜி.ஆர் குறித்த ஆழ்ந்த புரிதலை இக்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கும் இந்நூல், ஒரு ஆவணப் பெட்டகம் என்றே கூறலாம்!

சிறுகதை

மனக்குரல்

ஜெயஸ்ரீ

பேச்சியம்மாள் தன் வீட்டு வேலைகளை முடித்துவிட்டு தான் வேலை செய்யும் வீடுகளுக்கு புறப்படத் தயாரானாள். நான்காவது வகுப்பு படிக்கும் தன் மகன் பிரபுவையும் தன்னுடன் அவள் அழைத்துச் சென்றாள்.

முதலில் ராணி டீச்சர் வீட்டிற்கு சென்று தன் வேலையை தொடர்ந்தாள். ஆன்லைனில் பாடம் எடுத்துக் கொண்டிருந்த டீச்சர், நாளை முதல் பள்ளியில் நேரடியாக வகுப்புகள் ஆரம்பிப்பதால் தன்னுடைய பள்ளியிலேயே படிக்கும் பிரபுவை தானே தினமும் அழைத்துச் செல்வதாய் கூறினார்.

அதனைக் கேட்ட பேச்சியம்மாள் "ரொம்ப சந்தோஷம்மா, நீங்க என்னோட சம்பளத்திலிருந்து பிடிச்சுக்கம்மா காசு," என்றாள்.

ராணி டீச்சரோ "பேச்சி, அதெல்லாம் அப்பறம் பாத்துக்கலாம். இப்போதைக்கு பசங்க ஸ்கூல் வருது தான் முக்கியம். நீ பைசா பற்றியெல்லாம் கவலை படாதே," என்று ஆறுதலாய் கூறினார். பேச்சியம்மாள் அவருக்கு நன்றி கூறினாள்.

அடுத்ததாக இரண்டு, மூன்று வீடுகளில் வேலை செய்தபின் பிரபுவை தன் வீட்டில் விட்டுவிட்டு தன் சின்னப் பெண்ணான சுமியை அழைத்துக் கொண்டு மதிய வேளையில் செல்லும் வீடுகளை நோக்கி நடந்தாள், பேச்சி.

அந்த வீடுகளில் உள்ளவர்கள் எல்லாம் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் துணுக்காய் பதிலளித்த சுமியை பேச்சி பெருமையுடன் பார்த்தாள்.

"பேச்சி, உன் பொண்ணு ரொம்ப சமத்து. அவளை நல்லா படிக்க வை" என்றார் ஒரு வீட்டு எஜமானியம்மா.

"ஆமாம்மா, என் பசங்க மூணையும் நல்லா படிக்க வெச்சு, அதுங்க வளர்றத பாக்கணும். அது தானம்மா என் ஆசை," என்றாள்.

அங்கிருந்து கிளம்பிய பேச்சி, சுமியை வீட்டில் விட்டுவிட்டு தன் பெரிய பெண் சுஜிதாவுடன் பல வேலைளைச் செய்ய வேண்டிய வீடுகளுக்கு புறப்பட்டாள்.

அப்பொழுது ஒரு பெயர்பெற்ற சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கும் பலர் சுஜிதாவையும் பேச்சியையும் பார்த்தனர்.

அவர்கள் பேச்சியம்மா விடம் "ஏம்மா, நீ கொரோனா தடுப்பு ஊசி போட்டுக்கிட்டீயாம்மா?" என்று கேட்டனர் .

"ஆமாங்க, ஒரு டோஸ் போட்டுட்டேன். இரண்டாவது டோஸ் பக்கி இருக்கு," என்றாள்.

உடனே அச்சங்கத்தின் தலைவியானவர்

"நாளைக்கு இந்த ஏரியாவில எங்களது கூட்டம் இருக்கு. அங்க நீங்க வர முடியுமா? உங்களுக்கு இலவசமா தடுப்பூசி போட்டு விடுவாங்க,"என்றார்.

"அம்மா, எனக்கு ரொம்ப வேலை இருக்குமா. அதனால நான் பார்த்துக்கிறேன்," — இது பேச்சியம்மாள்.

"நாளைக்கு நிறைய அரசு உதவிகள் கூட வழங்குகிறார்கள். மருத்துவ முகாமும் ஏற்பாடு செய்துள்ளனர். அதனால நீங்க கண்டிப்பா வாங்க" என்றார் அவர்.

அவரின் பேச்சை மறுக்க இயலாதவளாய் பேச்சியும் சரி என்று ஒப்புக் கொண்டாள். பின்னர், தனது வேலைகளை முடித்து வீட்டிற்கு வந்து ஓய்வெடுத்தவளக்கு இன்றைய தினம் நன்றாக போனது என்று மனதில் நினைத்துக் கொண்டே உறங்கினாள்.

மறுநாளும் தன் வேலைகளுக்கு முக்கியத்துவம் தந்தவளாய் அச்சங்கத்தின் நிகழ்ச்சியை மறந்தே போனார் பேச்சி. அப்போதும் சுஜிதா தான்,"

அம்மா, நீ இரண்டாவது டோஸ் போட்டுட்டு வந்துடேன்," என்றாள்.

"அட, போதாயீ! நமக்கே ஆயிரம் ஜோலி இருக்கு. எல்லார் வீட்டுலையும் சொல்லவும் இல்லை," என்றவளை "ஒரு எட்டு எட்டி பாத்துட்டு தான் வரலாம், வா போகலாம்," என்றவள் பேச்சியின் கைய பிடிச்சு சுஜிதா அந்த நிகழ்ச்சிக்கு போனாள்.

மிகப்பிரம்மாண்டமாக விளம்பரப்படுத்தப்பட்டது டனும், அலங்காரத்துடனும் நிகழ்ச்சி அங்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. பேச்சியும், சுஜித்தாவும் ஒரு ஓரமாக உட்கார்ந்திருந்தனர். நிகழ்ச்சியும் ஆரம்பமாகியது.

அந்தச் சங்கத்தின் பெண் தலைவர்கள் சமுதாயத்தில் நடுத்தர வர்க்கத்தில் இருக்கும் பெண்களுகளுடன் சேர்ந்து பல ஆடல், பாடல் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

நடுநடுவே பெண் சுதந்திரம் என்று தேவையில்லாமல் அதற்கு சம்மந்தமே இல்லாமல் ஏதோதோ பேசிக்

மாதிரி ஏழைகள் பற்றியும் கொஞ்சம் யோசிங்க நீங்க!! எங்க அம்மாக்கு பதினஞ்சு வயசுலேயே கல்யாணம் பண்ணிட்டாங்க.

எங்க அப்பா ஒரு லாரி டிரைவர். தினமும் குடிச்சிட்டு தான் வீட்டுக்கு வருவார். எங்க அம்மாதான் வீட்டு வேலை செஞ்சு எங்களை காப்பாத்துது. அது மட்டுமல்லாமல் என் அம்மா மேல சந்தேகம் கூட படறாரு, எங்கப்பா. அதனால தான், எங்கம்மா என்னை, என் தம்பிய, தங்கைய அவங்க எங்கே போனாலும் அழைச்சுட்டு போறாங்க. எங்கம்மா வேலைய விட்டுட்டு தடுப்பூசி போட வந்தா, இங்க வந்தா இப்படி பண்றீங்க.

உங்க சங்கத்து வழியா எங்கள மாதிரி ஏழைகளின் பிரச்சனையும் பேசுங்க. ஏழைங்களுக்கும் அதே 24 மணி நேரம் தான். பணக்காரங்களுக்கும், புகழ்பெற்றவர்களுக்கும் ஒவ்வொரு நிமிஷமும் எவ்வளவு முக்கியமோ, அதேப் போல தான் ஏழைகளுக்கு இரண்டு வேளை சாப்பாடுக்கு ஒவ்வொரு நிமிஷமும் முக்கியம்.

உங்க தடுப்பூசியும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாம். வாம்மா, பாகலாம்னு," பேச்சியின் கையை இழுத்துக் கொண்டு அங்கிருந்து வேகமாக வெளியேறினாள்.

சின்னப் பெண்ணான சுஜிதாவின் மனக்குமுறலாய் ஒலித்த வார்த்தைகள் ஏழைகளின் மனக்குரலாகவே ஒலித்து நிகழ்ச்சியாளர்களின் மனங்களில் சரியான அடியாகவே விழுந்ததை அங்கு வந்த பார்வையாளர்களுக்கு காட்சியாகவே தெரிந்தது.

சுஜிதாவின் தரியத்தை பாராட்டி மகிழ்ந்தனர். பேச்சியம்மாள் தன் மகள் என்னும் ஒரு தைரியலட்சுமியுடன் மிடுக்காய் நடந்தாள்.

கொண்டிருந்தார்கள்.

பொறுமை இழந்த சுஜிதா நேற்று இவர்களுடன் பேசியவரை மேடையில் கண்டவுடன் அவருக்கு தாங்கள் வந்துள்ளதை தெரிவிப்பதற்காக அவரை அணுக முயன்றாள்.

அப்போது அங்கு இருந்தவர்கள் சுஜிதாவை "இறங்குமா இங்கிருந்து," என்று கோபித்துக் கொண்டனர்.

இதனைக் கேட்ட சுஜிதாவுக்கு அழுகையே வந்துவிட்டது. "எங்க அம்மா வேலைக்கு கூட போகாம இரண்டாவது டோஸ் தடுப்பூசி போட்டுக்க வந்தாங்க. மூணு மணி நேரமா உட்கார்ந்து இருக்கோம்.

நீங்க என்னவோ ஆடிப்பாடிட்டு இருக்கீங்க.அரசு உதவியும் கிடைக்கும் சொன்னிங்க, அதான் நாங்க வந்தோம். எங்களை

தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
CELEBRATING
13
ANNIVERSARY
THANK
YOU

அறிவோம் தமிழர்

அன்னை ரமாபாய்: பீம்ராவை அம்பேத்கராக மாற்றியவர்

கோடிக்கணக்கான ஒடுக்கப்பட்டோரின் இதயங்களில் ஒளிவிளக்காக வாழ்பவர் பாபாசாகேப் அம்பேத்கர். அந்த விளக்குக்குத் தன்னையே எண்ணெயாக உருக்கிக்கொண்டவர் அவரின் மனைவி ரமாபாய். தீராத வறுமையிலும், நெடிய பிணியிலும், அடுத்தடுத்துப் பிள்ளைகளைப் பறிகொடுத்த நிலையிலும், தன் மரணவேளையிலும்கூட 'அம்பேத்கர்' என்ற லட்சியவாதிக்குத் தடையாக இருக்காமல், அவருக்காகத் தன் வாழ்வையே தியாகம் செய்திருக்கிறார்.



அதனால்தான் அம்பேத்கர் 'பாகிஸ்தான் பற்றிய சிந்தனைகள்' என்ற நூலை ரமாபாய்க்குச் சமர்ப்பித்து, 'பீம்ராவாக இருந்த என்னை டாக்டர் அம்பேத்கராக மாற்றியவர்' என்று நன்றியோடு நினைவுகூர்ந்திருக்கிறார். தான் வாசிக்கும் அறைக்கும் அவரின் பெயரையே சூட்டியிருக்கிறார்.

அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்று நூல்களில் ரமாபாய் குறித்த தகவல்கள் அரிதாகவே கிடைக்கும் நிலையில், தலித் பேந்தர்ஸ் அமைப்பின் நிறுவனர்களில் ஒருவரான ஜே.வி.பவாரும் (தமிழில் பா.பிரபாகரன்), மராட்டிய எழுத்தாளர் பேபி காம்ப்ளேவும் (தமிழில் இறையடியான்) எழுதிய நூல்கள் சற்று விரிவான தகவல்களை அளிக்கின்றன.

மஹாராஷ்டிரத்தில் உள்ள வனாட் கிராமத்தில் 7.2.1897 அன்று ரமாபாய் பிறந்தார். நிலமற்ற கூலித் தொழிலாளியான ரமாபாயின் தந்தை தத்ரேவின் குடும்பத்தை எல்லா பக்கமும் வறுமை சூழ்ந்திருந்தது. தொபாத் கடலில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மீன் பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டதால், தத்ரே கடற்கரையில் சுமை தூக்கும் வேலை செய்தார். சிறுவயதிலேயே தாயை இழந்த ரமாபாய், அடுத்த சில ஆண்டுகளில்

பெருமை

தந்தையையும் இழந்தார். அதனால், ராமாபாயை அவரது தாய்மாமா பம்பாய்க்கு அழைத்துசென்று வளர்த்தார். பீம்ராவ் அம்பேத்கரும் சிறுவயதிலே தாயை இழந்து தந்தை சுபேதார் ராம்ஜி சக்பாலின் அரவணைப்பில் வளர்ந்தார்.

சுபேதார் தன் மகனுக்குத் திருமணம் செய்துவைக்கப் பெண் தேடியபோது, ரமாபாயின் அமைதியான குணம் அவருக்குப் பிடித்துப்போனது. இரு குடும்பங்களும் ஏழ்மையில் இருந்ததால் பைகுலா மீன் மார்க்கெட்டையே மணமேடையாக மாற்றி 04.04.1906 அன்று

இரா.வினோத்

சாணி அள்ளிய பொழுதுகள்

சுபேதார், ரமாபாயின் ஒத்துழைப்பால் அம்பேத்கர் மெட்ரிக் தேர்வில் 'மகர்' சாதியில் முதல் ஆளாக வெற்றிபெற்றார். சுபேதாரின் மறைவுக்குப் பின் குடும்பம் வறுமையின் கோரப் பிடிக்குள் சிக்கியது. ஆனாலும், ரமாபாய்

பீம்ராவுக்கும் ரமாபாய்க்கும் திருமணத்தை நடத்திவைத்தார். பீம்ராவை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்பதை லட்சியமாகக் கொண்டிருந்த சுபேதார், அதனைத் தன் மருமகளிடமும் உறுதியாகக் கூறினார். இதனால், குடும்ப பாரம் அனைத்தையும் தானே சுமந்து, பீம்ராவ் படிப்பு கெடாமல் பார்த்துக்கொண்டார் ரமாபாய். பீம்ராவ் தான் படித்ததுடன் ரமாபாயும் படிக்க வேண்டும் என நினைத்து, அவருக்கு எழுதப் படிக்கக் கற்றுக்கொடுத்தார்.

தன் கணவரின் லட்சியங்களுக்காகக் கிழிந்த சேலையுடன் கூலி வேலை தேடி அலைந்தார். பல இரவுகளைப் பட்டினியோடு கடந்தார். அவர் வெளிநாட்டில் டாக்டர் பட்டங்களும், பாரிஸ்டர் பட்டமும் பெற்ற காலத்தில் ரமாபாய் சாலையோரங்களில் சாணி அள்ளிக்கொண்டிருந்தார்.

'புருஷன் வெளிநாட்டில் பாரிஸ்டராக இருக்கிறார். இவள் இங்கு கூலி வேலைக்குச்

செல்கிறாள். மைல் கணக்கில் விறகு சுமக்கிறாள். சாணி அள்ளுகிறாள். இதெல்லாம் இவளுக்குத் தேவையா?' என அக்கம்பக்கத்தினர் ஏசினர். இதனால் ரமாபாய் ஊரார் விழிப்பதற்கு முன்பாகவே அதிகாலையில் எழுந்துசென்று சாணி அள்ளிவருவார்.

சாகேப்பின் லட்சியமே முக்கியம்

அம்பேத்கர் லண்டனில் 'ரூபாயின் சிக்கல்' ஆய்வேட்டை எழுதிய தருணத்தில், பிள்ளைகளுக்குப் பால் வாங்கவும் மருந்து வாங்கவும் ரூபாய் இல்லாமல் ரமாபாய் தவித்திருக்கிறார். அந்தச் சமயத்தில் அம்பேத்கர், 'கங்காதர் எப்படி இருக்கிறான்? அவனை வங்கிக்கு அழைத்துச் சென்று வங்கி சார்ந்த பணிகளைக் கற்றுக்கொடு' என ரமாபாய்க்குக் கடிதம் எழுதுகிறார். அதற்கு இவர், 'கங்காதர் நலமாக இருக்கிறான். அவனை வங்கிக்கு அழைத்துச்சென்றேன். சிறப்பாகக் கற்றுக்கொள்கிறான்' என்று பதில் அனுப்பினார்.

படிப்பு முடிந்துவந்த அம்பேத்கர், 'கங்காதர் எங்கே?' எனக் கேட்டபோது, 'ஓராண்டுக்கு முன்பே இறந்துவிட்டான்' என ரமாபாய் கதறினார். குழந்தையின் மரண செய்தியைக் கூறினால், அம்பேத்கர் படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு வந்துவிடுவார் என்பதால், அந்தப் பெருந்துயரத்தை ரமாபாய் தனக்குள் புதைத்துக்கொண்டிருக்கிறார். வறுமையின் கொடுமைக்கு கங்காதர், ரமேஷ் என அடுத்தடுத்து 4 பிள்ளைகள் இறந்துபோனார்கள்.

மாமிச உணவும் வளையலும்

அம்பேத்கர் தன் தந்தையின் நினைவு தினத்தில் பம்பாய் விடுதி மாணவர்களுக்கு மாமிச உணவு பரிமாற விரும்பினார். மத நம்பிக்கை கொண்ட ரமாபாய், 'நினைவு நாளுக்கு மாமிச உணவு பரிமாறலாமா?' என்று தயங்கினார். அதற்கு அம்பேத்கர், 'விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்கள் மாமிச உணவு சாப்பிட்டு நீண்ட காலமாகியிருக்கும். அவர்களுக்கு மாமிச உணவு வழங்கினால், எனது தந்தை கோபித்துக்கொள்ளமாட்டார். மாறாக மகிழ்ச்சி அடைவார்' என்று கூறினார்.

அம்பேத்கரின் நோக்கத்தைப் புரிந்துகொண்ட ரமாபாய், தனது திதி விரதத்தைக் கைவிட்டு, மாணவர்களுக்கு மாமிச உணவு சமைத்துக் கொடுத்திருக்கிறார். ரமாபாயின் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த சமயத்தில் தார்வாடில் இருந்த பி.ஹெச்.வாரலே வீட்டில் ஓய்வெடுத்தபோது, பி.ஹெச்.வாரலே நடத்திய மாணவர் விடுதிக்கு அரசின் மானியம் கிடைக்காததால், ரமாபாய், உடனடியாகத் தனது கையில் இருந்த 12 கிராம் தங்க வளையல்களை அடகு வைத்து விடுதி மாணவர்களின் பசியை ஆற்றினார்.

ரமாபாயின் முதல் பேச்சு

வட்டமேஜை மாநாட்டில் அம்பேத்கரின் செயல்பாட்டுக்குப் பெரும் வரவேற்பு கிடைத்தது. இதனால் பம்பாய் துறைமுகத்தில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு, அவரை வரவேற்று மாலை அணிவித்தனர். அனைவரும் அவருக்கு மாலை அணிவிப்பதைக் கண்குளிரப் பார்த்த ரமாபாய், கடைசியாக சாகேபுக்கு மாலை அணிவித்தார். அந்த மேடையில் முதன்முதலாக ரமாபாய் பேசும்போதும், பின்னர் ஓய்.எஸ்.ஹொங்கலின் வீட்டில் நடந்த மகளிர் கூட்டத்தில் பேசும்போதும் ஒடுக்கப்பட்டோரின் விடுதலை குறித்தே பேசியதாக 'ஜனதா' இதழில் வெளியாகியுள்ளது.

இந்தியாவிலேயே அம்பேத்கருக்குத்தான் அதிக சிலைகள் வைக்கப்பட்டிருப்பதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. அந்தச் சிலைகள் நிற்கும் காலமெல்லாம் ரமாபாயும் நிலைத்திருப்பார்!

படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

யுத்த நிறுத்தம் 9

அன்றிரவு இரண்டாம் ஜாமத்தில் மந்திராலோசனை சபை மறுபடியும் கூடிய போது, சபையில் கூடியிருந்த எல்லோருடைய முகத்திலும் பரபரப்புக் காணப்பட்டது. வாதாபி வீரர்கள் இருவரும் வெள்ளைக் கொடி பிடித்துக்கொண்டு தெற்குக் கோட்டை வாசலில் வந்து நின்றதாகவும் அவர்கள் கொண்டு வந்த ஓலை மகேந்திரச் சக்கரவர்த்தியிடம் சேர்க்கப்பட்டதாகவும் நகரம் முழுவதும் வதந்தி பரவிவிட்டது. ஓலையில் என்ன எழுதியிருந்தது, மகேந்திர பல்லவர் என்ன மறு ஓலை அனுப்பப் போகிறார் என்று அறிந்து கொள்ள அவ்வளவு பேரும் ஆவலாக இருந்தார்கள். முக்கியமாக, நரசிம்மவர்மரின் முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடித்தன. அவருடைய கண்களில் பளிச் பளிச்சென்று மின்னல் தோன்றி மறைந்தன. தம் பக்கத்தில் நின்ற பரஞ் சோதியுடன் அடிக்கடி சமிக்ஞா பாஷையினால் அவர் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். அவருடைய மார்பு புயலால் தாக்குண்ட கடலைப் போல் மேலே பொங்குவதும் கீழே அடங்குவதுமாக இருந்தது.

சக்கரவர்த்தி வழக்கத்தைவிட மிடுக்கான நடையுடன் வந்து சிம்மாசனத்தில் அமர்ந்தார். அவர் கையிலிருந்த ஓலை மீது எல்லாருடைய கண்களும் கவனமும் சென்றன.

"சபையோர்களே! இன்று மாலை சபை கலையும் சமயத்தில் முக்கியமான செய்தியை எதிர்பார்ப்பதாகச் சொன்னேன். நான் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மிகவும் முக்கியமான ஆச்சரியமான செய்தி வந்திருக்கிறது. மந்திரிகளே! அமைச்சர்களே! தளபதிகளே! அனைவரும் கேளுங்கள்! வாதாபிச் சக்கரவர்த்தி யுத்தத்தை நிறுத்தி விட்டார். சமாதானத்தையும் சிநேகத்தையும் வேண்டி ஓலை அனுப்பியிருக்கிறார்!" என்று சொல்லி மகேந்திர பல்லவர் தம் கையிலிருந்த ஓலையைத் தூக்கிக் காட்டியதும் சபையில் ஏற்பட்ட 'ஹா ஹா' காரத்தையும் மற்றும் பலவியப்பொலிகளையும், குதூகல சப்தங்களையும் வர்ணிக்க முடியாது. இவ்வளவுக்கிடையில் 'ஹூம்' என்ற ஆட்சேபிக்கும் சப்தம் ஒன்றும் கிளம்பியது. அது மாமல்லர் இருந்த இடத்திலிருந்து வந்ததென்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

"மந்திரிகளே! அமைச்சர்களே! உங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். துங்கபத்ரா நதியிலிருந்து நர்மதை நதிவரையிலும் உள்ள மத்திய பாரத தேசத்தின் ஏக சக்கராதிபதி நம்முடைய சிநேகத்தைக் கோருகிறார். நம்முடன் சமாதானத்தை நாடுகிறார். அவருக்கு நான் என்ன மறுமொழி அனுப்பட்டும்? யுத்தத்தை நிறுத்த முடியாது; போர் நடத்தியே தீருவோம் என்று சொல்லியனுப்பட்டுமா? அல்லது பல்லவ குலத்தின் பரம்பரைத் தர்மத்தை அனுசரித்து, சிநேகத்தைக் கோருகிற வாதாபிச் சக்கரவர்த்தியிடம் நாமும் சிநேகத்தைக் கைக்கொள்ளலாமா? சபையோர்களே! நன்றாக யோசித்துச் சொல்லுங்கள். பதினாயிரம்

யானைப்படையையும், ஐந்து இலட்சம் காலாட் படையையும் உடைய வாதாபிப் புலிகேசி மன்னர், யுத்தத்தை நிறுத்திவிட்டு நமது விருந்தினராகக் காஞ்சி நகருக்குள் பிரவேசிக்க விரும்புகிறார். சில தினங்கள் இங்கே தங்கி இம்மாநகரின் சிறப்புக்களைப் பார்த்துக் களித்துவிட்டுப் போக ஆசைப்படுகிறார். அவரை மரியாதையுடன் வரவேற்று உபசரிப்போமா அல்லது கோட்டைக் கதவுகளுக்கு இன்னும் சில தாழ்களைப் போட்டு அடைப்போமா? உங்களுக்குள்ளே கலந்து யோசித்துக் கொண்டு ஏகமனதாக அபிப்பிராயத்தை எனக்குத் தெரியப்படுத்துங்கள்" என்றார் சக்கரவர்த்தி.

பிறகு சற்று நேரம் சபையில் ஒரே கலகலப்பாய் இருந்தது. மந்திரிகளும், அமைச்சர்களும் ஒருவரோடொருவர் உற்சாகமாய்ப் பேசிக் கொண்டார்கள். கடைசியாக, பிரதம மந்திரி சாரங்கதேவ பட்டர் பேசுவதற்கு எழுந்து நின்ற போது, சபையில் நிசப்தம் குடிகொண்டிருந்தது.

"பல்லவேந்திரா! தங்களுடைய இராஜ தந்திரத்திலும் தீர்க்காலோசனையிலும் இச்சபையோர் அனைவருக்கும் பூரண நம்பிக்கை இருக்கிறது. எந்தக் காரியத்தை எந்தக் காலத்தில் எப்படிச் செய்ய வேண்டுமோ, அப்படித் தாங்கள் செய்து முடிப்பீர்கள் என்று எல்லாரும் உறுதி கொண்டிருக்கிறோம். ஆகவே, முதலில்

தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்“ என்றார்.

அப்போது சக்கரவர்த்தி, “பட்டரே! என் அபிப்பிராயத்தைக் கேட்கவும் வேண்டுமா? அவசியத்துக்கு மேலே ஒரு வினாடியும் யுத்தத்தை நடத்துவதில் எனக்குப் பிரியமில்லை. ஓர் உயிரேனும் வீணாகச் சேதம் அடைவதில் எனக்கு விருப்பமில்லை. இந்தக் கோட்டைக்குள் இருக்கும் நாமெல்லோரும் கூடியவரையில் ஒரு குறையும் இல்லாமல் சௌகரியமாயிருக்கிறோம். ஆனால், கோட்டைக்கு வெளியே கிராமங்களிலும் பட்டணங்களிலும் உள்ள பல்லவ நாட்டுப் பிரஜைகள் பெருங்கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். தொண்டை மண்டலத்தில் இந்தக் கோடை காலத்தில் பயிர்த் தொழிலே நடக்கவில்லை. இன்னும் சில மாத காலத்தில் பல்லவ நாட்டுப் பிரஜைகளைப் பெரும் பஞ்சம் பீடிக்கக் கூடும். இப்போர்ப்பட்ட நிலைமையில், அநாவசியமாக யுத்தத்தை வளர்த்துவதற்கு எனக்குச் சம்மதமில்லை. மேலும், உத்தராபத ஹர்ஷவர்த்தன சக்கரவர்த்தியைப் போர்க்களத்தில் புறங்காட்டச் செய்த வீராதி வீரரான புலிகேசி மன்னர் யுத்தத்தைத் தாமே நிறுத்தி விட்டு வலிய வந்து சமாதானத்தைக் கோரும் போது நாம் அதை எதற்காக நிராகரிக்க வேண்டும்? என்னுடைய அபிப்பிராயம் சமாதானத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதுதான்” என்றார்.



இவ்விதம் சக்கரவர்த்தி கூறி நிறுத்தியதும், சாரங்கதேவ பட்டர், “பல்லவேந்திரா! தாங்கள் இப்பொழுது கூறிய விஷயங்கள் எல்லாம் மந்திரி மண்டலத்தைச் சேர்ந்த அனைவருக்கும் உடன்பாடுதான். ஆனால், ஒரே ஒரு விஷயத்தைப் பற்றி எங்களிலே சிலருக்கு ஓர் ஐயப்பாடு இருக்கிறது. வாதாபிச் சக்கரவர்த்தியைக் காஞ்சி நகருக்குள் விருந்தினராக வரவேற்பது பற்றித் தாங்கள் சொன்னீர்கள், அது உசிதமான காரியமா என்றுதான் சந்தேகப்படுகிறோம். வாதாபி மன்னர் பழி பாவங்களுக்கு அஞ்சாத வஞ்சகர் என்றும், அசுர குணம் படைத்தவர் என்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். காஞ்சியைப் பார்க்க வருவதாக அவர் சொல்லுவதில் ஏதேனும் அந்தரங்க சூழ்ச்சி இருக்கக்கூடுமல்லவா?” என்றார்.

மகேந்திர பல்லவர் புன்னகையுடன் கூறினார்: “சாரங்க தேவரே! முன் ஜாக்கிரதையுள்ள மதி மந்திரிகள் சொல்ல வேண்டியதைத்தான் நீங்கள் சொன்னீர்கள். யோசிக்க வேண்டிய காரியந்தான், ஆனால் வாதாபி அரசர் கேட்டிருப்பதில் ஒருவிதமான சூழ்ச்சியும் இருக்க நியாயமில்லை. அவருடைய யானைப்படை, காலாட் படை எல்லாவற்றையும் காஞ்சிக்கு இரண்டு காத தூரத்துக்கப்பால் அனுப்பி விடச் சம்மதிக்கிறார். அவருடைய முக்கிய மந்திரிப் பிரதானிகள் பத்துப் பதினைந்து பேருடன் நிராயுதபாணியாகக் காஞ்சிக்குள் பிரவேசிக்கச் சித்தமாயிருக்கிறார். சபையோர்களே! நம்மிடம் இவ்வளவு பூரண நம்பிக்கை வைத்துச் செய்தி அனுப்பியுள்ளவரிடம் நாம் எவ்விதத்தில் சந்தேகம் கொள்வது? ஆகவே, யுத்தமா, சமாதானமா என்பதைப் பற்றித்தான் உங்களுடைய அபிப்பிராயம் வேண்டும்!”

மறுபடியும் மந்திரிமார்களும் அமைச்சர்களும் ஒருவரோடொருவர் கலந்து, ஆலோசித்தார்கள். கடைசியில், சாரங்க தேவபட்டர் எழுந்து, “பல்லவேந்திரா! மந்திரி மண்டலத்தார் சமாதானத்தையே விரும்புகிறார்கள். வாதாபிச் சக்கரவர்த்தியைக் காஞ்சிக்குள் வரவேற்கும் விஷயத்தில் தங்களுடைய கருத்து எதுவோ அதன்படி செய்யலாமென்று அபிப்பிராயப்படுகிறார்கள்” என்றார்.

(சபதம் தொடரும்)

VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

Idli / Dosa Wet Mix

ఇడ్లీ దోస పిండి

• இட்லி / தோசை மாவு

• ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

யோக

யோகாசனம்: சூரிய நமஸ்காரம்

யோகா என்பது உடல், மனம், அறிவு, உணர்வு மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கும், சமன்பாட்டிற்கும் உதவிடும் கலை ஆகும். யோகா என்னும் கலை வாழ்க்கை அறிவியல் மற்றும் வாழும் கலை ஆகும். பதஞ்சலி முனிவரால் இக்கலை இந்தியாவில் தோன்றி வளர்ந்து வழிவழியாய் வரும் ஓர் ஒழுக்க நெறியாகும். இது உடலையும் உள்ளத்தையும் நலத்துடன் வைத்துப் போற்றும் ஒழுக்கங்களைப் பற்றிய நெறி.

யோகாவின் பல்வேறு மரபுகள் இந்து, புத்த மற்றும் சமண மதங்களில் காணப்படுகின்றன. மேலும் யோகா வஜ்ரயான மற்றும் திபெத்திய புத்த மத தத்துவங்களில் ஒரு முக்கிய பகுதியாக விளங்குகிறது.

நலம் பெறவும், ஆரோக்கியத்துடன் வாழவும் 40 நிமிடத்தில் யோகா, ஆசனங்கள், பிராணாயாமம் செய்வதற்கான பயிற்சி. அது என்ன?

நம் உடல் நன்றாக இருப்பதற்கும் நீண்ட நாள் உயிர் வாழ்வதற்கும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் சித்தர்கள் நோயில்லா நெறிமுறையை வகுத்துள்ளனர். குறிப்பாக சித்த மருத்துவத்தில் எண்ணற்ற வழிமுறைகளை திருமூலர் சித்தர் கூறியுள்ளார்.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.

என்று உடம்பை வளர்க்கும் வழி முறைகளை கூறியுள்ளார்.

நம் உடல் மூன்று வகைப்படும். 1. சூக்கும உடல்(ஆன்ம உடல்) 2.காரண உடல் (மன உடல்) 3. ஸ்தூல உடல் (பருவுடம்பு) இதில் நாம் மன உடல், பருவுடல் இரண்டையும் பாதுகாக்க வேண்டும். ஏனெனில் இந்த இரண்டில் எதில் பாதிப்பு நிகழ்ந்தாலும் பருவுடலை பாதித்து நோய்களை உண்டாக்கி ஆயுளை குறைக்கும்.

அதற்கான சிறிய எளிய அனைவரும் செய்யக்கூடிய பயிற்சி உள்ளன. இதனை செய்வதற்கு 40 நிமிடங்கள் மட்டுமே ஆகும்.

1.சூரிய நமஸ்காரம்(தளர்வு பயிற்சி)—5 நிமிடம்
2.சித்தர் ஆசனங்கள்—4
பத்மாசனம், வஜ்ராசனம், தடாசனம், புஜங்காசனம் — 10நிமிடம்
3.சித்தர் வர்மங்கள்— 4
திலர்த வர்மம், தும்மி காலம், அடப்பகாலம், விலங்கு வர்மம்— 5 நிமிடம்
4.சித்தர் முத்திரை— 4
லிங்க முத்திரை, பிராண முத்திரை, சூரிய முத்திரை—5 நிமிடம்
5.சித்தர் திருமூலர் மூச்சுப்பயிற்சி
(பிராணாயாமம்) —10 நிமிடம்
6.சவாசனம் —(நனவு நிலை உறக்கம்) — 5 நிமிடம்

நாம் நோயில்லா வாழவும், உளப்பிணி, உடல் பிணி இல்லாமல் வாழவும் இந்த பயிற்சிகள் சிறந்த முறையில்உதவும்.

சூரிய நமஸ்காரத்தில் இத்தனை நன்மைகளா?

சூரிய நமஸ்காரம் என்பது சூரியனை வணங்குதல் என்று பொருள்.

இது பண்டைய காலம் முதலே, சூரியனை வழிபடுதல் முறைகளில் ஒன்றாக கருதப்படுகிறது.

ஆசனம், பிராணயாமம், மந்திரம் மற்றும் சக்கர தியானம் ஆகியவற்றை ஒன்றிணைத்து பல்வேறு விதங்களில உடல் பயிற்சிகளின் எல்லைகளைக் கொண்ட ஒரு முழுமையான உடற்பயிற்சியாக சூர்ய நமஸ்காரம் உள்ளது.

சூர்ய நமஸ்காரம் பன்னிரெண்டு ஆசனங்கள்

யோகம்!

கோவை பாலகிருஷ்ணன்

ஒருங்கிணைந்த ஆசன முறை ஆகும். சூரிய நமஸ்காரம் சுவாசம், உடல் மற்றும் மனம் ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்து செய்யும் பயிற்சிமுறை. சில காரணங்களால் உடல் பயிற்சியோ அல்லது யோகாவோ செய்ய முடியாதவர்கள் சூர்ய நமஸ்காரம் செய்வதன் மூலம் சிறந்த பலனை பெறுவர்.

சூர்ய நமஸ்காரத்தில் உள்ள ஆசனங்கள் உடலில்

உள்ள பெரும்பாலான உறுப்புகளின் சீரான செயல்பாட்டுக்கு உதவுகிறது.

சூரிய நமஸ்காரம் செய்யும் முறை:—

1. பிராணமாசனம் செய்முறை: கால்களை ஒன்றாக வைத்தபடி நிற்கவும். கைகளை தலைக்கு மேல் தூக்கவும். கைகளை ஒன்றாக இணைத்து உங்களது மார்புக்கு நேராகக் கொண்டு வரவும். கைகளை வணங்குவது போல் கொண்டு வரவும். உங்கள் காதுகளை உராய்ந்தபடி இருக்க வேண்டும். மெதுவாக கைகளை பின்புறமாக வளைக்கவும். கைகளுக்கு இணையாக தலையும் கவிழ வேண்டும். மூச்சை உள்ளிழுத்தல்..

2. அஸ்ட உட்டனாசனம் செய்முறை: மூச்சை உள் இழுத்தபடி, கைகளை மேலேத் தூக்கவும். கைகள் மீண்டும் கைகளை மேலாகத் தூக்கியபடி கீழே இறக்கவும். மூச்சை வெளியிடுதல்..

3. அஸ்டபாதாசனம் செய்முறை: மூச்சை வெளியே விட்டபடி மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பவும். கைகளை கால்களுக்கு இணையாக தரையைத் தொடவும்.

தலை கால்களின் முட்டியைத் தொட்டபடி இருக்க வேண்டும். இதே நிலையில் ஒரு சில விநாடிகள் இருக்க வேண்டும். இது அஸ்டபாதாசனம் மூச்சை வெளியிடுதல்..

4. ஏகபாதபிரஸர்நாசனம் செய்முறை: மூச்சை உள்



இழுத்தபடி உங்களது வலது காலை பின்னோக்கி வைக்கவும். அதே சமயம் இரண்டு கைகளையும் இடது காலுக்கு இணையாக ஊன்றவும். தலையை மேல் நோக்கியவாறு பார்க்கவும். இதே நிலையில் ஒரு சில விநாடிகள் இருக்கவும். மூச்சை உள்ளிழுத்தல்..

5. தந்தாசனம் செய்முறை: மூச்சை வெளியே விட்டபடி பின்னோக்கி செலுத்திய வலது காலுக்கு இணையாக இடது காலையும் எடுத்துச் செல்லவும். கைகளை நன்கு நீட்டி ஊன்றவும். இடுப்புப் பகுதி நன்கு உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும். அதாவது வளைவு தூண் போன்று உங்கள் உடல் அமைப்பு இருக்க வேண்டும். மூச்சை வெளியிடுதல்..

6. அஷ்டாங்க நமஸ்காரம் செய்முறை: மீண்டும் மூச்சை உள்ளிழுத்தபடி உடல் தரையில் படுமாறு வைக்கவும். கால்கள், முட்டி, கைகள், மார்பு மற்றும் நெற்றி ஆகியவை தரையை தொட வேண்டும். இடுப்புப் பகுதி மட்டும் சற்று உயர்ந்து இருக்க வேண்டும். இப்போது மூச்சை தற்காலிகமாக நிறுத்தி வைக்கவேண்டும் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்..

7. புஜங்காசனம் செய்முறை: மூச்சை உள்ளிழுத்தபடி தலையை பின்புறமாக நீட்டவும். உங்கள் முதுகை எவ்வளவு முடியுமோ அவ்வளவிற்கு பின் பக்கமாக வளைக்கவும். இதைத்தான் புஜங்காசனம் என்று அழைப்பர் மூச்சை உள்ளிழுத்தல்..

8. அதோ முக்கா ஸ்வானாசனம் செய்முறை: மூச்சை வெளியே விட்டபடி, மெதுவாக கைகளை உயர்த்தவும். அதற்கேற்ப இடுப்பு மற்றும் தலையையும் உயர்த்தி மீண்டும் வளைவுத் தூண் அமைப்பை ஏற்படுத்தவும் மூச்சை வெளியிடுதல்

9. ஆஷ்வா சஞ்சலனாசனம் செய்முறை: மெதுவாக மூச்சை உள்ளே இழுத்தபடி, வலது காலை ஒரு அடிக்கு முன்னாடி முட்டியை மடக்கியபடி கொண்டு வந்து வைக்கவும். தலையை மேலாகத் தூக்கி கைகளை நேராக வைக்கவும் மூச்சை உள்ளிழுத்தல்.

10. உட்டனாசனம் செய்முறை: வெளியே மூச்சை விட்டபடி, வலது காலுக்கு இணையாக இடது காலையும் மடக்கியபடி கொண்டு வரவும். தலை முட்டியைத் தொட்டபடி இருக்க வேண்டும் மூச்சை வெளியிடுதல்..

11. அஸ்ட உட்டனாசனம் செய்முறை: மூச்சை உள்ளே இழுத்தபடி மெதுவாக கைகளை உயர்த்தவும். பின்புறமாக வளைந்து கைகளைப் பார்த்தபடி தலை இருக்க வேண்டும் மூச்சை உள்ளிழுத்தல்..

12. பிராணமாசனம் செய்முறை: அட்டவணையில் முதலில் கூறிய பிராணமாசனம் நிலையில் மீண்டும்

வணக்கம் செய்யும் நிலைக்கு வர வேண்டும். மூச்சை வெளியிடுதல்..

யார் செய்யலாம்? எவ்வளவு நேரம் செய்யலாம்? எப்பொழுது செய்யவேண்டும்?

சூரிய நமஸ்காரத்தின் பயன்கள் சூரிய நமஸ்காரம் என்பது சூரியனை வணங்குதல் என்று

விலகி இருக்கும் இந்த நவீன காலத்தில் சூரிய நமஸ்காரம் நமது உடல்,மனம் போன்றவற்றினை நன்கு செலுமைப்படுத்த சூரியநமஸ்காரம் உதவுகிறது.

மேலே குறிப்பிட்ட பனிரெண்டு நிலைகள் செய்த பின்னர் சாதாரன நிலைக்கு வர வேண்டும்.

பொருள்.இது பண்டைய காலம் முதலே, சூரியனை வழிபடுதல் முறைகளில் ஒன்றாக கருதப்படுகிறது. ஆசனம், பிராணயாமம், மந்திரம் மற்றும் சக்கர தியானம் ஆகியவற்றை ஒன்றிணைத்து பல்வேறு விதங்களில உடல் பயிற்சிகளின் எல்லைகளைக் கொண்ட ஒரு முழுமையான உடற்பயிற்சியாக சூர்ய நமஸ்காரம் உள்ளது.

சூர்ய நமஸ்காரம் பன்னிரெண்டு ஆசனங்கள் ஒருங்கிணைந்த ஆசன முறை ஆகும்.

நமஸ்காரம் சுவாசம், உடல் மற்றும் மனம் ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்து செய்யும் பயிற்சிமுறை. சில காரணங்களால் உடல் பயிற்சியோ அல்லது யோகாவோ செய்ய முடியாதவர்கள் சூர்ய நமஸ்காரம் செய்வதன் மூலம் சிறந்த பலனை பெறுவர். சூர்ய நமஸ்காரத்தில் உள்ள ஆசனங்கள் உடலில் உள்ள பெரும்பாலான உறுப்புகளின் சீரான செயல்பாட்டுக்கு உதவுகிறது.

சூர்ய நமஸ்காரம்: நம் முன்னோர்கள் நமக்கு தந்த ஒரு அற்புத பயிற்சி. நாம் இயற்கையை விட்டு

சூரிய நமஸ்காரம் ஆண், பெண், சிறுவர், சிறுமியர் அனைவரும் செய்யலாம். தனியாகவும் கூட்டாகவும் செய்யலாம். ஆண்டு முழுவதும் செய்யலாம்.சூரிய நமஸ்காரம் செய்வதற்கு ஒரு நாளில் மூன்று முதல் பத்து நிமிடங்களே போதும். இது உடம்பு முழுமைக்கும் பயிற்சி அளிக்கின்றது.

சூரிய நமஸ்கரத்திற்குச் செலவொன்றுமில்லை. பளுவான கருவிகள் எதுவும் தேவையில்லை. வேண்டியதெல்லாம் நான்கு சதுர மீட்டர் இடம் தான். சூரிய நமஸ்காரத்தைப் பழகப் பழக இன்பம் அதிகரிக்கும். முதலில் சுலபமான உடல் நிலைகளைப் பழக வேண்டும். ஆரம்பத்தில் பூர்ண வெற்றியை எதிர்பார்க்கக் கூடாது. போகப் போக இலகுவாக இயக்கங்கள் முழுமையாக வரும். ஆரம்பத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை செய்யலாம்.பின் உங்களால் இயன்ற முறை செய்யலாம்.ஆனால் அதிக வலிவுடனோ அல்லது மிகவும் சிரமப்பட்டு செய்வது மிகவும் தவறு.

கர்ப்பிணிகள் 3 மாதங்கள் வரை செய்யலாம். பிறகு நிறுத்தி விட வேண்டும். குழந்தை பிறந்த பின் தக்க ஆலோசனையுடன் சிறிது சிறிதாகப் பயிற்சியை அதிகரிக்க வேண்டும். காலை நேரம் சிறந்தது. முடியாதவர்கள் மாலையிலும் செய்யலாம். சாப்பிட்ட பின் குறைந்தது இரண்டு மணி நேரமாவது கழித்து தான் செய்ய வேண்டும். அலுவலக வேலையால் களைத்துப் போனவர்களுக்குக் கூட பத்து பன்னிரெண்டு நமஸ்காரங்கள் டானிக் போல உயிரூட்டும். தனி அறையில் அமைதியில் செய்வது புத்துணர்வை வளர்க்கும். வேண்டியதெல்லாம் ஒரு சிறு ஜமுக்காளமும் துண்டும் தான்.

முதுகுப் புறத்தில் பிரச்சினை இருந்தாலோ, இடுப்பு எலும்புப் பிரச்சினை இருப்பவர்களும் இந்த ஆசனத்தை செய்ய வேண்டாம். சூரிய நமஸ்காரம் செய்வதற்கு முன்பு தெளிவான அறிவுரையைப் பெற வேண்டும்.

சூரிய நமஸ்காரத்தின் பயன்கள்

இதயத்தை முடுக்கிவிட்டு ரத்த ஓட்டத்தை வேகப்படுத்தி உடலின் ஆரோக்கியத்தை நிலைநாட்டுவதில் சூரிய நமஸ்காரம் சிறந்த இடம் பெறுகின்றது. இது இரத்தக் கொதிப்பை கட்டுப்படுத்தும். இதயத் துடிப்பைச் சமன் செய்யும். கை, கால் போன்ற தூரவெளி உறுப்புகளுக்குச் சூடு கொடுத்துக் காக்கும். சூரிய நமஸ்காரம் ஜீரண மண்டலத்திற்கு உயிரூட்டி ஆற்றலை அளிக்கின்றது. கல்லீரல், வயிறு, மண்ணீரல், குடல்கள் எல்லாம் கசக்கி கசக்கிப் பிடித்து விடுவது போன்று மசாஜ் செய்யப்படுகின்றன.

மலச்சிக்கல் பிரச்னை சரியாகிவிடுகிறது. பசியின்மை பறந்தோடுகின்றன.

சூரிய நமஸ்காரத்தில் உடல் அசைவுகளும் மூச்சு ஓட்டமும் இணக்கமாக நடைபெறுகின்றன. நுரையீரல்களில் காற்றோட்டம் தாராளமாகின்றது. இரத்தம் உயிர்க்காற்றால் நலம் பெறுகின்றது. ஏராளமான கரிசக்காற்றையும் பிற நச்சுப் பொருள்களையும் மூச்சு மண்டலத்திலிருந்து வெளியேற்றுவதன் மூலம் சூரிய நமஸ்காரம் உடலுக்குப் பெரும் நன்மை விளைவிக்கின்றது.

சிம்பதட்டிக், பாராசிம்பதட்டிக் நரம்புகளின் செயல்களை நெறிப்படுத்துவதன் மூலம் நல்ல ஓய்வுக்கும் உறக்கத்திற்கும் உதவுகின்றது. இதனால் நினைவாற்றல் அதிகரிக்கின்றது. பிற உயிரணுக்களைக் காட்டிலும் நரம்பு உயிரணுக்கள் மிக மிக தாமதமாகவே விழிப்புற்று உயிராற்றல் பெறுகின்றன. இருப்பினும் இடையறாத முறையான பயிற்சியாலும் சலிக்காத முயற்சியாலும் சிறுகச் சிறுக நரம்பு உயிரணுக்கள் தத்தம் சாதாரணக் காரியங்களைச் செய்யத்தக்க அளவில் வலுவடைகின்றன.

சூரிய நமஸ்காரத்தில் கழுத்து முன் பின் வளைகின்றது.இதனால்தைராயிட்,பாராதைராயிட் சுரப்பிகளுக்கு இரத்தம் கிடைக்கின்றது. அவை செயல்படுவதனால் எல்லா எண்டோக்கிரைன் சுரப்பிகளும் தமக்குரிய இயல்பான காரியங்களைச் செய்கின்றன. தோல் புத்துணர்வு பெற்றுப் பொலிவடைகின்றது. சூரிய நமஸ்காரத்தை முறைப்படி செய்யும் போது வியர்வை உண்டாகும். ஏராளமாக உடலில் உள்ள நச்சுப்பொருட்கள் தோலின் வழியே வெளியேறும். நன்றாக வியர்க்கும் வரை இப்பயிற்சி செய்வது நல்லதென சூரிய நமஸ்காரத்தைப் பிரபலப்படுத்திய அவுண்ட் அரசர் கூறுகின்றார். வியர்வை பத்துப் பதினைந்து நிமிடங்களிலேயே வெளிவருவதை அனுபவத்தில் அறியலாம். தோலின் மூலம் வியர்வை வெளிவரும் அளவுக்கு உடல்நலம் ஓங்கும்.

சூரிய நமஸ்காரத்தில் உடலில் உள்ள தசைகள் அனைத்தும் வலுவடைகின்றன. குறிப்பாக கழுத்து, தோள், கை, மணிக்கட்டு, வயிற்றுச்சுவர், தொடை, கெண்டைக்கால், கணுக்கால் முதலிய பகுதிகளில் தசைகள் பயிற்சியால் உரம் பெறுகின்றன. கொழுப்பால் வயிறு, தொடை, இடுப்பு, கழுத்து, நாடி முதலிய இடங்களில் உண்டாகும் மடிப்புகள் மறையும்.

தோல், நுரையீரல், குடல், சிறுநீரகம் முதலிய பகுதிகள் வழியே சரியாக மலம் (கழிவுப் பொருட்கள்) வெளியேறுவதால் உடலில் விரும்பத் தகாத துர்நாற்றம் ஏற்படுவதில்லை.

சூரிய நமஸ்காரத்தில் உடல் சரியான அளவில் அமையப் பெறுவதால் அது எந்த விளையாட்டுப் பயிற்சி வேலைகளுக்கும் எப்போதும் தயார் நிலையில் இருக்கும். இளமை, நலம், அழகு மூன்றும் ஒருங்கே அமைந்து உடலுக்கும் உயிருக்கும் அழியா இன்பத்தைக் கொடுக்க வல்லது.

பன்னிரண்டு யோகாசனங்கள் அடங்கிய ஒரு தொகுதி சூரிய நமஸ்காரம். அதனால் ஒட்டு மொத்த யோகாசனம் என்று இதனை சொல்லலாம். உடலில் பிடிப்பு வராமல் இருக்கவும், வாயுக்கள் சேராமல் இருக்கவும் உதவுகிறது இந்த சூரிய நமஸ்காரம். உடலை நல்ல வடிவத்தில் வைப்பதுடன் மனதையும் அமைதிப்படுத்தி, நலமுடன் வைக்கின்றது. அதிகாலையில் வெறும் வயிற்றுடன் சூரிய நமஸ்காரம் செய்வது சிறந்தது.

13

தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

THANK YOU

இத்தனை அற்புத மருத்துவ குணங்களை கொண்டுள்ளதா ஏலக்காய்!!

ஏலக்காய் சமையலில் வாசனைக்காக சேர்க்கப்படும் ஏலக்காய் அசைவ உணவுகளுக்கு கூடுதல் சுவை சேர்க்கக்கூடியது. ஏலக்காய் ஒரு மசாலா பொருளாக மட்டும் அல்லாமல் மூலிகை பொருளாகவும் பயன்படுகிறது.

ஏலக்காய் நமது உடல் மெட்டாபாலிசத்தை அதிகரித்து பித்த நீரை அதிகரித்து ஜீரண சக்தியை அதிகரிக்கிறது. எதுகளித்தல், வாய்வு தொல்லை போன்றவற்றை சரியாக்குகிறது.

ஏலக்காய் தண்ணீரைக் குடித்தால் வாய்வுத் தொல்லை உடனே நீங்கிவிடும். விக்கலை போக்க இரண்டு ஏலக்காய்களை நசுக்கி, அத்துடன் புதினா இலைகளை காய்ச்சி வடிகட்டி குடித்தாலே போதும்.

வெயிலில் அதிகம் அலைந்தால் உண்டாகும் தலைசுற்றலை போக்க நான்கைந்து ஏலக்காய்களை கஷாயமாகக் காய்ச்சி, அதில் சிறிது பனைவெல்லம் போட்டு குடித்தால் உடனே நீங்கும்.

வெயிலில் அதிகம் வியர்ப்பதால் ஏற்படும் தலைவலி, வாந்தி, குமட்டல், நீர்ச்சுருக்கு, மார்புச்சளி, செரிமானக் கோளாறு ஆகிய பிரச்சினைகளுக்கு ஏலக்காயை வாயில் போட்டு மென்றாலே போதும்.

மன அழுத்தப் பிரச்சினை உள்ளவர்கள், 'ஏலக்காய் டீ' குடித்தால் இயல்பு நிலைக்கு வருவார்கள். டீத் தூள் குறைவாகவும், ஏலக்காய் அதிகமாகவும் சேர்த்து டீ தயாரிக்கலாம்.

நான்கைந்து ஏலக்காய்களை நெருப்பில் போட்டு, அந்தப் புகையை குழந்தைகள் சுவாசித்தாலே மூக்கடைப்பு உடனே திறந்து கொள்ளும்.

பச்சை ஏலக்காய் விட கருப்பு ஏலக்காய் மிகவும் சிறந்தது. ஏலக்காய் உங்கள் உடலில் தங்கியுள்ள கொழுப்பை கரைக்கிறது. மேலும் இரத்த அழுத்தத்தை குறைக்கிறது.

'ஏலக்காய்' ஆறாத குடற்புண்ணை ஆற்றுமா?

காலையில் தூங்கி எழுந்தவுடன் காலை கடன்களை முடிப்பவர்களை விட, வெறும் வயிற்றில் மாத்திரை போடும் நபர்கள் தான் அதிகம். தைராய்டு மாத்திரை ஒரு கையை ஆக்கரமித்து இருக்க, மற்றொரு கையை ஆக்கரமித்து இருப்பது அல்சர் (வயிறு புண்), கேஸ் ட்ரபுள் மாத்திரைகள் தான்.

'டாக்டர் நான் வயிற்று புண்ணுக்கும், வாயு தொல்லைக்கும் பல வருஷமா மாத்திரை சாப்பிடுறேன்' என்று பக்க விளைவுகள் தெரியாமல் பரிதாபமாக பலர் சுய மருத்துவம் மேற்கொள்வது பல்வேறு உடல் உபாதைகளை விளைவிக்கும். பிபிஐ (றிறிமி) வகை சார்ந்த மருந்துகளாகிய ஓமீபிரசோல் போன்றவற்றை எடுத்துக்கொள்ளும்போது சிறுநீரக செயல்பாட்டினை பாதிக்கும் என்ற சமீபத்திய ஆய்வுகள் அதிர்ச்சி அளிக்கும் விதத்தில் உள்ளன.

எளிய பல சித்த மருத்துவ மூலிகைகள்

மருத்துவர்
சோ.தில்லைவாணன்

இத்தகைய வாயு தொல்லைக்கும், முக்கியமாக வயிற்றுபுண்ணுக்கும் நிரந்தர தீர்வு தருவதாக உள்ளன. அதில் ஒன்று தான் நாம் உணவில் அதிகம் பயன்படுத்தும் 'ஏலக்காய்'.

மணமூட்டிகள்தான், நம் ஆரோக்கியமான வாழ்க்கையின் அஸ்திவாரங்கள். இதை அறிந்து கொண்ட ஆங்கிலேயர்கள் மணமூட்டிகளுக்காக நம் நாட்டை நாடி வந்து, அவற்றிற்கு அடிமையாகி நம்மை ஆள துவங்கிவிட்ட வரலாறு அனைவரும் அறிவர். அத்தகைய சிறப்பு வாய்ந்த



மணமூட்டிகளின் ராணி எது தெரியுமா? ஆம். இந்த ஏலக்காய் தான்.

சித்த மருத்துவத்தில் பித்தத்தை குறைக்கும் பல்வேறு மருந்துகளிலும், சீரணத்தை சீராக்கும் பல்வேறு மருந்துகளிலும் ஏல அரிசி சேர்வது சிறப்பு. ஏலக்காய் மேல்தோலில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. மருத்துவ குணம் அதில் உள்ள அரிசியில் அதாவது விதையில் தான் அதிகம்.

கருப்பு நிறம், பழுப்பு நிறம், பச்சை நிறம் என்று பல நிறங்களில் ஏலக்காய் காணப்பட்டாலும், அதன் மருத்துவ குணங்கள் பச்சை நிற ஏலக்காயில் தான் அதிகம். அதில் கிட்டத்தட்ட 25—க்கும் மேற்பட்ட நறுமண எண்ணெய் வகைகள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இவைதான் இதன் மணத்திற்கும்,மருத்துவ குணத்திற்கும் காரணம். அதில் முக்கிய மருத்துவ குணம் வாய்ந்த நறுமண எண்ணெய், 'சினியோல்' என்ற வேதிப்பொருள் தான். இது ஆன்டி—ஆக்ஸிடன்ட் தன்மை வாய்ந்தது.

'உள்அண்டை ஈளை வன்பித்தம் இவைக்கெல்லாம் ஆலமாங்கமழ் ஏல மருந்ததே' என்ற தேரையர் குணவாகடப்பாடல் மூலம், ஏலம் பித்தத்தை குறைக்கும் தன்மையுடையதாக

அறியப்படுகிறது.

“டாக்டர் ராத்திரி எண்ணெய் பொருள் சாப்பிட்டால் செரிக்கமாட்டேங்குது, வாய்குமட்டல், சமயத்தில் வாந்தி வருது”, என்று தொடர்ந்து அசீரண வாயுவால் அவதிப்படுபவர்களுக்கு அல்சர் (குடல் புண்) உறுதியாக வரும் என்பதை, ‘தொடர் வாதபந்தமலாது குன்மம் வராது’ என்று தேரையர் சித்தரின் பிணிகளுக்கான முதல் காரணம் மூலம் அறியலாம். அவர்கள் ‘ஏலாதி சூரணம்’ என்ற சித்த மருந்தினை பயன்படுத்த நல்ல பலன் தரும்.

ஏலாதி சூரணம் எனும் சித்த மருந்தில் ஏல அரிசி, கிராம்பு, லவங்கப்பட்டை, மிளகு,சுக்கு, தாளிசபத்திரி, ஆரோ ரூட் மாவு போன்ற எளிய மூலிகைகள் மட்டுமே சேருவதால், நாட்பட்ட குடல்புண் (கிரானிக் காஸ்டரைட்டிஸ்) உள்ளவர்களுக்கும் நன்மையை பயக்கும். வயிறு எரிச்சல், அசீரணம், வாந்தி, வாய்க்குமட்டல் உள்ளவர்கள் அவ்வப்போது இந்த மாத்திரையை அல்லது ஏலக்காயை வாயிலிட்டு சுவைத்தாலும் நன்மை தரும். அடிக்கடி ஏலக்காய் உணவில் சேர்த்துக்கொள்ள குடல்புண் ஏற்படாமல் தடுக்கும் தன்மையும், வயிறு குடல் பகுதியில் உள்ள சவ்வினை பாதுகாக்கும் தன்மையும் உடையது.

வாய் துர்நாற்றத்தால் பிறரிடம் பேசக்கூட தயக்கப்படும் பலரும் ஏலக்காய் வாயிலிட்டு மென்று வர நல்ல பலன் தரும். இது வாய் துர்நாற்றத்திற்க்கு காரணமான பாக்டீரியாக்களை கொல்லும் தன்மையும் உடையது.

குடல் புண்ணால் அவதிப்படும் பலரும் டீ, காபிக்கு பதிலாக ஏலக்காய், சீரகம் இவற்றை லேசாக வறுத்து தூளாக்கி பாலில் கலந்து எடுத்துக்கொள்ள குடல்புண்ணை ஆற்றும். சீரணத்தை தூண்டி மலச்சிக்கலை தீர்க்கும். அதிகரித்த பித்தம் தன்னிலைக்கு திரும்பும். மேலும் இந்த இரண்டு மூலிகைக்கும் ஆன்டி ஆக்ஸிடன்ட் தன்மை இருப்பதால் குடல் சார்ந்த புற்றுநோய் வரை வரவிடாமல் தடுக்கும். அல்சர் நோயால் வயிற்றுவலியால் அவதியுறும் நபர்கள், ஏலக்காய், சீரகம், ஓமம் சேர்த்து கஷாயமாக்கி எடுக்க வலியை குறைக்கும்.

‘பஞ்ச தீபாக்கினி சூரணம்’ எனும் செரிமானத்தை தூண்டும் மருந்திலும் ஏலக்காய் சேருகிறது. மேலும் ஏலக்காயில் நோய் எதிர்ப்புசக்தியை அதிகரிக்கும் வைட்டமின்— சி யும், அன்றாட வாழ்விற்கு தேவைப்படும் கால்சியம், மெக்னீசியம், பாஸ்பரஸ், இரும்புசத்து, பொட்டாசியம், சல்பர் போன்ற கனிம உப்புக்களும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

ஏலக்காய் வாசனை பொருளாக பார்க்கப்படும் நிலையில், அதில் பல இயற்கை நன்மைகள் உள்ளன. நன்மைகளை பற்றி இங்கு காண்போம்...

1 ரத்தத்தில் இருக்கும் சர்க்கரையின் அளவையும் கட்டுப்படுத்தும். ஆஸ்துமா நோயாளி களுக்கும் ஏற்றது. சுவாச கோளாறுகளை போக்கும் சக்தியும் ஏலக்காய்க்கு உள்ளது.

2 வாகனங்களில் பயணிக்கும்போது தலைசுற்றல், வாந்தி, மயக்கம் போன்றவை ஏற்படுபவர்கள் இரண்டு ஏலக்காயை வாயில் போட்டு மென்று கொண்டிருந்தால் இந்த தொல்லை ஏதும் ஏற்படாது.

3 ஏலக்காய் வாய் சுகாதாரத்திற்கும், வாய் ஆரோக்கியத்திற்கும் ஏற்றது. பல் வலி, ஈறுகளில் ஏற்படும் வீக்கத்தை கட்டுப்படுத்தலாம்.

4 சூயிங்கம், சிக்லெட், சாக்லேட் என எதையாவது வாயில் போட்டு அசை போடுவதால் எந்தப் பலனும் இல்லை. அதற்குப் பதிலாக ஏலக்காயை வாயில் போட்டு மென்று சாப்பிடுவது நல்லது.

5 ஜலதோஷம், இருமல், தொடர்ச்சியான தும்மலால் அவதிப்படுகிறவர்கள் ஏலக்காய் கஷாயம் பருகவேண்டும்.

6 ஏலக்காயில் தயாரிக்கப்படும் எண்ணெய் சரும நலனுக்கு ஏற்றது. குழந்தைகளுக்கு மசாஜ் செய்யும் எண்ணெய்யில் சிறிதளவு கலந்து பயன்படுத்தலாம்.

7 அஜீரணத்தால் அவதிப்படுகிறவர்கள் ஏலக்காயை மிளகுடன் சேர்த்து நெய்யில் வறுத்து பொடி செய்து சாப்பிடலாம். ஏலக்காயில் உள்ள ஆன்டி ஆக்சிடென்ட் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

8 பசியே ஏற்படுவதில்லை, சாப்பிட பிடிக்கவில்லை என்று கூறுபவர்கள், தினமும் ஒரு ஏலக்காயை வாயில் போட்டு மென்றால், பசி எடுக்கும். ஜீரண உறுப்புகள் சீராக இயங்கும்.

9 நெஞ்சில் சளி கட்டிக் கொண்டு மூச்சு விட சிரமப்படுபவர்களும், சளியால் இருமல் வந்து, அடிக்கடி இருமி வயிற்றுவலி வந்தவர்களுக்கும் கூட ஏலக்காய் நல்ல மருந்தாக அமையும்.

ஆகவே ஏலக்காய் சேர்ந்த டீ, பாயசம் போன்ற உணவு பொருள்களை வெறும் மணமூட்டும் உணவாக மட்டும் பார்க்காமல், மருத்துவ குணமாகவும் பார்த்து பயன்படுத்த துவங்கினால், நம் பாரம்பரியத்தின் அருமை விளங்கிடும். சித்த மருத்துவத்தின் பலனும் கிடைத்திடும்.

தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
CELEBRATING
13
ANNIVERSARY
THANK
YOU

கினம்

கோபம் ஒரு சங்கிலித் தொடர்

சிரிப்பு, துயரம், அருவருப்பு, வியப்பு, பயம், பெருமை, கோபம், இன்பம் என்பன எண் வகை மெய்ப்பாடுகளாகும். மெய்யில் (உடலில்) தென்படுவது மெய்ப்பாடு. அதாவது, மனித உள்ளத்தின் உணர்ச்சிகள் உடலில் தென்படுவது மெய்ப்பாடு என்று பொருள். தொல்காப்பியம் உரைக்கும் எட்டு வகை மெய்ப்பாடுகளில் ஏழாவதாக சுட்டும் கோபத்தால் மனித குலம் இன்று பல பிரச்சினைகளை எதிர்கொண்டு, இறுதியில் தன்னைத் தானே அழித்துக் கொள்கிறது. உலக மக்களிடையே நிலவும் ஒற்றுமையின்மைக்கும் பெரும்பாலான பிரச்சினைகளுக்கும், தீமைகளுக்கும், வன்முறைகளுக்கும் கோபமே காரணமாக உள்ளன.

உள்ளத்தின் உணர்ச்சி கொந்தளிப்பின் வெளிப்பாடாக ஒருவருக்கு கோபம் ஏற்படுகிறது. வெறுப்பு, நம்பிக்கையின்மை, பயம், அறியாமை, பொறாமை, ஆணவம், அகங்காரம் முதலியவை கோபம் உருவாகக் காரணமாகிறது. பிறர் மீது ஒருவர் காட்டும் கோபம் தற்கொலையாகவோ, கொலையாகவோ கூட முடியலாம். அதுமட்டுமல்ல மனிதர்களிடையே தீராப் பகையைக்கூட உருவாக்கும்.

கணவன், மனைவி மீது கொள்ளும் கோபம் இறுதியில் மணமுறிவு வரை, அதையும் மீறி இன்று கொலையில் முடிகிறது. குடும்பத்தினரிடையே ஏற்படும் கோபம் குடும்பத்தின் அமைதி, நிம்மதி, மகிழ்ச்சியைக் கெடுக்கும். குழந்தைகளிடையே பெற்றோர் காட்டும் கோபம் அவர்களை அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும்.

கோபத்தினால், பிறர் செய்த தவறுக்காக நமக்கு நாமே தண்டனை கொடுத்துக் கொள்கிறோம். நண்பர்களுக்கிடையேயான சண்டை, இரு பிரிவினர்களிடையே மோதல், கலவரம், பழிவாங்கும் உணர்வு, கொலை, ஆயுள் வரை பகை, போர் எல்லாம் கோபத்தின் வெளிபாடுகளே.

இராமகிருஷ்ண பரமஹம்சர், கோபம் ஒரு குறுகிய காலப் பைத்தியகாரத்தனம், அதை நீ கட்டுப்படுத்தாவிடில் அது உன்னைக் கட்டுப்படுத்திவிடும் என்கிறார். ஒரு கணநேரம் கோபத்தை அடக்கி வைப்பவன் ஒரு நாளின் துயரத்தை அடக்கியவனாவான். கோபம் நல்லவர்களைக்கூட குற்றவாளிகளாக்கும்.

கோபப்படும் மனிதால் அதிக அளவு சிறப்பாக வேலைகள் செய்ய முடியாது. அமைதியான, மன்னிக்கக் கூடிய சம நோக்குடைய நிலைக்குலையாத மனமுடையவனே அதிக அளவு சிறப்பாக செயலாற்ற முடியும்"என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

சேர்ந்தாரைப் பிரிக்கும் தீய குணங்களில் உயர்ந்து குன்றாய் நிற்பது கோபம். பிறரை வீழ்த்துபவன் வீரனல்ல, கோபம் ஏற்படும் போது தன்னை அடக்கி ஆளுபவனே வீரன். எண்ணி இலட்சியத்தை அடைய விலக்க வேண்டியது கோபம். தன்னைக் காத்து தரணியில் உயர உழைப்பவன் அயராது

தவிர்ப்போம்

கோபத்தை அடக்க வேண்டும். சிறிய தீப்பொறி பெரிதாகி பெருங்காட்டை அழிப்பது போல, ஒருவரின் சிறு கோபம் சமூகத்தை அழிக்கும் வல்லமை படைத்தது. அதாவது, பிறர் செய்த தவறுக்காக நமக்கு நாமே கொடுக்கும் தண்டனை தான் கோபம்.

சமைக்கும் உணவில் முறை மாறியமையும் போது அமிழ்தமும் நஞ்சாகிறது. மனித மனமும் அமிழ்த சொரூபம். அது கோபம் கொள்ளும் போது நஞ்சாக மாறுகிறது. ஒருவர் கோபத்தில் இருக்கும் போது எண்ணுகிற எண்ணம் கொடியது. மேலும், உடல் முழுவதும் அப்போது கொடியதாகிறது. உண்ணுகிற உணவும் நஞ்சாகிறது. தற்காலிகமாக அமையும் பைத்தியம் எனப்படுகிறது கோபம். எனவேதான், திருவள்ளுவரும்,"நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் பகையும் உளவோ பிற என்கிறார்.

மனிதன் எத்தனை செல்வம் பெற்றிருந்தாலும், ஞானம், அறிவு, கலைகளில் மேன்மை இருந்தாலும், தன்னிடம் கோபம் எனும் கொடிய மிருகத்தை அவன் தலைதூக்க விட்டால் அவனிடமிருந்து அனைத்து



பாறப்புறத் இராதாகிருஷ்ணன்

செல்வமும், செல்வாக்கும், நட்புகளும், உறவுகளும், உற்சாகமும், மகிழ்ச்சியும் மறைந்தோடிவிடும். பெற்றோர், தங்கள் பிள்ளைகளுக்கு இளைய பருவத்திலேயே கோபத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை கற்றுத்தர வேண்டும்.

ஒரு இளைஞன் அதிகமாக கோபம் கொள்பவனாக இருந்தான். எதற்கெடுத்தாலும் பட்டென கோபம் கொள்வான். இதனால் அவன் அனைவரிடமும் கெட்டப் பெயரையே சம்பாதித்தான். அதைக் கண்டு வருந்திய அவனது தந்தை, அவனிடம் ஒரு சுத்தியலும், நிறைய ஆணிகளையும் கொடுத்து, இனிமேல் உனக்கு கோபம் வரும் போதெல்லாம் வீட்டின் கொல்லைப்புறத்திள்ள காய்ந்த மரத்தில் இந்த ஆணிகளை அடி என்று கூறினார்.

முதல் நாள் பத்து ஆணி, மறு நாள் ஏழு, பின் ஐந்து, இரண்டு என படிப்படியாக ஆணி குறைந்தது. ஒரு நாள் ஒரே ஒரு ஆணிதான் அடித்தான். மற்றொரு நாள் எவ்வித ஆணியும் அடிக்கவில்லை. மொத்தமாக ஐம்பது ஆணிகள் வரை அடித்து இருந்தான். அவன் தன் தந்தையிடம், "இனி கோபம் எனக்கு வராது" என்று கூறினான்."இனிமேல் கோபம் வராத நாளில் நீ ஒவ்வொரு ஆணியாகப் பிடிங்கி விடு!" என்றார். அதை ஏற்று, அவன் தன் தந்தையிடம், ஐம்பது அடித்த ஆணிகளையும் பிடுங்கி விட்டேன் என பெருமையுடன் தந்தையை அழைத்துக் காட்டினான்.

உடனே தந்தை சொன்னார், ஆணிகளை பிடுங்கி விட்டாய், அதனால் மரத்தில் ஏற்பட்ட துளைகளை என்ன செய்வாய்? உன் கோபம் இதுபோல பலரை காயப்படுத்தியிருக்குமல்லவா? நீ பிறரிடம் காட்டிய கோபம் அவர்களை காயப்படுத்தியிருக்கும்,

அவர்கள் உன்னை மன்னித்தாலும், அந்த ரணம் ஆறாது என்பதை மறந்து விடாதே. எனவே, யாரிடமும் கோபம் கொள்ளாதே என்றார்.

உணர்வுகள், மனித வாழ்வின் ஓர் அங்கம். அதிலும், விலங்குகளிடமிருந்து மனிதர்களைப் பிரித்துக் காட்டக்கூடிய சிறப்பான அம்சம். 'எங்க வீட்ல.. அவருக்குக் கோபம் வந்துச்சு... கையில கிடைக்கறதைத் தூக்கிப் போட்டு உடைப்பாரு' எனப் பல பெண்கள் பெருமையாகச் சொல்வதைக் கேட்டிருப்போம். ஆனால் இந்தச் செயல், பலவீனத்தின் வெளிப்பாடு. தன்னை மீறி, தன் உணர்வுகளை வன்முறை முறையில் வெளிப்படுத்துதல் என்பது பலவீனத்தின் உச்சம். ஆனால், இது தெரியாமல், அறியாமல் அதிகக் கோபம் வருவதால், தான் ஹீரோ என்றும் பலசாலி என்றும் தங்களைத் தாங்களே நினைத்துக்கொள்வார்கள் சிலர். உண்மையில், அவசியம் கவனிக்கப்படவேண்டிய பிரச்னைகளில் கோபமும் ஒன்று.

கோபத்தை ஆக்கப்பூர்வமாக எப்படி மாற்ற முடியும்... இதை எப்படிக் கையாள்வது... யாருக்கும் எந்தப் பாதிப்பும் இல்லாமல் எப்படிக் கட்டுப்படுத்துவது?

* கோபம் வரும்போது உங்கள் உணர்வு எப்படி இருக்கிறது என்பதை முதலில் கவனியுங்கள். இதயத்துடிப்பு அதிகமாவது, நகங்களைக் கடிப்பது, வேகமாக சுவாசிப்பது, பற்களைக் கடிப்பது, கைகளை இறுகப் பிடிப்பது இவற்றில் ஏதேனும் சிலவற்றை நீங்கள் செய்துகொண்டிருந்தால், உடனடியாக உங்கள் மனதைச் சாந்தப்படுத்துங்கள். இதுபோன்ற செய்கைகளில் நீங்கள் ஈடுபடும்போது, உங்களுக்கு நீங்களே `அமைதியாக இரு... பொறுமையுடன் இரு... சாந்தமாக இரு' எனத் தொடர்ந்து சொல்லுங்கள். இவை எல்லாம் தற்காலிகமாக உங்கள் கோபத்தைத் தள்ளிப்போட உதவும்.

* சுவாசிப்பதில் கவனம் செலுத்தலாம். உதாரணமாக, ஒன்று முதல் ஆறு வரை மனதில் எண்ணிக்கொண்டே மெதுவாக மூச்சை உள்ளிழுங்கள். பின்னர், அதேபோல ஒன்று முதல் ஏழு வரை எண்ணிக்கொண்டே மூச்சை அடக்க முயற்சி செய்யுங்கள். இறுதியாக, மனதில் ஒன்று முதல் எட்டு வரை எண்ணிக்கொண்டு மூச்சை மெதுவாக வெளியே விடுங்கள். இப்படி பத்து முறை செய்து பாருங்கள்... கோபம் மட்டுமல்லாமல், பதற்றமும் பயமும்கூடக் குறைந்துவிடும்.

* அதிகமாகக் கோபப்படுபவர்கள், வேகமாக நடைப்பயிற்சி அல்லது ஜாகிங் செய்யலாம். இதனால் ரத்த அழுத்தம் கட்டுக்குள் இருக்கும். அதோடு, மார்ஷியல் ஆர்ட்ஸ் வகுப்பில் சேர்ந்து அந்தக் கலையை கற்றுக்கொள்வது நல்லது. இதுபோன்ற பயிற்சிகளின்போது நிதானமாக இருப்பது எப்படி என்பதையும் சேர்த்துக் கற்றுத்தருவார்கள். `எதற்கு கோபம் வரணும், வரக்கூடாதே...' என்ற புரிதல் கிடைக்கும். இந்தக் கலைகளைக் கற்றவர்கள் பொறுமைசாலிகளாகவும் மாறுவார்கள். இதனால், கோபம் வெகுவாகக் குறையும்.

கோபத்தை கட்டுப்படுத்துபவன், இந்த சமுதாயத்திற்கு நல்லது செய்பவனாகிறான். கோபம் மனிதனின் நல்ல குணத்தையும் அழித்து விடும். ஒருவர் எத்தகைய ஆற்றலை பெற்றிருப்பினும், தன்னைக் காக்க கோபத்தை ஆயுதமாக கொள்வானாயின், அதுவே அவனை அழித்து விடும். புன்னகை ஒரு தொற்று நோய் என்றால், கோபம் ஒரு சங்கிலித் தொடர். அதன் கண்ணியை உடைப்பதென்பது அவ்வளவு சுலபமானது அல்ல. கோபத்தை விட்டொழித்து உலகில் மிகவும் தெய்வீகமானதும், மிகவும் உன்னதமானதுமான அன்பையும், இரக்கத்தையும் அனைவரிடமும் பரப்புவோம்.

தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

13 YEARS ANNIVERSARY

Thank You All

தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு







அடியெடுத்து வைத்த
ஒவ்வொரு ஆண்டிலும்...





March 2016
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
7


March 2017
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
8


March 2018
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
9
வீரத்தாய் வள்ளல்


March 2019
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
10

March 2021
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
12
12
தமிழ்
THANK YOU

தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
11

தமிழ் 2022

நற்றமிழரின் நாடித்துடிப்பு

JANUARY

FEBRUARY

MARCH

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30	31			

APRIL

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	

MAY

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
						1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29
30	31					

JUNE

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30			

JULY

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

AUGUST

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

SEPTEMBER

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30		

OCTOBER

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30
31						

NOVEMBER

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30				

DECEMBER

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com

Email: editor@ithamil.com

தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
CELEBRATING
13
ANNIVERSARY
THANK
YOU